MR. SPEAKER :—" The question is—

' That the following draft of a rule proposed to be made by the Government of Madras under section 4 (2) of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 (Madras Act XVI of 1952), amending the Schedule to the said Act, be approved :—

DRAFT RULE.

In the said Schedule, for sub-rule (3) of rule 1, the following sub-rule shall be substituted, namely :—

" (3) For the quarters ending with the 31st December 1953 and the 31st March 1954, the amount of the composition fee calculated with reference to clause (*a*) or clause (*b*) of sub-rule (1) in respect of stage carriages and public carrier vehicles, which until the 30th September 1953 were plying on routes which have become inter-State routes as a result of the formation of the Andhra State with effect from the 1st October 1953, shall be payable at the same rates at which and at the same places where it was being paid for the quarter ending with the 30th Septembtr 1953." ' "

The motion was put and carried.

MR. SPEAKER :—" The Hon. the Minister for Local Administration may now move his motion."

IX.—GOVERNMENT BILL.

THE MADRAS DISTRICT BOARDS (AMENDMENT) BILL, 1954 (L.C. BILL NO. 4 OF 1954) (AS PASSED BY THE COUNCIL).

SRI K. P. GOPALAN :—" Sir, I think the Hon. the Minister for Local Administration is going to move the District Boards (Amendment) Bill. Regarding that Bill, I want to raise a point of order and say that the Bill cannot be moved."

MR. SPEAKER :—" Is the hon. Member saying that the Bill cannot be moved here? "

SRI K. P. GOPALAN :—" Yes, Sir. On a former occasion, the term of the District Boards was extended by one year. Again, another Resolution was passed by this House for appointing Special Officers. At that time, the Hon. the Chief Minister said that before March 31st, elections would take place. What I wish to bring to the notice of this Hon. House is that when once this Assembly passes a Resolution on a particular subject, it is the decision of this Assembly."

MR. SPEAKER :—" Is the hon. Member arguing that this Assembly cannot change its decision? "

SRI K. P. GOPALAN :—" Sir, may I submit that Article 164 (2) of the Constitution of India says that ' the Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the

State.' When the Assembly passes a Resolution, it is a mandate to the Hon. Ministers who should carry out that mandate. My contention is that this Bill cannot be taken up now as the Ministry by not conducting elections to the District Boards, has not only violated the decision of the Assembly but also violated the privileges of the hon. Members of this House. For these reasons I object to the taking up of this Bill and say that the Hon. the Minister should not move the Bill now."

MR. SPEAKER :—" I cannot understand this objection by any stretch of imagination, that once the House has passed a resolution or given a verdict, it cannot change it again. I do not think so. The House is a Sovereign body. It can pass a Bill to-day and tomorrow it can bring another Bill to nullify it." 8-10 p.m.

SRI K. P. GOPALAN :—" Sir, this is the second time that this matter has been brought before the House. Is it possible to bring the same subject again and again? "

MR. SPEAKER :—" I can give any number of instances. The House has power to change its own decision. This is only the second time. The Hon. Minister can bring forward such a Bill a hundred times."

* THE HON. SRI K. RAJARAM :—" I beg to move—

'*That the Madras District Boards (Amendment) Bill*, 1954, (*L.C. Bill No.* 4 *of* 1954), *as passed by the Legislative Council and transmitted to the Legislative Assembly, be taken into consideration at once.*'

The Madras District Boards (Amendment) Act, 1953 (Madras Act V of 1953) was enacted with a view to provide for the appointment of Special Officers to District Boards from the 1st July 1953, the date of expiry of the term of office of members of District Boards. It was then intended that elections to District Boards should be completed by the 1st April 1954 so that the new members might come into office on or before that date. After the formation of the Andhra State, a scheme for the decentralization of the functions of the District Boards has been under consideration and pending a decision on that scheme, arrangements for the conduct of elections to District Boards could not be taken up. The Government proposes to set up a high level committee to go into the question of reorganisation of local bodies and a comprehensive legislation will be introduced in due course, after examining the Committee's recommendations.

" I would like to mention briefly the reasons for the proposal of the Government to abolish District Boards. With the coming into force of the Madras Village Panchayats Act, 1950, the Panchayats were removed from the control of District Boards. This entailed a readjustment of the functions performed by the District Boards. The activities of the District Boards are now practically

confined to non-Panchayat areas, except in regard to Education, Medical relief, and Public Health which extend over Panchayat areas also. The District Boards have too large an area to administer. There has been a growing feeling that they are unable to attend to the development of rural areas in an effective manner from the district headquarters. It is therefore considered very desirable to decentralize the functions of District Boards and replace these bodies by smaller and potent administrative units, namely, Local Boards for taluks which can be more clorely in touch with the people in their respective areas and which can cater to their needs in an effective manner. The scheme will have the advantage of not only providing better administration for rural areas not served by Panchayats, but associating a large number of non officials in local administration.

"As the legislation and the administrative arrangements necessary for bringing the new local boards into existence will take some appreciable time, it has been decided that elections to district boards should be proceeded with, and that the district boards should continue to function after the elections until the new local boards are set up. In view of the work in the Assembly in connection with the New Year's Budget, and the time required to complete the elections to district boards, it has been decided that the term of the Special Officers who are now in charge of district boards and whose term of office will expire on 1st April 1954, should be extended further. The Bill makes the necessary provision for this purpose. When the Bill was taken up for consideration in the Legislative Council, an amendment was moved by one member to the effect that the term of the Special Officers may be extended up to 31st October 1954, mainly with a view to facilitate the conduct of elections to the district boards in the West Coast and the Nilgiris, after the monsoon was over. This amendment has been accepted by the Government.

"I wish to make the position of the Government clear in regard to the acceptance of the amendment in order to remove the misapprehension felt by some members that the term of office of the Special Officers has been prolonged unnecessarily. I may say here and now that the extension of the term up to 31st October 1954 is only the outside limit and it is intended that where elections are completed earlier, the elected boards should be brought into being at once, instead of waiting till 1st November 1954. As I have said in the other House, arrangements are already in full swing for the conduct of elections and the election proceedings will be started by about the middle of May 1954. Only in South Kanara, Malabar and the Nilgiris districts, will elections be held in September-October 1954. It is the intention of Government that the administration of district boards by Special Officers should be replaced by elected boards as quickly as possible.

27th March 1954] [Sri K. Rajaram]

"I therefore commend the Madras District Board (Amendment) Bill, 1954 as passed by the Legislative Council to the unanimous acceptance of the House."

MR. SPEAKER :—" Motion moved—

'That the Madras District Boards (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 4 of 1954), as passed by the Legislative Council and transmitted to the Legislative Assembly be taken into consideration at once.'

The hon. Member, Sri M. Kalyanasundram, may move his amendment."

* SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய திருத்தத்தைப் பிரேரிக்கிறேன். விவாதம் நடக்கட்டும். நான் கடைசியில் இந்தத் திருத்தத்தைப் பிரேரித்ததற்கான காரணத்தை விளக்கிப் பேசுகிறேன். என்னுடைய திருத்தம் அடியில் வருமாறு இருக்கிறது.

'That the Madras District Boards (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 4 of 1954), as passed by the Legislative Council, be referred to a Select Committee.'"

SRI K. P. GOPALAN :—" I second the amendment."

MR. SPEAKER :—" The motion as well as the amendment of Sri Kalyanasundram is before the House for discussion."

SRI P. B. K. RAJACHIDAMBARAM :—" தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக நான் எதிர்பார்த்திருந்த இந்த மசோதாவானது இன்றைக்குத்தான் விவாதத்திற்கு வந்திருக்கிறது. அதுவும் ஒரு நள்ளிரவில், வெகு அவசரமாக இன்னும் சில மணி நேரத்திற்குள் இது சட்டமாகச் செய்யப்படவேண்டுமென்றும், இல்லாவிட்டால் நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகம் சீர்குலைந்து போகுமென்ற நிலைமையில் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை பிரேரித்திருக்கிறார்கள். இந்த மசோதாவைப் பிரேரித்து அவர் பேசிய போது, நான் இந்த மசோதாவை எதிர்த்து இது அவசியமற்றது என்று எடுத்துக்காட்ட என்னென்ன விஷயங்களை எல்லாம் சொல்லவேண்டுமென்று எண்ணினேனோ, அதே விஷயங்களைத்தான் அவர் குறிப்பிட்டார். 8-17 p.m.

" நான் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மசோதாவுக்கு ஒரு சிறிய உதாரணத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மனிதனுக்கு ஒரு நீதி ஸ்தலம் தூக்கு தண்டனை விதிக்கிறது. ஆனால் தூக்கு தண்டனை என்றைக்கு நிறைவேற்றப்படவேண்டுமென்று நாள் நிர்ணயம் செய்யப்படவில்லை. தூக்கு தண்டனை விதிக்கப்பெற்ற அந்த மனிதன் கலியாணமாகாதவன். ஆகவே அந்த ஊர் ஜனங்கள் தூக்கு தண்டனை விதிக்கப்பெற்றவனிடம் அனுதாபம் கொண்டு, தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும்முன் அவனுக்கு ஒரு கலியாணம் செய்து வைத்துப் பார்த்துக் களிக்க விரும்பினார்கள் என்றால் அதைக் கண்டு நாம் ஆனந்தப் படுவோமா, அல்லது அனுதாபப் படுவோமா என்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள். அதைப் போலவே 'ஜில்லா போர்டுகள் அவசியம் இல்லாத ஸ்தாபனங்கள். அவைகளைக் கலைத்து அதற்குப் பதில் தாலூக்கா போர்டுகள் அமைக்கவேண்டும். பஞ்சாயத்துச் சட்டம் வந்த பிறகு ஜில்லா போர்டுகளை வைத்திருப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது. ஆகையால் ஜில்லா போர்டுகளைக் கலைக்க அரசாங்கம் முடிவு செய்துவிட்டது. ஜில்லா போர்டுகளை சவமாக்கப் போவதால் அதற்குப் பதில் தாலுக்கா போர்டுகளை அமைக்கவும் பல சர்ச்சைகள் நடந்து முடிவு செய்யப்பட்டுவிட்டது.

[Sri P. B. K. Rajachidambaram] [27th March 1954

அதை எப்படி அமைப்பது என்கின்ற விஷயங்களைப்பற்றி ஒரு விபரம் தயார் செய்ய பல நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைக்கப் போகிறோம்,' என்றெல்லாம் சொல்லிவிட்டு அதே சமயத்தில், 'அப்படி இன்னும் சிறிது காலத்திற்கே உயிரோடு இருக்கப் போகின்ற ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும்,' என்று அரசாங்கத்தார் சொல்வது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

(At this stage, the temporary Chairman Sri V. Balakrishnan took the Chair.)

"ஒன்று அரசாங்கம், ஜில்லா போர்டுகள் தேவை என்று கருதினால் தேர்தலை நடத்தலாம். அல்லது அரசாங்கம், ஜில்லா போர்டுகளே அவசியம் இல்லையென்ற ஒரு முடிவுக்கு வந்திருக்குமானால் அதற்கென இப்பொழுது தேர்தல் நடத்தியாக வேண்டுமென்ற அவசியம் என்னவென்பதை கனம் அமைச்சர் அவர்கள் சபைக்குச் சொல்ல மறந்துவிட்டார்கள் போலும்! ஒன்று மட்டும் நான் கேட்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்லலாம், 'இந்த விசேஷ அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் ஸ்தல ஸ்தாபன நிர்வாக அதிகாரத்தை நீண்டநாள் விட்டுவைக்க அரசாங்கம் விரும்பவில்லை, ஜனநாயக முறைக்கு விரோதமாக,' என்று. ஆனால் கடந்த ஒன்பது மாத காலமாக ஜனநாயகம் இந்த நாட்டில் இல்லாமல் போய்விட்டதோ என்று எண்ணக்கூடிய வகையில் விசேஷ அதிகாரிகளின் கையில் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தை ஒப்படைத்திருக்கிறார்களே, அப்பொழுது ஜனநாயகத்தைப்பற்றிய நினைவே இவர்களுக்கு இல்லையா, என்று அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். இந்த ஒன்பது மாத காலமாக மக்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல், அரசாங்கத்தின் சிப்பந்திகளான ஜில்லாக் கலெக்டராலும், அவர்களுக்குக் கீழ் வேலை செய்வதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளாலும், ஸ்தல ஸ்தாபனங்களின் அடிப்படைத் தத்துவத்திற்கு நேர் விரோதமான முறையில் நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகம் நடந்துவந்துகொண்டிருப்பதை அரசாங்கம் பார்த்துக்கொண்டிருந்தும், திடீரென்று ஜனநாயக முறையில் ஸ்தல ஸ்தாபனங்கள் இயங்க தேர்தலை நடத்தப் போகிறோம் என்று சொன்னால், என்றைக்கும் இல்லாது, இன்றைக்கு ஜனநாயகத்தின்மீது இவ்வளவு பெரிய காதல் அரசாங்கத்திற்கு எப்படி உண்டாயிற்று என்பது எனக்குத் தெரியவில்லை."

SRI G. GOVINDAN :—"பாயிண்டு ஆப் ஆர்டர். கனம் சேர்மென் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசும்பொது 'ஜனநாயகத்தின் மீது இவ்வளவு பெரிய காதல் அரசாங்கத்திற்கு எப்படி உண்டாயிற்று என்று தெரியவில்லை' என்பதாகச் சொன்னார். 'காதல்' என்ற வார்த்தையை இங்கே உபயோகப்படுத்தலாமா என்பதை தாங்கள் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

TEMPORARY CHAIRMAN (Sri V. Balakrishnan) :—"நன்றாக உபயோகப்படுத்தலாம்" (சிரிப்பு.)

SRI P. T. RAJAN :—"அதுவும் இரவு நேரத்தில் 'காதல்' என்ற பதம் உபயோகப்படுத்தலாமா?"

TEMPORARY CHAIRMAN (Sri V. Balakrishnan) :—"இதற்கு நேரம் காலம் ஒன்றுமில்லை" (பலத்த சிரிப்பு.)

SRI P. B. K. RAJACHIDAMBARAM :—"ஜில்லா போர்டுகள் அவசியமில்லையென்று அரசாங்கம் முடிவுக்கு வந்துவிட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது நியமிக்கப் போகும் நிபுணர்கள் அடங்கிய குழுவும் 'தாலுக்கா போர்டுகளை எப்படி அமைப்பது, எப்பொழுது அமைப்பது' என்பன போன்ற விவரங்களைத்தான் தயார் செய்யும் என்றும் சொன்னார்கள். அதோடு தற்காலத்தில் ஜில்லா போர்டுகள் எல்லாம் தங்கள் தங்கள் ஜில்லாவில் மக்களுக்குப்

27th March 1954] [Sri P. B. K. Rajachidambaram]

பல சௌகர்யங்களைச் செய்துகொடுக்க முடியாத நிலைமையில் பணக் கஷ்டத்தால் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயம் அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்கும், ஆகவே, ஒரு விஷயத்தை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"இங்கு நடக்கப் போகும் ஜில்லா போர்டு தேர்தலானது சென்ற சட்ட சபை பொதுத் தேர்தலையும்விட பெரியது என்பது அரசாங்கத்தாருக்குத் தெரிந்திருக்கலாம். தெரியாவிட்டாலும் இப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும் ஜில்லா போர்டு தேர்தலிலே இரட்டிப்பு மடங்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அதுவும் நம் ராஜ்யம் முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காக ஏற்படும் செலவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. மேலும் இந்தச் செலவின் ஒரு பகுதியைக்கூட அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அந்தந்த ஜில்லா போர்டுகளின் தேர்தல் செலவுகளை அந்தந்த ஜில்லா போர்டுகளே ஏற்றுக்கொள்ளவேண்டும். யான் அறிந்த வரையில் ஒரு ஜில்லா போர்டுக்கு இரண்டு லட்சம் ரூபாயிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வரை தேர்தல் செலவு ஆகும். அதுவும் இன்றைக்கு பல ஜில்லா போர்டுகள் அந்த ஜில்லாக்களிலே வேலை செய்துகொண்டிருக்கும் ஆசிரியர்களுக்குக்கூட சம்பளம் கொடுக்கமுடியாத நிலைமையில் அரசாங்கத்தாரே முன்வந்து ஒரு மான்யமோ அல்லது கடனோ கொடுத்து ஒத்தாசை செய்யவேண்டிய நிலைமையில் இருக்கின்றன. மேலும் மக்களுக்கு பல நன்மைகளைச் செய்யவேண்டுமென்று ஜில்லா போர்டுகள் உணர்ந்தாலும் கூட அவைகளைச் செய்யமுடியாத நிலைமையில் பணமுடையால் திண்டாடிக் கொண்டிருக்கின்றன என்ற விஷயம் நம் எல்லோருக்கும் தெரியும். அப்படியிருக்கும்போது லட்சக் கணக்கான ரூபாய்களை மிகக் குறைந்த காலத்திற்கே உயிருடன் ஜீவித்திருக்கப் போகின்றது என்று முடிவு கட்டப் பட்டுவிட்ட ஜில்லா போர்டுகளின் தேர்தலுக்காக ஜனநாயகத்தை காப்பாற்றுகிறோம் என்ற பெயரால் பல ஜில்லா போர்டுகளை செலவழிக்கவேண்டுமென்று சொல்லுவது நியாயமா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஜனநாயகத்தை இந்நாட்டில் நிலைநிறுத்தப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு அரசாங்கத்தார் ஜில்லா போர்டு தேர்தலை தற்போது நடத்துவதற்கு முடியாத காரணம் என்னவென்று சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்தால்—

'After the formation of the Andhra State, a scheme for the decentralization of the functions of district boards has been under the consideration, and pending a decision on that scheme arrangements for the conduct of elections to district boards could not be taken up.'

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தாலுகா போர்டுகளை அமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்பதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் விரிவாகச் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். அக்டோபர் மாதம் 1-ம் தேதி ஆந்திர மாகாணம் பிரிந்து சென்றது. ஆந்திர மாகாணம் பிரிந்து சென்று ஆறு மாதங்களுக்குமேல் ஆகியும்கூட இதைப்பற்றி ஒரு முடிவான அபிப்பிராயம் தெரிவிப்பதற்குப் பதிலாக நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'ஜில்லா போர்டுகள் இருக்கவேண்டுமா இருக்க வேண்டாமா என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யாது இந்தக் கமிட்டி ஜில்லா போர்டுகளை ஒழித்துக் கட்டுவது என்று அரசாங்கம் முடிவு செய்துவிட்டது. ஆகவே அதற்குப் பர்த்தியாக தாலுக்கா போர்டுகளை எப்படி அமைப்பது என்கின்ற விஷயத்தைப்பற்றியே இந்தக் கமிட்டி ஆராய்ச்சி செய்து தனது யாதாஸ்தை சமர்ப்பிக்கும்,' என்று அமைச்சர் சொல்லுகிறார்.

"எற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தை சீர்திருத்துவதற்காக முன்பிருந்த அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை நியமித்தார்கள்; அவர்களால் நியமிக்கப்பட்ட கமிட்டியாரால் அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட ஒரு ரிப்போர்ட்டானது என்ன ஆயிற்று

என்று அரசாங்கத்தைப் பல முறையும் கேட்டுக்கொண்டே வந்திருக்கிறோம். அப்பொழுது எல்லாம் அதைக் கவனித்துக்கொண்டு வருவதாகவே களம் மந்திரி அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் அக்கமிட்டியின் சிபார்சுகள் என்னவென்பது இதுவரையிலும் சட்டசபை அங்கத்தினர்களுக்கோ, பொதுமக்களுக்கோ தெரியாது. தெரிந்து கொள்ளவும் ஒரு வாய்ப்பை இந்த அரசாங்கத்தார் அளிக்கவில்லை. இப்பொழுது ஜில்லா போர்டுகளை ஒழித்துவிட்டு தாலுக்கா போர்டுகளை அமைக்கவேண்டுமென்ற யோசனையும் கூட அந்தக் கமிட்டியால் அளிக்கப்பட்ட பல சிபார்சுகளில் ஒன்றே என்று நான் கருதுகிறேன். அதையும் அரசாங்கத்தார் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த ஆறு மாதங்களாகவே, ஜில்லா போர்டுகளை ஒழித்துவிட்டு தாலுக்கா போர்டுகளை அமைக்கும் விஷயம் சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்காமல், கடந்த ஒன்பது மாத காலங்களாகவே ஜனநாயக வாசனையே நாட்டுப்புறங்களில் இல்லாதவாறு விசேஷ அதிகாரிகளைப் போட்டு நிர்வாகத்தையும் நடத்தச் சொல்லிவிட்டு, தற்போது திடீரென்று சபைக்கு வந்து, 'நாங்கள் ஜில்லா போர்டுகளை ஒழித்துவிடுவதென்றே தீர்மானித்து விட்டோம். இருந்தாலும் ஜில்லா போர்டு தேர்தலையும் தற்போது நடத்துவது என்றும் தீர்மானித்துவிட்டோம். இந்த ஸ்தாபனங்கள் இன்னும் சில மாதக் காலத்திற்கே உயிரோடு இருக்கும். பிறகு வேறு ஒரு எடுத்து நாட்டில் வேலை செய்யத் தலைப்படும்' என்று சொல்வது நியாயமில்லை என்று அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். முதலில் இது ஜனநாகயத்திற்கே உகந்தது அல்ல. இரண்டாவதாக பரிட்சார்த்தமாக என்று சொல்லி இன்னும் சிறிதுகாலத்திற்கே உயிரோடு இருக்கப் போகின்ற ஜில்லா போர்டுகளின் தேர்தலை நடத்த பல லட்சக்கணக்கான ரூபாய்களை, தற்போதே பொருளாதார நெருக்கடியால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு மிகவும் ஏழ்மையான நிலைமையில் இருந்து கொண்டிருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களை, செலவு செய்யவேண்டுமென்று சொல்வதும் நியாயமல்ல. ஆகையால் அரசாங்கம் ஜில்லா போர்டுகளைக் கலைத்து தாலுக்கா போர்டுகளை அமைக்கத் தீர்மானித்துவிட்டது என்றால், உடனடியாக தாலுக்கா போர்டுகளை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த ஒன்பது மாத காலமாக நாட்டில் ஜனநாயகத்தத்துவத்திற்கே விரோதமான முறையில் நடத்தப்பட்டு வரும் புதுமுறை ஆட்சியாகிய, விசேஷ அதிகாரிகளின் ஆட்சியில் ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே இந்தத் தாலுக்கா போர்டுகளையும் உடனே அமைக்க முடியாதென்று சொன்னாலும் இனிமேல் புதுமுறை ஆட்சியை நீடித்துக்கொண்டே போவதில் பயனில்லை. அப்படி ஒரு வேளை மக்களின் உறவு இல்லாமல் இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் நடைபெறுவதில் அரசாங்கத்திற்கு மிகுந்த சங்கடம் இருக்கிறதென்று சொல்லித் தேர்தலை நடத்திவிடப்போகிறோம் என்று அரசாங்கம் சொன்னால், தேர்தலை நடத்துவதற்குப் பதில் நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதாவது வெறு முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நாட்டில் இருக்கிறார்கள். அதுவும் அவர்கள் இதே சபையில் ஸ்தாபனம் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தை சர்வாதிகாரி போன்ற விசேஷ அதிகாரிகளிடம் மாத்திரம் ஒப்படைப்பதற்குப் பதிலாக அந்தந்த ஜில்லா சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரையும் ஒன்றாகப் போட்டு, அக்கமிட்டிக்கு என்னவேண்டுமானாலும் பெயர் கொடுங்கள்—இவர்களின் யோசனைப்படி, இவர்களைக் கலந்துகொண்டு எல்லாக் காரியத்தையும் அந்த அதிகாரிகள் செய்யவேண்டுமென்று உத்திரவு போட்டாலும் ஜனநாயக முறையில் சிறிது காலம் நம் நாட்டில் ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தைத் திறம்பட நடத்தலாம். ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். அதைவிட்டு தாலுக்கா போர்டுகள் அமைப்பதற்குள் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் ஜில்லா போர்டு தேர்தலை நடத்தப் போகிறோம் என்று சொன்னால் மிகக் குறுகிய காலமே உயிரோடு இருக்கப் போகின்ற ஜில்லா போர்டுகளினால், செலவிடப்படும் பணத்திற்குத் தக்க நஷ்ட ஈடு கிடைக்காது என்றும் சொல்லி இப்பொழுது அரசாங்கத்தார் கொண்டு வந்திருக்கும் மசோதாவானது நாட்டில் இருக்கும் ஜனநாயகத்திற்கும் ஸ்தல ஸ்தாபன

27th March 1954] [P. B. K. Rajachidambaram]

வளர்ச்சிக்கும் கொஞ்சம் கூட உகந்தது அல்ல என்று என்னுடைய அபிப்பிராயத்தையும் எடுத்துச் சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்."

8-30 p.m.

* Sri V. K. PALANISAMI GOUNDER :—" கனம் தலைவர் அவர்களே, இந்த ஜில்லா போர்டுகளைக் கலைத்து விட்டு. ஸ்பெஷல் ஆபீஸர்களை முதல் ஒன்பது மாதத்திற்கு சர்க்கார் போடப்பட்டிருக்கிறார்கள். மறுபடியும் இப்பொழுது ஏழு மாதத்திற்கு தேர்தலை தள்ளி வைக்கப்போவதாகத் தெரிய வருகிறது. ஆந்திரா பிரிந்த பிறகு பட்ஜெட் வந்துவிட்டது; அதற்குள் இவைகளை யெல்லாம் அமைக்க முடியவில்லை என்று அதற்குக் காரணம் சொல்லுகிறார்கள். இந்தக் காரணங்களுடன் நிறுத்தி இருந்தால் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். தாலூகா போர்டுகளை அமைக்கப் போகிறோம், ஜில்லா போர்டுகள் நிர்வாகத்திலிருப்பது பரந்த பிரதேசமாக இருக்கிறது அதனால் நடத்த முடியவில்லை. பல ஜனங்களுக்கு சரியாக பலன் படுவதாக இல்லை. அதற்காக தாலூகா போர்டைக் கொண்டு வரலாம் என்று நினைத்திருக்கிறார்கள் என்று சொல்லவே வேண்டியது இல்லை. அது மனதில் இருந்தாலும் கூட அதை தெரிவிக்காமல் பின்னால் யோசனை செய்து இருக்கலாம். இந்த யோசனையை வெளியே சொல்லாமல் இருந்திருக்கலாம். அப்படி இருந்தால் கனம் ஸ்ரீராஜா சிதம்பரம் பேசும் போது " தாலூகா போர்டு வரப்போகிறது. இதற்குள் ஜில்லா போர்டு தேர்தல் நடக்க வேண்டாம், அதற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டாம் " என்று சொல்லியிருக்கமாட்டார். ஜில்லா போர்டு தேர்தலை உடனே கொண்டுவர முடியாது, அதற்காக ஏற்பாடுகள் இன்னும் செய்யப்படவில்லை. அதை ஒத்திப் போட வேண்டியது அவசியம் தான். "மேற்குப் பிரதேசத்திலும் நீலகிரி முதலிய இடங்களிலும் பருவ மழை காலம் வரப்போகிறது அதனால் அங்குதேர்தலை நடத்த முடியாது" என்றும்சொன்னார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலும் கூட ஒரு பகுதியில் பருவ மழை இருக்கும். அதனால் அங்கு ஜூன், ஜூலை மாதங்களில் தேர்தலை நடத்த முடியாது. இதையும் ஒத்தி வைக்க வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கிறேன். ஜில்லா போர்டு தேர்தல்களை நடத்துவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் இப்போதே நிர்வாகத்தில் சில சீர்திருத்தங்கள் செய்தால் தேவலை. இப்பொழுது ஸ்பெஷல் ஆபீசர் அதிகாரத்தின் கீழ் ஜில்லா போர்டு இருக்கின்றது. தலைவரைப்போல் அவர்களுக்கும் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு ஏதாவது ஏற்பாடுகளை உடனே செய்தால் தேவலை. அக்காரியங்களை இப்பொழுது செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" இதற்கு முன்பு சர்க்காரால் நியமிக்கப்பட்ட கமிட்டி ஒரு ரிப்போர்ட்டை அனுப்பி இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டின் சாரம்சத்தை வெளியே சொல்லவில்லை என்று கனம் ராஜா சிதம்பரம் அவர்கள் சொன்னார். அந்தக் கமிட்டியில் நானும் கூட இருந்தேன். ஜில்லா போர்டு நிர்வாகத்தில் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதாக இருக்கின்றன. அதற்கு சட்டம் செய்ய வேண்டிய காரியங்களை பின்னால் வைத்துக் கொண்டாலும் சர்க்காராலேயே சில காரியங்களைச் இப்பொழுதே செய்ய முடியும் என்று ரிப்போர்ட்டில் சொல்லி இருக்கிறது. அதை அப்படியே செய்தால் தேவலை. இப்போது ஏதாவது வேண்டுமென்று பொதுமக்கள் ஸ்பெஷல் ஆபீசரைப் போய்க் கேட்டால் பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். பணம் இல்லாததற்கு பல காரணங்களும் இருக்கின்றன. ஆனால் வெளியே என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் ' ஜில்லா போர்டு தலைவர்களே பணத்தை நிறைய செலவு செய்து விட்டார்கள் ', அதனால் பணம் இல்லை என்று சொல்லுவதே தவிர வேறு இல்லை. ஜில்லா போர்டு பட்ஜெட்டை கவர்ண்மெண்டுக்கு அனுப்பி கவர்ணமெண்ட் அங்கீகாரம் செய்த பிறகு தான் அந்த பட்ஜெட்டின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகையால் ஜில்லா போர்டின் பணச்சிலவின்மீது சர்க்காருக்கு ஆதிக்கம் இருக்கிறது. இப்பொழுது பஞ்சப்படி எல்லாபள்ளிக்கூட சிப்பந்திகளுக்கும் மற்றவர்களுக்கும் ஜில்லா போர்டுகள் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. அந்தப் பஞ்சப்படி செலவை சர்க்கார் ஏற்றுக்கொள்வதாக முன்பு சொல்லி

இருக்கிறார்கள். ஆனால் பல ஜில்லா போர்டுகளுக்கு அந்த மாதிரி பஞ்சப்படிக் கொடுக்கவே இல்லை. பஞ்சப்படி கொடுத்த ஜில்லா போர்டுகளுக்கு பணம் குறைவாக இருக்காது. இவ்விதம் பஞ்சப்படி கொடுப்பதால் சுமார் ஐந்து, ஆறு லட்சம் ரூபாய் அதிகம் செலவாகிறது. அதை சர்க்கார் ஒத்துக்கொள்ளுகிறோம் என்று சம்மதித்தும் கூட அதை ஜில்லா போர்டுகளுக்கு இன்னும் கொடுக்கவில்லை. அதனால் பணக் கஷ்டம் ரொம்ப இருக்கிறது.

"தவிர ஜில்லா போர்டுகளில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன, அந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் செலவுகளில் ஒரு பகுதியை சர்க்கார் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல கல்வி செஸ் என்று வசூல் செய்தால் எவ்வளவு ஜில்லா போர்டு வசூல் செய்கிறதோ அவ்வளவு தொகை சர்க்காரில் கொடுப்பதாகவும் முன்பு சட்டம் இருந்தது. பின்னால் சர்க்கார் என்ன சட்டம் செய்தார்கள் என்றால் ஜில்லா போர்டு எவ்வளவு வசூல் செய்தாலும் கூட ஒரு ரூபாய் கந்தாயத்துக்கு மூன்று அணா செஸ் போட்டு வசூல் செய்தாலும் கூட ரூபாய்க்கு $1\frac{1}{2}$ பைசா வசூல் செய்தால் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவு தொகைதான் கொடுப்பது என்று சட்டம் செய்தார்கள். அதனால் தான் ஜில்லா போர்டுகளுக்கு பண நெருக்கடி அதிகம். பஞ்சப்படி எல்லாவற்றையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்று சொல்லியும் கூட சர்க்கார் கொடுக்கவில்லை. ஆரம்பக் கல்வி செஸ் வசூல் செய்வதில் அந்த அளவிற்கு சர்க்கார் கொடுக்கிறேன் என்று சொன்ன அளவில் அதையும் இன்னும் கொடுக்கவில்லை. அதனால் தான் பணக்கஷ்டம் ஜில்லா போர்டுக்கு வந்து ரொம்பக்கஷ்டப்படுகிறார்கள். ஆனால் வெளியே என்ன பெயர். அதைப் பற்றி கவுன்சிலில் கூட ஒருவர் பேசி இருக்கிறார். இந்த ஜில்லா போர்டு செய்த தவறுகளை எல்லாம் இந்த ஸ்பெஷல் ஆபீஸர்கள் இப்பொழுது சரி பண்ணிக் கொண்டு வருகிறார்கள், இன்னும் கொஞ்சம் காலம் கொடுத்தால் அதை பூராவும் சரி பண்ண முடியும். அதனால் இன்னும் ஆறு மாதத்திற்கு நீடிக்க வேண்டியது தேவலை என்று சொன்னார். ஜில்லா போர்டின் நிலைமை அப்படி இருக்கிறது. இந்த நிலைமையில் அங்கு பேசி இருப்பதாகவும் தெரிகிறது. ஜில்லா போர்டினுடைய நிலைமை எப்படி இருக்கிறதென்று தெரியாமல் பேசினதாகத்தான் தெரிகிறது. சித்தூர் ஜில்லா போர்டானது இப்பொழுது ஆந்திர தேசத்திற்குப் போய்விட்டது. சித்தூர் ஜில்லா போர்டானது ஏற்கெனவே ரொம்ப மோசமாக நடந்துவந்தது; ஆசிரியர்களுடைய சம்பளத்தைக்கூட சரிவர கொடுக்கமுடியவில்லை; கண்டிராக்டர்களுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை என்ற பெரிய புகார் இருந்தது என்பதையும் பத்திரிகையில் பார்த்தோம். ஜில்லா போர்டாருடைய பொருளாதார நிலைமை சரியாக இல்லாததன் காரணமாக நான்கு உயர்நிலைப்பள்ளிகளை ஸ்பெஷல் ஆபீசர் மூடி விட்டார் என்பதையும் பத்திரிகையில் பார்த்தோம். சர்க்காரால் கொடுக்கப்படவேண்டிய தொகை அத்தனையும் சித்தூர் ஜில்லா போர்டுக்கு இப்பொழுது வந்துவிட்டது. அதனால் எந்த ஸ்தாபனத்தையும் நிறுத்தவேண்டியதில்லையென்றும், அவைகளைத் தொடர்ந்து நடத்தலாமென்றும் ஸ்பெஷல் ஆபீசர் சொல்லுகிறார். இதனால் என்ன தெரிகிறது? சர்க்கார் ஒத்தாசை செய்ய வேண்டிய தெல்லாம் மத்தியில் நிறுத்தப்பட்டதின் காரணமாக ஜில்லா போர்டானது ரொம்பவும் கஷ்டப்பட நேரிட்டது.

8-35 p.m.

"இதையெல்லாம் ஏன் சொல்கிறேனென்றால், ஜில்லா போர்டுக்கு தேர்தல் முதலில் 6 மாத காலமும் அதன் பிறகு 9 மாத காலம் ஒத்தி வைக்கப்பட்டது. ஆக மொத்தம் $1\frac{1}{4}$ வருஷம் ஆகப்போகிறது. இப்பொழுது ஜில்லா போர்டார் ஒரு வேலையையும் சரியாகச் செய்வதில்லை. எதைத் கேட்டாலும் 'பணம் இல்லை', என்று சொல்லுகிறார்கள். ஸ்பெஷல் ஆபீசருக்கு அக்கறை கிடையாது. டிபுடி கலெக்டர் கிரேடிலுள்ளவர்களை ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீசருக்கு பர்ஸனல் அஸிஸ்டெண்டாகப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஜில்லா போர்டு நிர்வாக அனுபவம் கிடையாது. அதனால் வேலை தடுமாறுகிறது. ஒரு புறத்தில் பணம் இல்லை; மற்றொரு புறத்தில் அனுபவமுள்ளவர் நிர்வாகத்தில் இல்லை. ஆகவே,

27th March 1954] [Sri V. K. Palanisami Gounder]

ஜில்லா போர்டு வேலை தடுமாறுகிறது. ஜில்லா போர்டு தேர்தலை சர்க்கார் ஒத்திவைப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், ஜில்லா போர்டு வேலைகள் ஒழுங்காக நடக்கவேண்டிய ஏற்பாட்டைச் சர்க்கார் செய்யவேண்டும். பின்னால் தாலூகா போர்டு வருகிறது என்று சொல்ல வேண்டியதில்லை. தாலூகா போர்டு எந்த முறையில் வரவேண்டும் என்பதற்காக ஒரு கமிட்டி போட்டு யோசனை பண்ணப்போகிறோம்; ஆனால், ஜில்லா போர்டு தேர்தலை ஆறு மாதத்திற்குள் நடத்துகிறோம்', என்று சொன்னால், அதற்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறதாகவே தெரியவில்லை. இப்பொழுது தேர்தலை ஒத்தி வைப்பது சரி என்று ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், தேர்தல் நடக்கும் வரை, ஜில்லா போர்டுகள் ஒழுங்காக நடக்க வேண்டியதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும்.

"கோயமுத்தூர் ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் 45 முதல் 60 ஆஸ்பத்திரிகள்வரையில் இருக்கின்றன. அவைகளில் 15 ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் கிடையாது. ஏனென்றால் டாக்டர்கள் பொதுவாக கிராமத்திற்குப் போக விரும்புவது கிடையாது. முன்பெல்லாம் எல்.எம்.பி., எல்.ஐ.எம். படித்த டாக்டர்கள் கிராமத்திற்கு கொஞ்சமாவது போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் கிராமத்திற்குப் போகத் தயாராயில்லை. அப்படித் தயாராயிருந்தாலும்கூட, அவர்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கமுடிவதில்லை. ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு மாதம் ரூ. 85-லிருந்தும், சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்களுக்கு ரூ. 260-லிருந்தும் சம்பளம் ஆரம்பிக்கப்படுகிறது. இந்தக் கஷ்டங்களையெல்லாம் நீக்கவேண்டுமென்று நான் சொல்லுகின்றேன். ஜில்லா போர்டு தேர்தலை ஆறு மாதத்திற்கு ஒத்திவைக்கவேண்டுமென்று இப்பொழுது கோரப்படுகிறது. சென்ற 9 மாதமாகவே ஜில்லா போர்டுகள் சரியாக வேலை செய்யவில்லை என்பது எங்களைப்போன்றவர்களுடைய அபிப்பிராயம். இன்னும் இதேமாதிரி ஜில்லா போர்டு நிர்வாகம் நடந்தால், அங்கு வேலைகள் ஒழுங்காக நடைபெறமுடியாது. அதை முந்தி போட்டிருந்த கமிட்டியிலே சொல்லியிருந்தேன். வரிசையாக சிபாரிசுகள் செய்திருக்கிறோம். அந்தக் கமிட்டியின் ரிபோர்ட்டைப் பார்த்து நடைமுறையில் சர்க்காரால் நிறைவேற்றக்கூடிய காரியங்களைச் சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தேர்தலை 6 மாதங்களுக்கு ஒத்தி வைப்பதை நான் வரவேற்கின்றேன்."

* **Sri A. VELOO** :—"மிஸ்டர் சேர்மன் அவர்களே, 'ஜில்லா போர்டின் ஸ்பெஷல் ஆபீசர் காலம் நீடிக்கவேண்டு'மென்று கனம் மந்திரி அவர்கள் மறு முறையும் கால நீடிப்பு சம்பந்தமான திருத்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன்மீது ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் இந்தக் காலவரையை நீடிப்பதுபற்றி ஒரு பொறுக்குக் கமிட்டி (Select Committee)யின் யோசனைக்கு விடவேண்டுமென்று கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 8-40 p m.

"ஜில்லா போர்டுகள், இப்பொழுது ஸ்பெஷல் ஆபீசர்களுடைய ஆட்சியின் கீழ் இருப்பதால் பலவித உரிமைகள் பரிக்கப்படுகின்றன என்பதை முன்பு பேசிய அங்கத்தினர்களுடைய பிரசங்கத்திலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். இன்னும் ஜில்லா போர்டு நிலைபெற்றிருக்கவேண்டுமா? அதன் காலம், நீடிக்கப்படவேண்டுமா? அல்லது தாலூகா போர்டுகள் திரும்பவும் வரவேண்டுமா? என்பதைப்பற்றி மிகவும் பரவலாகவே மக்களிடத்திலே சர்ச்சை நடந்துகொண்டிருக்கிறது. தாலூகா போர்டுகள் வருவதன்மூலம் பல நன்மைகள் உண்டு என்பதை யாரும் மறக்கமுடியாது. இப்பொழுதுள்ள ஜில்லா போர்டுகள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகள் ஜில்லா பூராவுக்கும் பொதுவாயுள்ள ஒரு ஸ்தாபத்தினால் திறம்பட மேற்கொள்ள முடியாத ரீதியில் இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் தொகுதியிலுள்ள காரியங்களை மாத்திரம் கவனிக்கிறார்கள் என்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிந்ததுதான்.

[Sri A. Veloo] [27th March 1954

குறிப்பாக, எங்கள் ஜில்லாவிலே எடுத்துக் கொண்டால் பட்டுக்கோட்டையில் ஜில்லா போர்டு தலைவர் நீண்ட காலமாக இருந்து வந்த காரணத்தினாலே அந்த இடத்தில் ரோடு வசதிகள் இன்னும் மற்ற வசதிகள் எல்லாம் மிகவும் ஒழுங்காகவே நடைபெற்று வந்திருக்கின்றன. மற்ற இடங்களுக்குப் போனால் ரோடு வசதிகளைப் பார்த்தால் பயங்கரமான மோசநிலையிலிருக்கின்றன. குறிப்பாக செம்பனார்கோவிலிலிருந்து திருவடைக்கழி முதலிய ஊர்களில் உள்ள ரோடுகளைப் பார்த்தால் மழை காலங்களில் மிகவும் மோசமாக இருக்கும். மழை நின்று ஒரு மாதம் இரண்டு மாதம் வரை வண்டியோ காரோ போகமுடியாத நிலைமையில் சேறும் சகதியுமாக இருக்கின்றது. இப்பொழுதுள்ள ஜில்லா போர்டுகளின் வேலை முழுவதையும் தாலூகா போர்டுகளிடம் ஒப்படைப்பதன்மூலம் பல சௌகரியங்கள் ஏற்படலாம். ரோடுகள், பள்ளிக்கூடங்கள் இவைகளையெல்லாம் தாலூகா போர்டினிடமே ஒப்படைத்தால் மிகவும் நலமாக இருக்கும். அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு சௌகரியமாக இருக்கும். மேலும் பலருக்குப் பயிற்சியளித்து, தகுதிவாய்ந்த தலைவர்களை உண்டாக்குவது ஜனநாயகம் சரியாக நடைபெறுதவதற்கு அவசியமான தேவையாகும். தாலுக்கா போர்டுகளை அமைப்பது இதற்கு வழி கோறுவதாக இருக்கிறது. தாலுக்கா போர்டுகள் ஏற்பட்டால் கல்வியை பரப்பும் வேலையை ஜில்லா போர்டுனிடம் ஒப்படைத்திருப்பதுபோல் தாலூகா போர்டுகளிடம் கல்வியை ஒப்படைக்கவே கூடாது. இப்போது ஜில்லா போர்டிலே பலவிதமான இடைஞ்சல்கள் இருப்பதைக் கண்டும் தாலூகா போர்டுகளிடம் கல்வியை ஒப்படைத்தால் இன்னும் ஏராளமான தீங்குகள் ஏற்படும். இப்பொழுது ஆசிரியர்கள் ஜில்லாவின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு, 50, 60 மைல் தூரத்திற்கப்பால், இரண்டு மாதத்திற்காகவோ ஒரு மாதத்திற்கோ மாற்றிவிடுகிறார்கள். இது மிகவும் விநோதமாக இருக்கிறது. அந்தமாதிரி ஏற்படாமல் இருப்பதற்கு, தாலூகா போர்டுகளிடத்திலே கல்வியை ஒப்படைக்காமல், சர்க்காரே ஏற்றுக்கொண்டு நடத்தினால் மிகவும் நலமாக இருக்கும். அல்லது ஆரம்பக்கல்வியை ஒரு தனி ஸ்தாபனத்தின் பொறுப்பாக்கவேண்டும். இன்னும் இந்தக் காலவரையை நீடிப்பதுப்பற்றி மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது இப்பொழுது ஒரு முறை நீடித்துவிட்டு, இரண்டாவது முறையாகவும் நீடித்து, அதற்குப் பிறகு ஒரு High Level Committee-ஐ ஏற்படுத்தி, அந்தக் கமிட்டியின் சிபார்சு மூலம் தாலூகா போர்டுகள் ஏற்படுவதற்கு காலவரையை நீடிப்பதைவிட ஒரே முறையாக தாலூகாபோர்டு தேர்தலையே நடத்துவது நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே, இதுசம்பந்தமாக பொறுக்குக் கமிட்டியின் முடிவுக்கு விடவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்."

8-45 p.m. * SRI K. VENKATRAMANA GOWDA :—" Mr. Chairman, Sir, it is stated that for reasons of inconvenience to hold the elections to the District Boards of South Kanara, Malabar and the Nilgiris in the month of June, extension of the term of the Special Officers of the District Boards has been found to be necessary till the 31st October 1954. It will be much more inconvenient to hold the elections in the West Coast Districts and the Nilgiris in the month of October 1954. There will be heavy rains then and streams will be flooded from June to November. It will be so at least in the Malnad area and the sub-ghat regions of the South Kanara district which comprises one-fourth of the district where facilities of communication are lacking. I wonder how it will be possible for the candidates to contact their electorate under these conditions. It is unfortunate that these proposals should have emanated from a Member of the other House who belongs to my district and who represented in the District Board a constituency

27th March 1954] [Sri K. Venkatramana Gowda]

which is impossible to reach during this period. I think it is absolutely necessary to postpone the elections till December at least in the District of South Kanara. But I do not propose to press my contention in view of the procedural difficulties that would arise regarding the present Bill, but I would request the Government to come forward with one more amendment later seeking extension of the term of the office of the Special Officer of the District Board of South Kanara district till 31st December 1954.

"Thank you, Sir."

SRI K. T. RAJU :—"கனம் சேர்மென் அவர்களே! இந்த ஜில்லா போர்டு காலத்தை அக்டோபர் மாதம் வரை நீடித்து தேர்தலை ஒத்திவைப்பதற்காக ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின் மோசமான அம்சத்தை கனம் அங்கத்தினர் ராஜா சிதம்பரம் எடுத்துக் கூறியிருக்கிறார். இந்த மாதிரி மசோதா சட்டசபையில் 9 மாதத்திற்கு முன் வந்திருக்கிறது. அப்போது சபையில் காரசாரமான விவாதம் நடந்தது. அந்த விவாதத்திற்குப் பதிலளிக்கும் முறையில் அன்று ஸ்தல ஸ்தாபன மந்திரியாக இருந்த கனம் ஸ்ரீ சங்கர ரெட்டி அவர்கள் 1954-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குள் ஜில்லா போர்டு தேர்தலை நடத்துவதாக இந்த சபைக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆனால் இன்னும் அவ்வாக்குறுதியின்படி தேர்தலும் நடக்கவில்லை. இன்று அதற்குப் பதிலாக இந்த சட்டசபையின் முன் இம்மாதிரி மசோதா அக்டோபர் மாதம் வரைக்கும் தேர்தலை ஒத்திப் போடுவதற்கு கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி கொண்டு வந்திருக்கிறார். உண்மையாகவே, நம்முடைய ஸ்தல ஸ்தாபன மந்திரி இந்த மாதிரி நிலைமை ஏற்படுமென்று கருதியிருந்தால் ஜனவரி மாதத்தில் சட்ட சபைக் கூட்டம் நடந்த போது அவர் தேர்தலை மார்ச்சு மாதத்திற்குள் நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு வசதியில்லாத காரணத்தினால் அக்டோபர் மாதம் வரைக்கும் ஒத்திப் போடவேண்டுமென்று சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்யாமல்—இன்றைக்கு மார்ச்சு மாதம் 27-ம் தேதி இன்னும் மார்ச்சு மாதம் முடிவதற்கு மூன்று தினங்கள் தான் பாக்கியிருக்கின்றன—இன்றைக்கு இந்த நள்ளிரவில் இந்த மசோதாவை கனம் மந்திரியவர்கள் சட்டசபை முன் கொண்டுவந்து அதன் ஆதரவைக் கேட்பது, நியாயமா என்று கேட்கிறேன். உண்மையிலேயே இந்த சர்க்காருக்கு ஜன நாயகத்தில் நம்பிக்கை இருந்தால் இப்போப்பட்ட மசோதாவைக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள். கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர் பேசும்போது தாலூகா போர்டைத் திருப்பிக் கொண்டு வருவதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தும் யோசனை சர்க்காருக்கு இருப்பதால் ஜில்லா போர்டு தேர்தலை ஒத்திவைக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த யோசனையை நிறைவேற்றுவதற்காக மந்திரி சபைக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார். 9 மாதம் ஆகியும் இன்னும் என்ன அவகாசம் சர்க்காருக்குத் தேவையாய் இருக்கிறது என்று பல கூட்டங்களிலேயே சிலர் கேட்டிருக்கிறார்கள். இதற்குள்ளே அதைப்பற்றி ஏதாவது ஒரு முடிவு செய்து இருக்க வேண்டும். அதையும் செய்ய வில்லை. ஜில்லா போர்டு தேர்தலையும் நடத்தவில்லை. இப்பொழுது அந்த ஜில்லா போர்டு தேர்தலைக்கூட நடத்தாமல் அதை ஒத்தி வைப்பதற்கும் ஒரு மசோதாவை இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால் உண்மையிலேயே ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டுமென்கிற எண்ணமே சர்க்காருக்குக் கிடையாது. இம்மாதிரித் தேர்தல்களை நடத்தாமல் எவ்வளவு நாளைக்கு ஒத்திப்போட முடியுமோ, அவ்வளவு நாளைக்கு ஒத்திப் போடுவதுதான் அரசாங்கத்தின் கொள்கையாயிருக்கிறது. அவ்வாறு இல்லையென்றால் இந்த மாதிரி ஒரு மசோதாவை இந்த நேரத்தில் கொண்டு வரவேண்டிய அவசியம் கிடையாது. உண்மையிலேயே தாலூகா போர்டைக் கொண்டுவர

[Sri K. T. Raju] [27th March 1954

வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்திற்கு இருக்குமேயானால் ஜில்லா போர்டு தேர்தலை ஒத்திவைப்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. அம்மாதிரி அப்படி திட்ட வட்டமாக அமைச்சர் இந்த சபையில் சொல்லாததினால் கொஞ்சம் சந்தேகத்திற்கு இடம் கொடுக்கிறது. அவர் திட்ட வட்டமாக நாங்கள் தாலூகா போர்டைக் கொண்டு வரப்போகிறோம், ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் தள்ளி வைப்பதற்காக அவகாசம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தால் அதில் கொஞ்சம் அர்த்தம் இருக்கிறது. அவ்வாறு சொல்லாததினால் தாலூகா போர்டு கொண்டுவருவார்களா என்பது கூட நிச்சயமில்லை. ஜில்லா போர்டு தேர்தலும் வருகிற அக்டோபர் மாதத்தில் நடைபெறும் என்ற உத்தரவாதமும் கிடையாது. அப்படி இந்த முறையும் உத்தரவாதம் கொடுத்தாலும் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஏனென்றால் இம்மாதிரி ஏற்கனவே உத்தாவாதம் கொடுத்திருந்தும் அவர்கள் நடைமுறையில் அனுஷ்டிக்காததால் எங்களுக்கு நம்பிக்கையில்லை. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு அடுத்த அக்டோபர் மாதத்திற்குள் தேர்தல் நடக்க முடியாமற் போனால் இதே மாதிரி இரண்டு மூன்று தினங்களுக்கு முன் கொண்டு வருவார்களோ என்ற எண்ணம் எங்களுக்குத் தோன்றுகிறது. இம்மாதிரி சட்டசபைக்குக்கொடுத்த உத்தாவை நிராகரித்து தேர்தலை ஒத்திவைத்துக் கொண்டே போவது ஜனநாயகத்துக்கு விரோதமான ஒரு செய்கை. மேலும் தாலூகா போர்டைக் கொண்டுவர சர்க்கார் யோசிப்பதால் ஜில்லா போர்டு தேர்தலை நடத்துவது என்பது அனாவசியமான செலவாகும். ஜில்லா போர்டு கொண்டு வருவதை மூன்று தினங்களிலே முடிவு செய்துவிடலாம். இந்த சட்டசபையில் அந்த விஷயத்தை விவாதத்திற்குக் கொண்டு வந்து தாலூகா போர்டு வேண்டுமா அல்லது ஜில்லா போர்டு தேர்தலை நடத்த வேண்டுமா என்பதை இந்த சட்டசபையின் மூலமாக தெரிந்து கொள்ளலாம். அம்மாதிரி செய்வதுதான் ஜனநாயகத்திற்கு உகந்தது.

(At this stage Mr. Speaker resumed the Chair.)

"கனம் அங்கத்தினர் ஸ்ரீ பழனி சாமி கவுண்டர் இன்றைக்கு பேசும் போது **Special Officer** மூலமாக ஜனங்களுக்கு நன்மை ஒன்றும் கிடையாது என்று சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே ஜில்லா போர்டு நிர்வாகத்தில் நெருக்கடி ஏற்பட்டது. அதை நிவர்த்திக்க சர்க்கார் ஒரு முடிவுக்கு வர வேண்டும். தாலூகா போர்டு அவசியமா, ஜில்லா போர்டு தேர்தல் அவசியமா என்பதை ஆலோசிக்க ஒரு நாளைக்கு இந்த சட்டசபைக் கூட்டத்தை ஒத்திவையுங்கள். அம்மாதிரி செய்யாமல் இந்த மசோதாவை இப்போது கொண்டு வருவதற்காக இதை வண்மையாகக் கண்டிக்கிறேன். இப்பொழுது மசோதா நிறைவேறாமல் தோற்கடிக்கப்பட்டால் மார்ச்சு 30-ம் தேதிக்குள் தேர்தல் நடக்க முடியுமா என்பதை சர்க்கார் கவனிக்காமல் இன்றைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது நமக்கு என்ன தோன்றுகிறதென்றால் இந்தசர்க்காருக்கு ஜனநாயகத்தின் மீதோ அல்லது ஜனங்களின்மீதோ நம்பிக்கையோ நல்ல எண்ணமோ கிடையாது என்பது பிரதிபலிக்கிறது. கனம் அமைச்சர் ஏதாவது ஒரு முடிவுக்கு வருவார் என்ற நம்பிக்கையுடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்."

MR. SPEAKER :—"Let the hon. Members be brief in their speeches."

SRI A. GOVINDASWAMY NAYAGAR:—"கனம் சபா நாயகர் அவர்களே! ஜில்லா போர்டு தேர்தல்களை ஒத்திப் போடுவதற்குப் பதிலாக **Special Officer** காலத்தை நீடிக்க வேண்டுமென்று சொல்லுவது சரியான வியாக்கியானம் அல்ல. இந்த சர்க்காருக்குத் தெளிவான கொள்கை கிடையாது என்று ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்களுடைய பேச்சிலிருந்து தெளிவாகிறது. இந்த சர்க்காரின் போக்கை கவனித்தால் மூகமதுக்கல், தலை நகர் மாற்ற விஷயத்தில் கைகண்ட முறை ஞாபகத்தில் வருகிறது.

27th March 1954] [Sri A. Govindaswamy Nayagar]

"மந்திரி அவர்கள் பிரசங்கத்தில் ஜில்லா போர்டு தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் பிறகு தாலூகா போர்டு தேவையா என்பது பற்றி முடிகட்ட ஒரு நியுஸ்ர் கமிட்டி நியமிக்கப்படுமென்று வெளியிட்டிருக்கிறார். இவர் இப்படிச் சொல்வது இந்த சர்க்காருக்கு இரண்டு வித அபிப்பிராயங்கள் இருக்கின்றன என்று தெளிவாகிறது. கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசுகிறபோது, 'தாலூகா போர்டுகளை உடனடியாக நடத்தப் போகிறோம்,' என்று சொல்லுகிறார். காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டுமென்ற அபிப்பிராயம் நிலவுகிறது. மந்திரி சபையை உறுவாக்குகின்ற (Warwick) king maker ஸ்ரீ காமராஜ் நாடாருக்கும் அவரைச்சார்ந்தவர்களுக்கும் ஒரு கொள்கை இருக்கின்றதென்பதும், ஆட்சிபுரியும் மந்திரி சபைக்கு வேறு கொள்கை இருக்கின்றதென்பதும் தெள்ளத் தெளிவு. இப்படி இரண்டு விதக் கொள்கையின் காரணமாக பொது ஜன நலன் பாதிக்கப்படுமென்று சொல்லிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன். சர்க்கார் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் ஸ்ரீ பழனிசாமி கவுண்டர் ஜில்லா போர்டு தலைவராக இருந்திருப்பதால் அவருக்கு ஜில்லா போர்டு நிர்வாகம் எப்படி நடத்தப் படவேண்டுமென்ற கொள்கை தெரியும். அவர் கட்சியின் சார்பாக கால தாமதத்தை ஒருவாறு ஒப்புக் கொண்டபோதிலும் ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டுமென்று தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

8–55 p.m.

"இப்பொழுது நடக்கக் கூடிய தேர்தல் ஒரு புதுமுறையில் நடக்க வேண்டுமென்பது என்னுடைய விருப்பம். மேஜர் பஞ்சாயத்து தலைவர் சர்வஜன வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப் படுவது போல் ஜில்லா போர்டு தலைவரும் சர்வஜன வாக்கு பெற்ற பிரதிநிதியாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் அவர் மக்களுக்கு நன்மை செய்ய முடியும். அங்கத்தினர்கள் தனித்தனியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்களுக்குள் தலைவர் தேர்தல் நடந்தால் ஆள் தூக்கிபடலமும் பணச் செலவும் போட்டா போட்டியும் ஏற்படும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் கட்சிக் கண்ணோட்டத் தோடு வேலை செய்ய முடியுமே தவிர மக்களுக்கு நன்மை செய்ய முடியாது.

"ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடந்தால் அப்பொழுது மழைகாலம் வந்து விடும். குறிப்பாக எங்கள் ஜில்லாவில் அப்பொழுது மழை பெய்யும்."

THE HON. SRI K. RAJARAM :—"In the Tamil districts elections will be over before August. That is what I said in my introductory speech."

*** SRI A. GOVINDASWAMY NAYAGAR :—**"ஆகஸ்டு மாதத்தில் கூட மழைகால ஆரம்பம்தான். ரோடுகளில் காரில் போகமுடியாது. காரில் போகும்பொழுதுகூட மண்வெட்டியையும் கடப்பாரையும் எடுத்துக் கொண்டு ரோடு போட்டுக் கொண்டே போகவேண்டும். தேர்தலுக்கு நிற்கின்றவர்களுக்கு இந்தக் கஷ்டம் தெரியும். கனம் மந்திரி அவர்களுக்கும் இது தெரிந்திருக்கவேண்டும். அவர்களும் இந்த ரோடுகளின் வழியாகப் போய் வோட்டுகள் வாங்கி யிருக்கிறார்கள். அப்பொழுது ரோடு போடுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்து, பிறகு அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவது கிடையாது. மேலும் பல பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும். உடனடியாக தேர்தல் நடந்தால்தான் மக்கள் பிரதிநிதிகள் ரோடுகள் போட வேண்டும், பாடசாலைகள் திறக்கவேண்டுமென்று தீர்மானங்கள் கொண்டு வந்து அவைகளை நிறைவேற்றி பொது ஜனங்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியும். Special Officer-கள் மக்களுக்கு அனுகூலமாக புதியதாக ரோடுகளைப் போடுவதும் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதும் கடினமான காரியம். ஆகையால் ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும்.

[Sri A. Govindaswamy Nayagar] [27th March 1954

"'ஜில்லா போர்டு தேர்தலை நடத்துவதற்கு பதிலாக நேரடியாக தாலூகா போர்டு தேர்தலையே நடத்தினால் வீண் செலவைத் தவிர்க்கலாம்,' என்று நண்பர் ஸ்ரீ ராஜா சிதம்பரம் அவர்கள் சொன்னார்கள். நண்பர் ஸ்ரீ பழனிசாமி கவுண்டர் அவர்கள் 'கனம் மந்திரி அவர்கள், தாலூகா போர்டு இருக்கவேண்டாமென்று ரகசியமாக வைத்துக் கொண்டிருக்கலாமென்றும்' சொன்னார்கள். ஏன், அவர்கள் சொல்லா விட்டால் எங்களுக்கு தெரியாமல் போய்விடுமா? நாங்கள் குருகமாகத் தெரிந்து கொள்ள முடியும். தாலூகா போன்ற குறுகலான இடத்தில் தேர்தல் நடத்தினால் காங்கிரஸ் வெற்றியடைய முடியாதென்றும் ஜில்லா போன்ற பரவலான இடத்தில் தேர்தல் நடத்தினால் ஒரு சமயம் காங்கிரஸ் ஜெயிக்கலாம் என்ற எண்ணம் சர்க்காருக்கு இருக்கலாம். ஆனால் நான் ஒன்று கேட்கிறேன், ஜில்லா போர்டுக்கு பதிலாக தாலூகா போர்டு ஏற்படுத்தினால் ஜில்லா போர்டு தலைவருடைய கதி என்ன ஆகும்? மேலும் ஜில்லா போர்டு தேர்தலுக்கு மற்றொரு தாலூக்காவில் இருப்பவர் நிற்கலாம். ஆனால் தாலூகா போர்டு தேர்தலுக்கு அந்தந்த தாலூகாவைச் சேர்ந்தவர்தான் நிற்க முடியும். உதாரணமாக கடலூர் தாலூகா போர்டு தேர்தலுக்கு விழுப்புரம் தாலூகாவைச் சேர்ந்தவர் நிற்க முடியாது. அதே மாதிரி விழுப்புரம் தாலூகா போர்டு தேர்தலுக்கு வேறு தாலூகாவைச் சேர்ந்தவர் நிற்கமுடியாது. ஜில்லா போர்டு தாலூகா போர்டாக மாற்றப்பட்டால், ஜில்லா போர்டு மெம்பர்களின் பதவி நீடிக்குமா அல்லது ரத்து ஆகுமா என்பதை சர்க்கார் சொல்லவேண்டும். சர்க்காருக்கு ஒரு திட்டவட்டமான கொள்கை இடையாது. ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸுக்கு majority கிடைத்து விட்டால் ஜில்லா போர்டையே நீடிக்க விட்டுவிடுவார்கள். அப்படி ஜில்லா போர்டு தேர்தலில் majority கிடைக்காவிட்டால் தாலூகா போர்டாகமாற்றி மறுபடியும் தேர்தல் நடத்துவார்கள். இப்படிச் செய்வதால் பொது மக்களின் பணம் வீணாகச் செலவழியும். பொது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி வீணாகத்தான் போகும். இந்த சர்க்கார் எந்த வாக்குறுதி கொடுத்தாலும் அதை நடைமுறையிலே நிறைவேற்றுவதில்லை.

"ஜில்லா போர்டு தேர்தலை ஒத்திப் போடுவதற்கு முதலில் voters list தயாராக இல்லை என்று சொல்லப்பட்டது. பிறகு ஆந்திர ராஜ்யம் பிரிந்தால் தேர்தல் ஒத்திப் போடப்பட்டது. இப்பொழுது நண்பர் ஸ்ரீ K. T. Raju அவர்கள் கூறியது போல் சர்க்கார் பல வேறு காரணங்களைக் கொண்டு தேர்தலை ஒத்திப் போடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தாலூகா போர்டு ஏற்படுத்துவதற்காக ஒரு கமிட்டி போட்டு அதற்கு சிறிது காலம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதனால் பொது மக்களின் பணம் வீண் விரயமாகும். இப்பொழுதிருக்கும் ஜில்லா போர்டு Special Officer-கள் பொது ஜனங்களோடு தொடர்பு கொள்ளுவதில்லை. பொது ஜனங்களோடு தொடர்பு கொள்ளவும் முடியாது. இப்பொழுது ஜில்லாவிலிருந்து M.L.A-க்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் மக்களுடைய பிரதிநிதிகள். அவர்களையும் Special Officer-களோடு ஒன்று சேர்த்து Ex-Officio மெம்பர்களாகக் போட்டு நிர்வாகம் நடத்தினால் பொது ஜனங்களுக்கு வேண்டிய ரோடுகளையும் பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்த அனுகூலமாயிருக்கும். சர்க்கார் ஏற்கனவே இந்தக் கொள்கையை ஒப்புக் கொண்டபோதிலும் இப்பொழுது இதை கைவிட்டு விட்டார்கள், காரணம் விளங்கவில்லை. அவர்களுக்குள் ஒற்றுமையில்லாதது தான் காரணமாயிருக்கவேண்டும்.

9-4 p.m. "ஜில்லா போர்டு தேர்தலை உடனடியாக நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நண்பர் ஸ்ரீ கலியாணசுந்தரம் அவர்கள் இந்த மசோதாவை ஒரு Select Committee-யின் யோசனைக்குவிட வேண்டும்மென்று கொண்டு வந்த திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்."

* SRI V. K. RAMASWAMY MUDALIAR :—"Mr. Speaker, Sir, the District Boards were abolished ten months back."

27th March 1954]

MR. SPEAKER :—" As a large number of hon. Members want to take part in the debate I fix a time-limit of five minutes for the speech of each hon. Member."

* SRI V. K. RAMASWAMY MUDALIAR :—" Now the Government have come forward with a proposal for extending the term of the present Special Officers by another six or seven months. Evidently the Government are not aware of the public feeling prevailing in the districts. Ever since the abolition of these Boards, we have completely lost touch with the masses with the result that we are very doubtful whether we will be in a position to face them again. There is already a feeling in the districts that the Special Officers of the District Boards do not take any interest whatsoever in the administration and that further they do not even find time to look after the work of these District Boards. That is the great difficulty. In some districts I am told reliably that the Personal Assistants to the Special Officers also do not administer the affairs properly. Again strict instructions, I understand, have been issued by the Government to the Special Officers to the effect that they should bring about effective retrenchment. The result is they are unable to do any work either with regard to the formation of the roads or opening of dispensaries or opening of schools and so on. There is so much of agitation everywhere and the public want that elections to these Boards should be held as early as possible.

" Sir, I have in my last speech requested the Government to terminate the appointments of the Special Officers and hold elections to the District Boards immediately. If they had done it, new Boards would have been formed by now and we would have been in touch with the masses. Now, on some pretext or other the elections have been postponed. There is also a proposal to revive the Taluk Boards. It is not known why these Taluk Boards were abolished and why now Government want to revive them. There are two sets of opinions on this question. Taluk Boards were found uneconomic and hence District Boards were revived. This is one view. Another view is that the District Boards are unwieldly and some Presidents are abusing their powers. The result is that some areas are neglected, and if the Taluk Boards are revived all these will go. Even if the Taluk Boards are revived the same difficulties will be there. Some of the Presidents will concentrate all the attention on their own constituencies and so on. Whatever it is, we must once and for all decide whether we should have Taluk Boards or District Boards. If it is necessary to have Taluk Boards, they should be revived. If not, we should have only the District Boards. However, it is not so easy to decide on the revival of these Taluk Boards within such a short time. Hence I am for holding the elections to the District Boards as early as possible.

" Sir, the re-organization committee report has not yet been published by the Government even though the Committee finished

its deliberations a few months back. The result is we do not know what its findings are. Though the Hon. Minister for Local Administration promised to place the report on the table of the House, he has not so far done it. Government must pay serious attention to the recommendations made by that Committee and take action on them. The Hon. Minister has just now given an assurance that in the ten districts of Tamilnad, elections would be completed before August and in the other three districts, namely, South Kanara, Malabar and the Nilgiris, the elections would be held before October 1954. I am quite sure if the Government want, they can hold the elections immediately and they can finalize the whole thing before the outbreak of the monsoon. It is not a very difficult thing and there is no point in going on extending the term of the present Special Officers indefinitely. Some hon. Members have said that the monsoon will interfere with the elections and so on. But whatever it is, elections can be held though not in March or April, at least in May and June. Within two months we can have the elections. The electoral rolls are ready Officers have been appointed in some districts and many of the Election Officers are now working at it. Therefore, elections can be conducted as early as possible. That is my humble opinion. Even though the Bill proposes to extend the term of the Special Officers I would request the Government to hold the elections as early as possible.

"With these words, Sir, I take my seat."

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, I am constrained to say that the approach of the Government regarding some of the important problems that face us is neither straight nor honest. Taking two important fields, on the economic side we have the agrarian question and on the administration side, we have the question of the decentralization of power. On both these the Government have been following a policy of indecision. That they are not approaching the problem in a straight manner is evidenced by the speech of the Hon. Minister for Local Administration who moved that the Bill be taken into consideration at once. That speech landed him in a bundle of contradictions. Sir, the purport of his speech is, 'We intend to bring in Taluk Boards in the place of District Boards' but the prayer is 'We therefore want time to conduct elections to the District Boards.' I cannot understand these inconsistent positions taken up by the Hon. the Minister for Local Administration. If the Hon. Minister had made a considered approach in the matter, what he ought to have asked of this House is that the Government want time to constitute Taluk Boards and therefore extension of time to the Special Officers should be given, though all of us may not like it, so that the question may be settled once and for all. It is plain that what the Government intend and what has been put forward as the important ground for the extension of the term of the Special Officers in charge of District Boards is their policy regarding the

9-10 p.m.

27th March 1954] [Sri M. Narayana Kurup]

creation of Taluk Boards, but curiously enough this important ground is not mentioned in the Preamble. This clearly shows that the Government have not yet come to any decision on this question. A High Power Commission for the redistribution of States could be appointed in a short space of time but to decide whether they want Taluk Boards or not and to appoint a Commission or a Committee to go into this question, the Government want a lot of time. It was some months back that the Hon. the Minister for Local Administration himself gave through the newspapers a vivid picture not only of the Taluk Boards but their constitution and their functions and almost every minute detail. Still, he would now say that the Government want to consider this question, that a Committee should be appointed to consider it and for considering the appointment of such a Committee the Government want some time. This indicates how the mind of the Government is moving. They have not yet decided whether to trust the people and whether they could give local institutions the powers which they deserve.

"Our Constitution lays down that power should be decentralized. Sir, it was Sri S. K. Patil who on his return from his tour of Western countries remarked that compared with local administration as it obtains in other countries, local administration in India is a travesty and a 'mockery'. That is the word he used. As I said the Government's approach was not honest. I will prove it. Immediately after this Congress Government came to power they passed the Madras Village Panchayats Act of 1950. Not only this but they also issued a pamphlet and gave it the pompous title 'Panchayat Raj'. The other day when the Hon. the Minister for Local Administration was answering a question as to how many panchayats were constituted under the Act of 1950, he was not able to say whether a single panchayat was constituted or not. That is the reason why I challenge the *bona fides* of this Government when they speak of decentralization of power and reconstitution of Taluk Boards. If I read it correctly, they will neither carry out the programme of elections to the District Boards nor will they reconstitute the Taluk Boards. As is evident from the Hon. Minister's speech this is the idea underlying the arguments put forward by the Government. I would certainly consent to a longer period of extension for the Special Officers, if only the Hon. the Minister in charge of Local Administration had the courage to say that here and now he would appoint a Committee to go into the question of local administration and that the Government intend to bring a comprehensive legislation in the near future on the recommendations of this Committee. These important questions are shelved and arguments and reasons are put forward which contradict each other.

"The Government must come to a decision on these important questions. Of course, the Opposition will not oppose the Government in any reasonable measures which they take and they will not hesitate to give ample time to the Government to bring forward a legislation which really intends to give power to the people. I

[Sri M. Narayana Kurup] [27th March 1954

concede, Sir, that when I plead for more powers to panchayats and local boards there is a risk involved in it but this risk is worth taking if the Government intend to give a fair trial to democracy in our country."

9-15 p.m. * SRI P. G. MANICKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து ஜில்லா போர்டு தேர்தல்கள் நடக்க வேண்டும் என்பதைப்பற்றி நான் சில சங்கதிகளைச் சொல்ல விரும்புகிறேன். ஜில்லா போர்டு நிர்வாகத்தில் முக்கியமாக நடந்துவருவது ஆஸ்பத்திரிகள். தாலூகாக்களிலுள்ள மக்களுக்கு கவர்ன்மெண்டாரால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகள் கிடையாது. ஜில்லா போர்டு நிர்வாகத்தில் தான் கிராமங்களில் நல்ல ஆஸ்பத்திரிகள் இருந்து இருக்கின்றன. சாதாரணமாக கோயம்பத்தூரை எடுத்துக்கொண்டால் ஜில்லா போர்டு இருந்த காலத்தில் ஆஸ்பத்திரி நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற்று வந்தது. தற்போது அதே ஆஸ்பத்திரிகளை நான் நேரில் சென்று பார்த்தேன். அப்படிப் பார்க்கும்போது அங்குள்ள நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை. ஔரளவு மருந்துகளாவது அதன் மூலமாக கிராம ஜனங்களுக்கு வைத்திய வசதி கிடைக்கும். ஆனால் அநேகம் ஆஸ்பத்திரிகளில் தேவைக்கேற்ற மருந்து வசதிகள் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதனால் தேர்தலவரும் வரையிலாவது ஜில்லாக்களிலிருக்கும் ஆஸ்பத்திரிகளில் வைத்திய வசதி செய்து கொடுக்கும்படி ஸ்பெஷல் ஆபீசருக்கு உத்தரவு அனுப்பிக்கவேண்டும் என்று கவர்ன்மெண்டை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, வரும் செப்டம்பர் மாதத்திற்குள்ளாகவே தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடுசெய்யவேண்டும். ஏனென்றால் செப்டம்பர் மாதம் அங்கு மலேரியா உண்டாகக் கூடிய காலம். சென்ற வருஷ ரிப்போர்ட்டை எடுத்துப் பார்த்தால் செப்டம்பர் மாதங்களில் அங்கு காலரா வந்திருப்பது நன்றாகத்தெரியும். அந்த மாதங்களில் தான் அதிகமான சாவுகள் ஏற்படுகின்றன. ஆகையினால் அந்த காலரா வரும் மாதத்திற்குள்ளாகவே அது வராமல் தடுப்பதற்கு ஸ்பெஷல் ஆபீசருக்கு உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்த செப்டம்பருக்குள் அங்கு எப்படிப்பட்ட பீதியும் ஏற்படாமல் இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கும்படி கவர்ன்மெண்ட் ஸ்பெஷல் ஆபீசருக்கு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" ஜில்லா போர்டுகளை எடுத்தால் மிகவும் கஷ்டமடைபவர்கள் இந்த ஹரிஜனங்கள்தான். எங்கள் கோயம்புத்தூர் ஜில்லா போர்டை எடுத்துக்கொண்டால் ஹரிஜன பிள்ளைகளுடைய படிப்பு வசதிக்காக ஒவ்வொரு ஹரிஜன ஹாஸ்டலிலும் பிள்ளைக்கு ரூ. 12 விகிதம் மான்யம் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இந்த ஸ்பெஷல் ஆபீசர் காலத்தில் அந்த மான்யம் கொடுக்கப்படவில்லை. அதைப்பற்றிக் கேட்டால் ஸ்பெஷல் ஆபீசர் 'பணம் இல்லை' என்று சொல்லுகிறார். கல்விக்காக கொடுக்கப்பட்ட மான்யத்திலே இப்பொழுது பணம் இல்லை என்று நிறுத்தி விட்டார்கள். கவர்ன்மெண்டானது ஹரிஜன ஹாஸ்டல்களில் வசிக்கும் மாணவன் ஒருவனுக்கு மாதத்திற்கு ரூ. 15 வீதம் கொடுக்கிறார்கள். இத்தொகையில் ஹாஸ்டலை நடத்துவது என்பது கஷ்டம். அதனால் ஏதாவது கூடுமான வரையில் அவர்களுக்கு மான்யம் கொடுத்து அதை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" இனிமேல் ஏற்படுத்தப்போகும் தாலூகா போர்டு சம்பந்தமாக சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கையொன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. அந்த அறிக்கையில் கண்டபடி ஹரிஜனங்களுக்கு என்று அதில் ஸ்தானங்கள் ஒதுக்கப்படவில்லை. அந்தத் தொகுதியில் ஹரிஜனங்களுக்கு என்று ஸ்தானங்கள் ஒதுக்காவிட்டாலும் அந்த ஏரியாவிற்கு 10 அல்லது 15 ஸ்தானங்கள் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு ஒதுக்காததற்கு காரணம் 'ஹரிஜனங்கள் பொதுத் தொகுதியில் வரலாம்; அப்படி வருவதற்கு சந்தர்ப்பம் இல்லாவிட்டால் பின்னால் ஸ்தானங்களை ஒதுக்கித்

27th March 1954] [Sri P. G. Manickam]

തുടരുന്നു' എന്നു പറയുന്നിടത്ത്. അതൊക്കെ കവനിച്ചു ഹരിജനങ്ങളുക്കു സ്ഥാനങ്ങൾ കിടക്കുമ്പടിയാണ വകുതി ചെയ്തു കൊടുക്കുമ്പടിയാക നാൻ കേട്ടുകൊൾഗിറേൻ.

* SRI C. H. KANARAN :—" മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഈ ബില്ലു കൊണ്ടു വന്നിരിക്കുന്ന മന്ത്രിമാർക്ക് ഈ അസെംബ്ലിയോടു അശേഷം ബഹുമാനമില്ലെന്ന് ഞാൻ ആദ്യമേ പറഞ്ഞുകൊള്ളട്ടെ. കാരണം, കഴിഞ്ഞ അസെംബ്ലി തിരഞ്ഞെടുപ്പു നടത്തുന്നതിന് അധികാരപ്പെടുത്തിയിട്ടുണ്ടു; അതിന്നുള്ളിൽ തിരഞ്ഞെടുപ്പു നടത്തിയില്ല. കാലാവധി അവസാനിക്കാൻ മൂന്നു ദിവസം മാത്രമുള്ളപ്പോൾ ഉമ്മാതിരി ഒരു ബില്ലു കൊണ്ടുവന്നിട്ടു 'ഇനി മൂന്നു ദിവസമേയുള്ളു. അതിനകം തിരഞ്ഞെടുപ്പു നടത്താൻ സാദ്ധ്യമല്ല, അതുകൊണ്ടു ഉടനെ ഈ ബില്ലു പാസ്സാക്കിത്തരണം' എന്നു പറയുകയല്ല വേണ്ടതു? തിരഞ്ഞെടുപ്പു നടത്തുന്നതിനും പുതിയ ബോഡുകൾ വരുന്നതിനും ഇവർ എതിരാണെന്ന് ഇതുകൊണ്ടു ഗ്രഹിക്കാമല്ലോ. അസെംബ്ലിയുടെ അഭിപ്രായം അറിയണമെന്നുണ്ടെങ്കിൽ നിർദ്ദേശിക്കാനും മൂന്നു ദിവസം മാത്രമുള്ളപ്പോഴല്ല ഈ ബില്ലു കൊണ്ടുവരേണ്ടതു. നിർദ്ദേശിക്കുണ്ടെന്ന് അസംബ്ലിക്കു അഭിപ്രായമുണ്ടെങ്കിലും നേരത്തെ പരിശോധിക്കാമായിരുന്നു. അസെംബ്ലി മറ്റൊരു തരത്തിൽ തീരുമാനിക്കുകയാണെങ്കിൽ, അതു യഥാർത്ഥം, തിരഞ്ഞെടുപ്പിനു കൂടുതൽ സമയം അനുവദിക്കേണ്ടതാണ് തീരുമാനിക്കുകയാണെങ്കിൽ ഉടനെ തിരഞ്ഞെടുപ്പ് നടത്താൻ ഗവർമ്മേണ്ടു തെയ്യാറായിരിക്കണം. അതിന്നുള്ള സമയം കണ്ടുകൊണ്ടു നേരമായിരുന്നു ഈ ബില്ലു കൊണ്ടുവരാൻ. ആ മട്ടിലല്ല ഇപ്പോൾ ഈ ബില്ലു ഇവിടെ കൊണ്ടുവന്നിരിക്കുന്നതു്. 'ഇപ്പോൾ തിരഞ്ഞെടുപ്പു നടത്താൻ സാദ്ധ്യമല്ല, കൂടുതൽ സമയം വേണം, അതു നിങ്ങൾ അനുവദിക്കണം, അനുവദിച്ചില്ലെങ്കിൽ ആകാശം ഇവിടെ ഭൂമിക്കുമാണ്, നിങ്ങൾ എന്തിത്തോ ആകാൻ ഇതു പാസ്സാക്കും' ഇതാണ് അവരുടെ മനോഭാവം. സർ, ഈ അസെംബ്ലിയോടു് അവർക്ക് അങ്ങേ അറ്റം അവജ്ഞയുള്ളതുതന്നാണ് ഇതുകൊണ്ടു വ്യക്തമാകുന്നതു്. ജനാധിപത്യമര്യാദ അശേഷം കാണിക്കാത്ത ഒരു നയമാണിതു്.

'സർ, തദ്ദേശസ്വയംഭരണസ്ഥാപനങ്ങളെ സംബന്ധിച്ചിടത്തോളം ഗവർമ്മേണ്ടിന്റെ നയമെന്തെന്നു പരിശോധിക്കേണ്ടതു അത്യാവശ്യമാണ്. പഞ്ചായത്തു ബോഡുകളുടെ കാര്യം തന്നെ എടുക്കാം: എന്തിനാണ് പഞ്ചായത്തു ബോഡുകളിൽ എക്സിക്യൂട്ടീവ് ആഫീസർമാരെ വച്ചിരിക്കുന്നതു്? ജനങ്ങളാൽ തിരഞ്ഞെടുക്കപ്പെട്ട പഞ്ചായത്തു ബോഡുകൾക്കു ശരി, ഡിസ്ട്രിക്ട് ബോഡുകളായാലും ശരി, സകലതിന്റെയും മേൽ എക്സിക്യൂട്ടീവ് ആഫീസർമാരെ വച്ചു ഭരിക്കാൻ ഇളപ്പെടുന്ന ഒരു ഗവർമ്മേണ്ടാണ് ഇവിടെയുള്ളതു്. എന്താണ് തിരഞ്ഞെടുപ്പു നടത്താത്തതെന്നു ചോദിച്ചാൽ 'ജില്ലാ ബോഡാണോ വേണ്ടതു താലൂക്ക് ബോഡാണോ വേണ്ടതു് എന്ന ആകാൻ ആലോചിച്ചുകൊണ്ടിരിക്കുകയാണ്' എന്നാണ് മന്ത്രിമാർ പറയുന്നതു്. സർ, ഇതു വെറും അസംബന്ധം, അന്യായം, nonsense അല്ലാതെ മറ്റൊന്നുമല്ല. ഈ കാര്യം നേരത്തെ പറയാത്ത ഗവർമ്മേണ്ടു വച്ചുചുരിയില്ല പറയുകയാണ്. എക്സിക്യൂട്ടീവ് ആഫീസർമാരെ വെയ്ക്കുന്ന ഭരണമാണ് ഈ ഗവർമ്മേണ്ടു ഇളപ്പെടുന്നതു്. തിരഞ്ഞെടുപ്പു നടത്തുന്ന പക്ഷം രാജ്യത്തു പല മാറ്റങ്ങളും ഉണ്ടാകും. അതു അവർക്കു ഇഷ്ടമല്ല. അതുകൊണ്ടു എക്സിക്യൂട്ടീവ് ആഫീസർമാരുടെ ഭരണം തുടരണമെന്നാണു അവരുടെ ആഗ്രഹം. അവർ പറയുംപോലെ കേൾക്കുന്ന ഒരു ഭരണമാണ് അവർക്കു വേണ്ടതു്. അതിനു എക്സിക്യൂട്ടീവ് ആഫീസർമാർതന്നെ ഭരിച്ചാലെ പറ്റൂ. ഇതാണു അവരുടെ മനോഭാവം. ജില്ലാ ബോഡാണോ താലൂക്ക ബോഡാണോ വേണ്ടതെന്നു ഇത്രയും കാലമായിട്ടും ഇവർക്കു തീരുമാനിക്കാൻ കഴിഞ്ഞിട്ടില്ല എന്നു ഞാൻ ചോദിക്കുന്നു. എത്ര കാലമായിട്ടു ഇവർ ആലോചിക്കുന്നു? മന്ത്രിമാർ ഇതിനെപ്പറ്റി പ്രസ്താവനകളിറക്കിയിട്ടു തന്നെ കാലമെത്രയായി? ഞാൻ പറയുന്നു, നിങ്ങൾക്കു തീരുമാനിക്കാനറിയില്ലെങ്കിൽ ഈ അസെംബ്ലിയുടെ മുമ്പിൽ വയ്ക്കൂ, ഈ അസെംബ്ലിയുടെ നിഷ്പക്ഷമായ അഭിപ്രായത്തിനു വിടുക. ബോഡിനെ മാത്രമോ പാർട്ടിയുടെ മേലിൽ ആളുകളെ പിടിച്ചു നിർത്താതിരിക്കുക ശരിയായ ഒരു തീരുമാനം ഈ അസെംബ്ലി ഉടനെ എടുത്തുകൊള്ളും. ഒൻപതോ പത്തോ മാസമായിട്ടും നിങ്ങൾക്കു തീരുമാനിക്കാൻ കഴിയാത്ത കാര്യം ഈ അസെംബ്ലിക്കു മാറ ദിവസംകൊണ്ടു തീരുമാനിക്കാൻ കഴിയും. അതിന്നു നിങ്ങൾ എന്തുകൊണ്ടു സമ്മതിക്കുന്നില്ല? നിങ്ങൾ ജനാധിപത്യത്തിന്റെ കക്ഷ

9-30 p.m.

[Sri C. H. Kanaran] [27th March 1954

9-25 p.m. காரனாண், நிங்ளல் புத்தியுடேயும் ஜ்ஞானத்தினேரயும் கத்தகக்காரனாண், எந்னுள்ள ஒரு மனோபாவம் வச்சுகொண்டாண் நிங்ள் பரிக்குன்னது. எந்தாண் ஈ ஸ்ட்டிவ்ஸ்டினேர அர்த்தம் ? ஈ ராஜ்யத்திலெ ஜனங்ளுடெ வோட்டவகாசத்தெ அவர் நிக்ஷேதிச்சிரிக்கயாண். ஈ ராஜ்யத்திலெ ஜனங்ளெ அவர் அவமதிக்கயாண், நிந்திக்கயாண். இனி, கலாவதி நீட்டியெந்ன தானெ வந்னு எந்னால் அவதிரஞ்ஞுடப்பு நடத்தூமோ ? இல்ல. அங்ஙனெ ஒரு பாரம்பர்யமாண் இவக்குள்ளது. இதினெ மூன்னு ரண்டு ப்ராவஶ்யம் நீட்டிவெக்கு இது மூன்னாம் ப்ராவஶ்யாண். ஈ கலாவதிக்கு நிங்ளெ திரஞ்ஞெடுப்பு நடத்தூமென்ன ஆர்க்கு பறயான் ஸாதிக்கும் ? நிங்ளெ பறத்தாக்கான் வல்ல வழியுண்டோ என்ன நோக்குகயுண்டாயி, நிங்ள் திரஞ்ஞெடுப்பு நடத்தூமென்ன் ஆஶிச்சிரிக்குன்னது. அம்பதுமரண் நிங்ள் பறயுன்னரில் ஸத்யஸந்தயுடெ கணிகயெங்கிலுமுண்டோ என்ன ஞான் சோதிக்குன்னு. எத்ரயெத்ர தீவ்ரமாயிட்டு நிங்ளெ கப்பத்தாயில் வலிச்செரிஞ்ஞு ! எத்ர மகுட வாசம்மாயிட்டு நிங்ள் பிச்சிபிரிஞ்ஞு காரில் பறஞ்ஞு ! இதாணொ நிங்ளுடெ ஜனாதிபத்யம் ? '

* SRI MOHAMAD SALIH MARACAIR :—" கனம் சபா நாயகர் அவர்களே. ஜில்லா போர்டு சம்பந்தமாக சர்க்கார் அனுஷ்டிக்கும் கொள்கை ஜனநாயகத்திற்கு விரோதமானது. பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜில்லா போர்டு பிரதிநிதிகளின் காலம் முடிந்தாலும் மறு தேர்தல் நடக்கும் வரை அவர்களின் பதவி விலக்கும்படி செய்ய வேண்டியதாக இருக்க, சர்க்கார் அந்த மெம்பர்களை ஒழித்துவிட்டு ஜில்லா போர்டு நிர்வாகத்தை ஸ்பெஷல் ஆபீசர் கையில் ஒப்படைத்து விட்டார்கள். ஜில்லா போர்டு நிர்வாகம் ஸ்பெஷல் ஆபீசரின் கையில் போனவுடன் பொதுஜனங்களுக்கு ஏற்பட்டிருந்த கல்வி வசதி, வைத்திய வசதி, ரோடுவசதி, ஆகிய வசதிகள் எல்லாம் அடியோடு மறுக்கப்பட்டுவிட்டன. கிராமப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் பதிலாய் ஆடுமாடுகளை அடைக்கின்றனர். கிராம ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் இல்லாமலும், டாக்டர்கள் இல்லாமலும், இருப்பதால் ஏழை எளிய மக்கள் வைத்திய வசதியின்றி ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள்.

" ரோடுகள் பராமரிக்கப்படாமல் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் மக்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். முன்பு ஜில்லா போர்டுகளில் கிராம மக்களின் நலனை உத்தேசித்து பள்ளிக்கூடம் ஏற்படுத்தவும், கிராம ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தவும், கிராம ரோடுகள் போடவும் பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவைகளை எல்லாம் அமுல் நடத்தாமல் இந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் அவைகளை மூட்டை கட்டி மூலையில் வைத்துவிட்டார்கள். குறிப்பாக மன்மேற்குடி என்ற ஊரிலுள்ள 'ரூரல்' டிஸ்பென்ஸரியை 'பக்கா' டிஸ்பென்ஸரியாக அமைப்பதற்கு தஞ்சாவூர் ஜில்லா போர்டில் தீர்மானம் செய்யப்பட்டு ஜில்லா போர்டு பட்ஜெட்டிலும் அதற்குத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் வருஷம் ஒன்றுக்கு மேல் ஆகியும் அந்த டிஸ்பென்ஸரியை பக்கா டிஸ்பென்ஸரியாக மாற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதனால், அங்குள்ள சுமார் இருபத்தையாயிரம் ஜனங்கள் வைத்திய வசதியின்றி கஷ்டப்பட்டு வருகிறார்கள். இதைப்பற்றி நாங்கள் சொல்லும் வார்த்தைகள் எல்லாம் ஸ்பெஷல் ஆபீஸர்கள், ஜில்லா அதிகாரிகள் இவர்களின் காதில் விழமாட்டேன் என்கிறது. 'செவிடன் காதில் ஊதிய சங்கைப்போல்' தான் பயனற்றதாகவும் ஆகிறது. இதைப்பற்றி பல மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அந்தக் குறைகளுக்கு விமோசனம் எதுவுமே ஏற்படவில்லை. மக்களுடைய நன்மைக்காக வகுக்கப்பட்ட திட்டங்கள் பல இன்னும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றன. இந் நிலையில் இப்படிப்பட்ட ஸ்பெஷல் ஆபீஸர்கள் ஆயுட்காலத்தை இன்னும் நீட்டித்துக்கொண்டே போவதற்கு சர்க்கார் அக்கரை கொண்டிருப்பது ரொம்பவும் விசனிக்கத்தக்க விஷயமாகும். இந்த ஜில்லா போர்டுகளை எல்லாம் ஒழித்துவிட்டு தானாகா போர்டுகளை ஏற்படுத்தப்போவதாக சர்க்கார் முன்பு ஒரு ஆசை வார்த்தை காட்டிற்று. அதை கிராம ஜனங்கள் எல்லோரும் வெகு சந்தோஷத்துடன் வரவேற்கத் தயாராக இருந்தார்கள். ஆனால் நமது

27th March 1954] [Sri Mohamad Salih Maracair]

மந்திரி அவர்கள் பேச்சிலிருந்து புதியதாக அமைக்கப்போகிறோம் என்று சொல்லப்பட்ட தாலூகா போர்டுகள் என்ற சிசு கர்ப்பத்திலேயே 'அபார்ஷன்' ஆகிவிட்டது என்று அறிகிறேன். (சிரிப்பு). ஆகையினால் ஸ்பெஷல் ஆபீஸர்களின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே போகாமல், உடனடியாக ஜில்லா போர்டுகளின் தேர்தலை கூடிய சீக்கிரத்தில் நடத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri S. RADHAKRISHNAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா போர்டு கால வரம்பை ஒத்திவைக்கிற இந்த நிலைமையில் நான் பேசும்போது கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராஜா சிதம்பரம் ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். அதாவது, ஜில்லா போர்டு தேர்தல் விஷயத்தில் அரசாங்கம் எவ்வளவு கடிசி நேரத்தில் வந்து என்ன காரியம் செய்கிறது என்பதைப்பற்றி ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். அதை விட, அரசாங்கம் எப்படி கடைசி நேரத்தில் வந்து தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளுகிறார்கள், அதற்கு என்ன காரணத்தைச் சொல்லுகிறார்கள் என்பதற்கு நான் ஒரு உதாரணத்தைக் கொடுக்க விரும்புகிறேன். குடிப்பழக்கம் உள்ள ஒருவன் குடித்துவிட்ட பிறகு ஒரு சபதம் எடுத்துக்கொண்டதாகச் சொல்லுவார்கள். 'நாளை முதல் நான் குடிக்கவே போவதில்லை', 9-30 p.m. என்று காலையில் சத்தியம் செய்து சொல்லுவான். ஆனால், சாயங்காலம் ஆனவுடனே மறுபடியும் குடிக்க ஆரம்பித்து விடுவான். அதற்கு மறுநாள் காலையில் பார்த்துக் கேட்டால், 'நாளை முதல் குடிப்பதே கிடையாது; இது நிச்சயம்' என்று மறுபடியும் சத்தியம் செய்வான். இப்படியாக தினசரி அவன் சொல்லிக்கொண்டேயிருந்து, குடித்துக்கொண்டே இருப்பான். இது குடிப்பவனுடைய பழக்கம். அதேபோல் அரசாங்கத்தாரும் மயக்க போதையில் சட்ட வரம்பைக் கையாளுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது. ஏனென்றால், 'ஜில்லா போர்டு தேர்தலை இன்னும் சில மாதங்களில் நடத்திவிடப் போகிறோம்' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, மீண்டும் மீண்டும் தேர்தலை ஒத்திவைப்பதற்காகவே திருத்த மசோதாக்களை சபை முன் கொண்டு வந்திருக்கிறார்கள். முதல் மந்திரி கனம் ராஜாஜி அவர்கள், 'கண்டிப்பாக ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடத்திவிடுகிறோம்,' என்று வாக்குறுதி கொடுப்பதுபோல் சொன்னார்கள். ஆனால், இந்தக் காலவரம்பு இந்த மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள் முடிவடைகிறது. அவர் முதல் மந்திரியாக இருந்தால் கண்டிப்பாக தேர்தலை நடத்திவிடுவார் என்று நினைக்க முடிகிறது. ஆனால், அவரும் முதல் மந்திரி பதவியிலிருந்து போய்விடுவார்போல் தெரிகிறது. இதை நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், கனம் ஸ்ரீ. ராஜாராம் நாயுடு அவர்கள், அக்டோபர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் ஒரு காலவரம்பை கேட்டிருக்கிறார்கள். அதேமாதிரி முதல் அமைச்சர் குறிப்பிட்ட காலவரம்பு கடைசி நேரத்தில் மாறிவிடுமோ என்ற சந்தேகமாக இருக்கிறது. இப்படி அவர்கள் தேர்தலை ஒத்திவைத்துக்கொண்டே போவதில் அர்த்தமில்லை. ஆந்திர ராஜ்யம் பிரியப் போகிறது என்ற காரணங்களை முன்பு சொல்லி வந்தார்கள். ஆனால், முதலில் 6 மாதங்களும், பிறகு 9 மாதங்களும் தவணை கேட்கப்பட்டது. தேர்தல் தேதியை இன்னும் ஒத்திவைத்துக் கொண்டு போவதற்கு இப்பொழுது அனுமதி கோருவது மிகவும் வியப்பாக இருக்கிறது. இவ்விதமாக அடிக்கடி தவணை கேட்பதைப் பார்த்தால், சாதாரணமாக பள்ளிக்கூடத்தில் படிக்கும் பையன் சொல்லக்கூடிய காரணத்தைப்போல இருக்கிறது. பரீக்ஷைக்குப் போகக்கூடிய ஒரு பையன் சாதாரணமாக, பல மாதங்கள் ஒன்றும் படிக்காமல் இருந்துவிட்டு, அல்லது படித்துக்கொண்டிருந்துவிட்டு, கடைசி நேரத்திலும் அந்தப் புஸ்தகத்தை பிரித்துப் படிக்க ஆரம்பிப்பான். அதைப்போல அரசாங்கம் எத்தனையோ மாதங்களாக இந்தத் தேர்தலை ஒத்திவைத்துக் கொண்டிருந்துவிட்டு, தேர்தலை நடத்திவிடுவதாகப் பல தடவைகளில் வாக்களித்திருந்துவிட்டு, இப்படிக் கடைசி நேரத்தில் தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமென்று மசோதாவைக் கொண்டுவருவது அவ்வளவு பொறுத்தமாகத் தோன்றவில்லை. ஆறு மாதங்கள் ஒத்திவைக்கப்பட்டிருந்தபொழுது சர்க்கார் என்ன செய்தார்களென்று தெரியவில்லை. ஆனால், இந்த மந்திரி சபையிலே

[Sri S. Radhakrishnan] [27th March 1954

இருக்கிற குழப்பத்தைப்போல மற்ற திட்டங்களையும் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய மந்திரிகள் பொதுஜனங்களிடையே போகும்போது, ஆங்காங்கு பிரசாரம் செய்யும்போது தங்கள் இஷ்டப்படி சொல்லிவிடுகிறார்கள். எதோ சில வருஷங்களுக்குள் தாலூகா போர்டுகளை கட்டாயமாகக் கொண்டுவரப்போகிறோம் என்று கனம் ஸ்ரீ ராஜாராம் அவர்கள் சொல்லுகிறார். ஆனால் மந்திரி சபையிலும் பிளவு இருப்பது எனக்குத் தெரியும். 'தாலூகா போர்டைக் கொண்டு வரப்போகிறோம்,' என்று மந்திரி அவர்கள் சொல்லுகிறாரே தவிர, கட்சியில் என்ன சொல்லுகிறார்களோ தெரியாது. அது வேறு மாதிரியாக இருக்கலாம். அது உண்மையாகப் போய்விட்டது. தாலூகா போர்டு கொண்டுவராததற்குக் காரணம் மந்திரியார் சொன்னபோது, ஜில்லா போர்டு நிச்சயமாக வரப்போவதாகத் தெரிகிறது; இருந்தாலும் நடுத்தரமாகச் சொல்லியிருக்கிறார். நிபுணர் குழு அமைத்து, அதிலே ஒரு ஆராய்ச்சி செய்ய விரும்புவதாகச் சொல்லி இருக்கிறார். ஆனால், உண்மையிலேயே காரியத்தை முடிப்பதற்கு ஆகுமா, அல்லது இன்னும் ஆறு மாதங்கள் நீடிப்பதற்கு ஒரு காரணமாக இருக்குமா என்று சந்தேகம் இருக்கிறது. இந்தக் கமிட்டி போடுவது, ஆராய்ச்சி செய்வது இவைகளெல்லாம் வழக்கமாகச் சொல்வதுபோல இருக்கிறதேயொழிய, காரியத்தில் நடைபெறுவதாகத் தெரியவில்லை. கேள்வி நேரத்தில் எந்தக் கேள்வியைக் கேட்டாலும், பொதுவாக 'யோசனை செய்து கொண்டு வருறோம்' என்று தான் சொல்லுகிறார்கள். யோசனை எப்பொழுது முடியுமென்பது தெரியாது. ஆராய்ச்சிக் கமிட்டி போட்டு யோசனை செய்வதென்றால், எத்தனை வருஷங்கள் ஆகுமோ தெரியாது. இவர்கள் குறிப்பிட்ட காலவரம்பைக் கடந்து இன்னும் தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமென்று திரும்பவும் கடைசி நேரத்தில் ஒரு திருத்த மசோதாவைக் கொண்டு வந்தாலும் ஆச்சரியமில்லை.

"நாங்கள் போனதடவை பேசும்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட கமிட்டி அமைத்து அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு காரியங்களைச் செய்யக்கூடிய அளவிற்கு ஸ்பெஷல் ஆபீஸர்கள் நியமனம் ஏற்படவேண்டுமென்று அளவில் பேசினேன். ஆனால், அந்த ஸ்பெஷல் ஆபீசர் இதுவரை ஒன்றும் செய்யவில்லை. ஸ்பெஷல் ஆபீசருக்கு கிராமத்தில் தொடர்பு இல்லாததால் தங்கள் இஷ்டப்படி காரியங்களைச் செய்கிறார்கள். எதிர்பார்த்த அளவுக்கு ஸ்பெஷல் ஆபீசர்களுடைய மேற்பார்வையில் ஜில்லா போர்டுகள் நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் நடைபெறவில்லை. தோழர் ஸ்ரீ கல்யாண சுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை ஆதரித்து என்னுடைய பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்."

9-35 p m. * SRI V. MADANAGOPAL :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஜில்லா போர்டு தேர்தல் ஒத்திவைப்பு மசோதாவைப்பற்றிய திருத்தத்தை ஆதரித்து சர்க்காரின் கவனத்திற்கு சில விஷயங்களைக் கொண்டு வருகிறேன். ஆளும் கட்சிக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் இந்த மசோதா மூன்றாவது தடவையாக இந்தச் சபையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இம்மாதிரி செய்வது ஜனநாயகத்தை இழிவுபடுத்துவதாகும். ஜில்லா போர்டு தேர்தலை ஒத்திவைப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. அவை கனம் மந்திரி அவர்கள் சொன்ன காரணங்கள் அல்ல. முதலாவது காரணம், சர்க்காருடைய கையில் செத்த பிரேதமாகக் காட்சியளிக்கும் புதிய ஆரம்பக் கல்வி திட்டம் இருக்கிற வரைக்கும் இந்த ஜில்லா போர்டு தேர்தலை சர்க்கார் நடத்தப் போவதில்லை. அவ்வாறு தேர்தல் நடந்தால் சர்க்கார் கட்சிக்கு படுதோல்வி கிடைக்கும் என்பது நிச்சயம். நான் கூறுவது பொய் என்று சொன்னால் உடனே தேர்தல் நடத்திப் பார்க்கட்டும், அப்போது தெரியும். பெரும்பாலான விவசாயிகள் அளிக்கக்கூடிய தீர்ப்பு அந்தத் தீர்ப்பு ஆளும் கட்சிக்குள்ள செல்வாக்கை குறைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இரண்டாவது காரணம், இன்றைக்கு இருக்கக்கூடிய ஜனநாயக உரிமைகள்

27th March 1954] [Sri V. Madanagopal]

மீதும் சர்க்காருக்குப் பயம் ஏற்பட்டுவிட்டது. காரணம், சமீபத்தில் நடந்த பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுகள் மகாநாட்டில் பல புதிய கோரிக்கைகளை வற்புறுத்தியிருக்கிறார்கள். இதைபோன்றே ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிடிகளும் பற்றுக்குறையைச் சரிக்கட்ட நிதி உதவியும் இதர உரிமைகளையும் கோருகின்றன. இவைகளைத்தவிர்க்கும் முறையில் இன்றுள்ள அதிகாரங்களை மாற்றி அமைத்து, புதிய வரி விதிக்கும் அதிகாரம் கொண்ட சபைகளாக மாற்றுவதற்கே சர்க்கார் தாலூகா போர்டு என்ற தனது புதிய திட்டத்தை அறிவிக்கிறது. தற்பொழுது நடைபெறும் ஸ்பெஷல் ஆபீஸர் ஆட்சி என்பது அழிந்த நந்தவனத்தில் ஆடு மேய்ந்தால் என்ன கழுதை மேய்ந்தால் என்ன என்ற கதையாக உள்ளது.

"மதுரை ஜில்லாவில் ஜில்லா போர்டினகீழ் உள்ள சந்தைகளின் சுங்க வரி திடீரென பலமடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு அணுவாக இருந்த ஒரு தலை சுமைக்கு இன்று நான்கு அணுவென்றும் பத்தணுவாக இருந்த ஒரு வண்டிக்கு தற்பொழுது ஒன்றரை ரூபாயாகவும் சுங்கவரி உயர்த்தப்பட்டுள்ளது. வருகின்ற ஏப்ரல் முதல் தேதி இவை அமுலுக்கு வரப்போகிறது. ஜில்லா முழுவதும் உள்ள விவசாயிகளும், சிறு வியாபாரிகளும் வரி உயர்வை எதிர்த்து கடுமையான ஆக்ஷேபணை செய்வார்கள். இவ்விதம் வரியை உயர்த்தியதால் ஜில்லா போர்டின் வருமானம் உயர்ந்துள்ளதா என்றால் இல்லை. இந்த வரி உயர்வால் கான்ட்ராக்டருக்குத்தான் கொள்ளை. சென்ற வருடம் எந்தத் துகைக்கு ஏலம் விடப்பட்டதோ அதே துகைக்குத்தான் இவ்வருடமும் ஏலம் விடப்பட்டுள்ளது. நியாயமும் அவசியமும் இல்லாத இந்தச் சுங்க வரி உயர்வை கைவிடு. ஏற்கனவே தலைமைக்கு அமுலில் உள்ள ரேட்டுப்படி வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமெனச் சர்க்காரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

"ஜில்லா போர்டுகளின் மூலம் போடப்படும் ரோடுகள் பற்றி சரியான கண்காணிப்பு இல்லாததால் பலவித ஊழல்களும், பணவிரயமும், பொதுஜன அதிருப்தியும் ஏற்படுகிறது. திண்டுக்கல் தாலூகா, வேடசந்தூர் பிர்க்காவைச் சேர்ந்த ஒட்டநாகம்பட்டிக்கு ஒரு ரோடு போடப்பட்டிருக்கிறது. 5½ பர்லாங்கு நீளம் ரோடு போட்டால் போதும். 6 பர்லாங்கிற்கு பணம் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளது. அரை பர்லாங்கு நீளத்திற்கு அந்த சிறு ஊரில் உள்ள வீடுகள் இடிக்கப்படுகிறது. இது அவசியமற்றது, அநீதியானது என்று அந்த ஊர் ஜனங்கள் கூறினாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைக் கவனிப்பதில்லை. இதேபோன்று ஷெ திண்டுக்கல் தாலூகா, பாளையம் பிர்க்காவைச் சேர்ந்த வெள்ளோடு கிராமத்தில் கிராம சந்தைக்கு மேல் புறமாக ஒரு நல்ல புகையிலைத் தோட்டத்தின் நடுவில் ரோடு போட பிளான் செய்யப்பட்டுள்ளது. இதனால் 30 ஆயிரம் ரூபாய் பெருமான தோட்டமே நாசமாகும். ஏற்கனவே உள்ள பாதையிலேயே ரோடு போட்டால் ஷெ தோட்டம் பாதிக்காது. இதைப்போன்ற ஷெ தாலூகா கெண்டய கவுண்டனூர் அருகிலும் பல விவசாயிக்குப் பாதிப்பு ஏற்படும் முறையில் ரோடு போடப்படுகிறது. ரோடு போடும் கான்ட்ராக்டர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வைத்ததுதான் சட்டமாக உள்ளது. இந்நிலை தவிர்க்கப்படவேண்டும். விவசாயிகளின் நிலங்கள் பூரண பாதிப்புக்குள்ளாகாத முறையில் ரோடுகள் பிளான் செய்யவேண்டுமெனச் சர்க்கார் அறிவிக்கவேண்டும்.

"இன்றுள்ள ஸ்பெஷல் ஆபீசர்களால் இவை எல்லாவற்றையும் கண்காணிக்க முடியாத நிலை இருப்பதால் உடனடியாக ஜில்லா போர்டு தேர்தலை நடத்தவேண்டுமெனக் கூறிக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்."

* **Sri S. RAMASAMY NAIDU**:—"கனம் சபாநாயகர் அவர்களே, நம் நாட்டில் 100-க்கு 80 பேர்கள் கிராமத்தில் வசிக்கிறார்கள். கிராம்த்துக்கு எந்தவிதமான ஆட்சி தேவையென்று தீர ஆலோசித்து முடிவு செய்யவேண்டும். கிராம மக்கள்தான் இன்றைக்கு நம் நாட்டின் ஜீவநாடிகளென்பதை நாம் அறிவோம். கிராம மக்கள் இன்றைக்கு 9-40 p.m.

[Sri S. Ramasamy Naidu] [27th March 1954

மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். ஆகவே, கிராம வாழ்க்கை நல்ல முறையில் நடப்பதற்கும் கிராமங்களுக்கு வேண்டிய சகல வசதிகள் செய்து கொடுப்பதற்கும் ஆதாரமான ஒரு ஸ்தல சுய ஆட்சியை நிர்ணயிக்க வேண்டியது மக்களுடைய பிரதிநிதிகளாகிய நம்முடைய கடமை. இன்றைக்கு ஆளும் கட்சியாளர் தாங்கள் தேர்தலில் தோற்றுப்போய் விடுவார்கள், மற்றவர்கள் ஜெயித்துவிடுவார்கள் என்று எண்ணி அதற்கு அனுகூலமாக தேர்தலை சிறிது காலம் ஒத்திப்போட்டிருக்கிறார்கள் என்று சொல்லுவது தப்பு அபிப்பிராயம். காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு அனுகூலமான நிலைமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற தப்பு அபிப்பிராயத்தைக் கற்பித்து அதற்காக அவர்கள் தேர்தலை ஒத்திப் போடுகிறார்கள் என்று சொல்லுவது எந்த வகையிலும் பொருந்தாது என்று நாம் உணரவேண்டும். சர்க்கார் சிப்பந்திகளைக்கொண்டு ஜில்லா போர்டுகளை அரசாங்கம் நடத்தினால் சர்க்கார் சிப்பந்திகள் காங்கிரஸ் கொள்கையை எவ்வளவு தூரம் பரப்புவார்களென்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே அந்த எண்ணம் வாஸ்தவத்தில் அவர்கள் உள்ளத்தில் உள்ளதில்லை. பேச்சில்தான் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இந்த சர்ச்சையை விட்டுவிடுவோம். தாலூகா போர்டுகளை நியமிப்பதற்கும் ஜில்லா போர்டுகளுக்கு மறுபடியும் ஒரு உயிர் கொடுப்பதற்கும் எந்த முறையில் செய்யவேண்டுமென்று தீர ஆலோசிக்க வேண்டியது அவசியம். அப்படி ஆலோசிப்பதற்காக இடுங்காலம் தேர்தலை ஒத்திவைக்காமல் கூடிய சீக்கிரம் அதை நடத்தவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் சர்க்கார் சில மாதங்கள் அவகாசம் கோரி இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சர்க்காரின் கொள்கையிலே எண்ணத்திலே எந்த விதமான கலமிஷமும், தோஷமும் கற்பிக்க அவசியமில்லையென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"நம் நாட்டிலே கிராமங்களில் ஸ்தல சுய ஆட்சியில் பலவிதமான தீர்வைகள் விதிக்கப்படுகின்றன. கிராமத்திலே பஞ்சாயத்து விதிக்கும் தீர்வை வேறு, தாலூகா விதிக்கும் தீர்வை வேறு, ஜில்லா போர்டு விதிக்கும் தீர்வை வேறு, சர்க்கார் நேரடியாக வசூல் செய்து ஸ்தல ஆட்சி சபைக்குப் பிரித்துக் கொடுக்கும் தீர்வை வேறு என்று பலவிதமான தீர்வைகள் வசூலிக்கப்படுகின்றன. தீர்வைகளை வசூலிப்பதில் பலவிதமான பழைய மாமூல்களும் புதிய ஏற்பாடுகளும் சேர்ந்து பல கஷ்டங்களை உண்டாக்குகின்றன. ஒரு சுலபமான வழியில் ஒரு முகமாக ஒரே இடத்தில் வரிவசூலை வைத்து பல கிராமங்களுக்கும் பல கிராமங்கள் சேர்ந்த ஒரு வட்டத்துக்கும் வெகு கிராமங்கள் சேர்ந்த ஒரு பெரிய வட்டத்துக்கும் வரிகள் பிரித்துக் கொடுப்பதற்கு ஆலோசனை செய்வது மிக அவசியம். பலதப்பட்ட வரிகளை பலவிதமாக வசூல் செய்வதால் கிராம மக்கள் கஷ்டப்படும்படியான நிலைமை ஏற்பட்டு பின்னால் கிராமங்களுக்குப் பணம் நேரடியாக சேரவேண்டிய முறையில் சேரவேண்டிய அளவில் போய்ச்சேருவதில்லை. உடனே கிராமப் பரிபாலன விஷயத்தை தீர ஆலோசித்து ஆவன செய்யவேண்டியது மிக அவசியம். கிராமங்கள் செழிப்பாக இருந்தால் கிராமப் பிரதிநிதிகளாகிய நாம் எல்லோரும் சந்தோஷப்படக்கூடும். இன்றைக்கு நாம் கிராமப் பிரதிநிதிகள் என்பதை விட்டுவிட்டு எந்தக் கட்சியின் பெயரால் இங்கே அங்கத்தினராக இருக்கிறோமோ அந்தக் கட்சியின் கொள்கையைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும் நிலைமையிலிருக்கமோ தவிர, வாஸ்தவத்தில் நம் கிராமத்திலிருக்கக்கூடிய ஏழை விவசாயிகள் நன்றாக வாழவேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருப்பதாக மற்றொருவர் நினைக்கும்படி நாம் பேசுவதுமில்லை, காரியங்களைச் செய்வதுமில்லை. உதாரணமாக கால்பந்தை அடிக்கும்போது அதை மற்றொருவன் வலையில் தள்ளிவிடவேண்டுமென்று பந்தின்மேல் அதிகமான பிரியம் வைத்து அதை ஒவ்வொருவரும் உந்தி உதைத்து உதைத்து தள்ளுகிறோம் என்ற காரியம்போல, நாம் எல்லோரும் சேர்ந்து அன்பு காட்டுகிறோம் என்ற காரணத்துக்காக இன்றைக்கு கிராம மக்கள் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதேயொழிய, அவர்கள் சந்தோஷப்படும்படியான காரியங்களை நாம் நடத்துவதில்லை. ஆகவே எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கட்சியை மறந்துவிட்டு

27th March 1954] [Sri S. Ramasamy Naidu]

கிராம பரிபாலனம் நல்ல முறையில் நடக்கவேண்டுமானால் அரசியல் சம்பந்தமில்லாமல் கிராம மக்கள் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கும் நல்ல சுகாதார வசதியோடும் பாட்டை வசதியோடும் வாழ்வதற்கும் நல்ல முறையில் விவசாயப் பொருள்களை பணமாக்குவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி செய்யவேண்டும்.''

*Sri N. C. RAMASAMY KANDER :—" கனம் சபாநாயகர் அவர்களே, நமது ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நான் ஆதரித்துச் சில விஷயங்களை எடுத்துச் சொல்லி சில குறைகளையும் பேச முன் வந்துள்ளேன். அதாவது ஜில்லா போர்டு இருந்த காலத்தில் அங்குள்ள ஜில்லா போர்டு பிரசிடெண்ட்கள், மற்றமுள்ளவர்கள் அதிகமான குறைகளைச் செய்துவிடுகிறார்கள். அவர்களை சீக்கிரத்தில் விலக்கிவிட்டு கவர்னமெண்ட் மூலம் ஸ்பெஷல் ஆபீஸர்களை நியமித்தால் ஜில்லா போர்டுகள் நல்ல முறையில் நடக்கும் என்றும் நேர்மையாக ஸ்பெஷல் ஆபீஸர்களும் நடந்துகொள்வார்கள் என்றும், அங்கு 72 மெம்பர்கள் நடத்திய நிர்வாகத்தை நாம் எல்லோரும் சேர்ந்து வோட்டு அளித்து அதை ஒழித்தோம். பிறகு அங்கு என்ன நடந்தது ? வட ஆற்காட்டில் தற்போது ஸ்ரீ சுந்தரம் என்ற ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் இருக்கிறார். எழுபத்திரண்டு பேர்கள் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரியைவிட அவர் நேர்மையாக நடந்துகொள்ளுவார் என்று சர்க்கார் அவரை நியமித்தார்கள். ஆனால் அவர் வந்தவுடன் என்ன நடக்கிறது. வட ஆற்காடு ஜில்லா போர்டு சம்பந்தமான பாட்சாலைகளுக்கு அவர் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். அதாவது எம்.எல்.ஏக்களிடமிருந்தோ அல்லது வேறு எந்த கட்சியிடமிருந்தோ ஜில்லா போர்டு மெம்பர்களிடமிருந்தோ, காங்கிரஸ் கமிட்டி மெம்பர்களிடமிருந்தோ ஆசிரியர்கள் சிபாரிசு மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஏதாவது சிபாரிசு கொண்டு வந்தால் அந்த ஆசிரியர்கள் உடனே 'சஸ்பெண்டு' செய்யப்படுவார்கள் என்று ஒரு சர்க்குலர் விட்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஸ்பெஷல் ஆபீசர்களை நியமித்தது ஜில்லாவிலுள்ள பிரதிநிதிகளை அவமதிப்பதற்கும் இதைப்போலவே அவர் பல பாடசாலைகளைப் பார்வையிடுவதற்குப் போகும்போது சேரியிலுள்ள பாடசாலைக்குப் போனால் அவர் சேரிக்குப்போகாமல் வெளியிலிருந்தே பாடசாலைகளின் விஸிட்டர் புஸ்தகங்களை வரவழைத்துப் பார்வையிட்டுப் போவதாகக் கேள்விப்படுகிறேன்.

" செங்கம் தாலுகா தானிபாடி கிராமத்திலுள்ள ஆஸ்பத்திரியானது இரண்டு வருஷங்களாக மூடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. நான் அதைப்பற்றி எழுதியும் பயன் இல்லாமல் இருக்கிறது. உதாரணமாக ஜில்லா போர்டு ஆஸ்பத்திரியில் ஒரு யூனானி டாக்டரை நியமித்திருக்கிறார். அவர் ஒரு 'பி' சர்ட்டிபிகேட் பெற்றவர். அவருக்கு இங்கிலீஷ் தெரியாது, தமிழ்கூட சரியாக தெரியாதவர், நாட்டு வைத்தியத்தில் ஏதாவது நாடி சரியாக இருக்கிறதா என்று பார்க்கக்கூடியவர். அவரை ஒரு டாக்டர் என்று அங்கு போட்டிருக்கிறார்கள். அவரிடம் ஒருவர் வந்து தனக்குப் பல் வலி என்று மருந்து கேட்டார். உடனே அவர் கம்பவுண்டரைக் கூப்பிட்டு அந்த ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு பாட்டிலைக் காண்பித்து அதன்மேல் எழுதியிருப்பதைப் பார்த்துவிட்டு அதைக் கொடுக்கச் சொன்னார். அந்த மருந்தைப் போட்டுக்கொண்ட ஒரு வாரத்திற்கெல்லாம் அவருடைய பல் பூராவும் போய்விட்டது. (சிரிப்பு.) இப்படிப்பட்ட 'பி' சர்ட்டிபிகேட் உள்ள டாக்டரை, சர்க்காருக்கு எழுதி உத்தரவு வாங்கிக்கொண்டு, நியமித்திருக்கிறார். இதைப்போலவே எவ்வளவோ சிக்கலான குறைகள் அந்த தாலூகாவில் இருக்கின்றன. நேர்மையான முறையிலும் ஸ்பெஷல் ஆபீசர்கள் நடக்கவில்லை. அதனால் அந்த ஸ்பெஷல் ஆபீசர்களை உடனே எடுத்துவிடவேண்டும். இப்பொழுது இன்னும் ஆறு மாதங்களுக்கு தேர்தலை ஒத்திவைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஸ்பெஷல் ஆபீசர்கள் இருந்தாலும்கூட கனம் ஸ்ரீ ராஜா சிதம்பரம் அவர்கள் பேசிய மாதிரி, எம்.எல்.ஏ.க்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, அதன் மூலம் அவர்களைக் கலந்து நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த ஏற்பாடுகளைச் செய்ய முன் வர

9-45 p.m.

வேண்டும். இப்பொழுது ஸ்பெஷல் ஆபீசர்கள் சர்வாதிகாரியைப்போல் நடந்து கொண்டு வருகிறார்கள். எம்.எல்.ஏ க்கள் ஸ்பெஷல் ஆபீசர்களிடம் போனால், பெரிய பிசினெஸ் பண்ணவருகிறார்கள் என்று ஸ்பெஷல் ஆபீசர்கள் நினைத்து விடுகிறார்கள். நாங்கள் பிசினெஸ் ஆரம்பிக்கமாட்டோம். நேர்மையான முறையில் இரண்டு லட்சம் ஜனங்களிடமிருந்து வோட்டு வாங்கி நாங்கள் வந்திருக்கிறோம். இந்த சட்ட சபை அங்கத்தினர்களையும் மந்திரிகளையும் நான் குறைகூறவில்லை. சபாநாயகர் அவர்களையும் யாரும் குறைகூற வில்லை. நல்ல அரசாங்கம் நடக்கிறது; அதுவும் ஒழுங்காக நடக்கிறது என்று தான் ஜனங்கள் சொல்லுகிறார்கள். அதனால் அங்குள்ள குறைகளை நிவர்த்தி செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

9-50 p.m. * SRI T. V. SANNASI :—'' கனம் சபாநாயகர் அவர்களே, மக்களுடைய நன்மைகளை உண்மையாக சர்க்கார் உணர்ந்திருக்குமானால் இவ்வளவு சீக்கிரம் ஒன்றா போர்டு தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முன் வந்திருக்காது. (சிரிப்பு.) ஏனென்றால் தேர்தலினால் மக்களுக்கு எந்த விதமான நலனும் இருக்கிறதென்று சொல்ல முடியாது. ஆனால் இந்தத் தேர்தலினால் அங்கங்கேயுள்ள கட்சிகளுக்கு நிறைய அனுகூலம் ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று சொல்லலாம். உண்மையில் மக்களுக்கு இதனால் தொந்தரவைத் தவிர வேறு நலனே இல்லை என்பதை எல்லாக் கட்சித் தலைவர்களும் உள்மார நினைத்தார்களானால் அவர்கள் மனச்சாட்சியே, 'இந்தத் தேர்தலை நடத்துவது தப்பு, தப்பு. இதனால் மக்களுக்கும் தொந்தரவு. நாட்டிற்கும் நஷ்டம்', என்று சொல்லும். (சிரிப்பு.) ஆகவே இதை உணர்ந்து பாராமல் சர்க்கார் இவ்வளவு சீக்கிரம் இந்தத் தேர்தலை நடத்தியே தீரவேண்டுமென்று ஒரு மசோதா கொண்டு வருவது எனக்கு திருப்தியாக இல்லை. என்றாலும் இதைக்கூட சில அங்கத்தினர்கள் எதிர்க்கிறார்கள் என்றால் எனக்கு இதன் காரணம் என்னவென்று தான் புரியவில்லை.

'' அரசாங்கத்தின் மந்திரி உத்தியோகத்திற்கு ஒருவர் வரவேண்டுமென்றால் உண்மையில் அவர் போன ஜன்மத்திலாவது பெருத்த பாவம் செய்திருந்தால்தான் மந்திரியாக வரமுடியுமென்று நான் நினைக்கிறேன். (சிரிப்பு.) உலகுக்கு ஒரு புறத்தில் மொத்தது என்றால் மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் மொத்தக் இருக்கிறது '' (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' கனம் மந்திரிகளுக்கு நான்கு புறத்திலும் மொத்து. (சிரிப்பு.) ''

* SRI T. V. SANNASI :—'' தேர்தலை கொஞ்சம் தள்ளி வைக்கலாம் என்றாலும், தேர்தலே வேண்டாமென்று சொன்னாலும் 'மக்களுடைய பிரதிநிதிகளை ஏன் தேர்ந்தெடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவில்லை' என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் தேர்தலை நடத்திவிடலாமென்று சொன்னாலும் ஏராளச் செலவாகிறது. மக்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே 'தேர்தலை இப்பொழுது நடத்த சர்க்கார் ஏன் முன் வந்தது' என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். இப்படி இரண்டு விதமாகவும் பேசினால் கனம் மந்திரிகள் என்னதான் செய்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு.) ஸ்பெஷல் ஆபீஸர்கள் அனுபவம் அற்றவர்கள். பொது ஜனங்களுடன் தொடர்பு அற்றவர்கள். ஆகவே ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைப்பதற்குப் பதில் தேர்தலையே நடத்த வேண்டுமென்று எண்ணம் பெரும்பாலான ஊழியர்களிடமும், பொது மக்களிடமும் இருந்து வருகிறது. ஆனால் தேர்தலினால் மக்களுக்கு ஏராளமான தொந்தரவுகளும் இருக்கின்றன. பூச்சி பிடித்த வெள்ளாமை போல நாட்டில் பணக்கஷ்டம், வேலையில்லாத்திண்டாட்டம், வேலை செய்தும் கூலி கிடைக்காத பணக் கஷ்டம், பஞ்ச நிலைமை இவைகள் எல்லாம் மிகக் கடுமையாக இருக்கும் போது இப்பொழுது தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு சர்க்கார் முன் வந்திருப்பது நல்ல முடிவல்ல. மக்களுடைய நலனில் சர்க்

27th March 1954] [Sri T. V. Sannasi]

காருக்கு நிரம்ப அக்கரை இருக்குமானால், அவர்களுடைய சௌகர்யத்தில் கருத்து இருக்குமானால், இந்தத் தேர்தலை ஒரு வருஷம் தள்ளிப்போட்டால் தான் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

"இந்த நிலைமையில் அரசாங்கம் கொண்டு வந்துள்ள மசோதாவிற்கு கட்சி நலனைக் கருதாமல் நாட்டு மக்களுடைய நலன் ஒன்றை மட்டும் கருதி ஆதரிக்கக் கூடியவர்களின் சார்பில் நானும் ஆதரிக்கின்றேன்." (சிரிப்பு.)

* SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Mr. Speaker, Sir, I am really shocked to see the Hon. the Minister for Local Administration coming this night with a Bill to get permission from this House to extend the term of the Special Officers of District Boards. This is the third time that the Government have come forward before this House seeking its approval for the postponement of the democratic elections to District Boards. Last time, Sir, the Hon. the Chief Minister himself intervened and assured the House that, even before the expiry of the term of Special Officers of District Boards, elections would be held. I do not know what made the Hon. the Chief Minister and other Ministers of the Government change their decision and come forward with a Bill before this House seeking further extension of the term of Special Officers. This they do because they feel that Congress will have to face dismal failure in elections, if conducted now. When the life of District Boards was extended by the Act VII of 1952, hon. Members on either side of the House pointed out to the Government that people had lost confidence in District Boards because most members of District Boards had been defeated in the General Elections. It has become habitual with this Congress Government and with the Congress organization to constitute undemocratic organizations. They do this either by appointing loyal servants of the ruling clique or those people in whom the people have no confidence at all to special posts. If we just go through the names of the Governors, we can easily be convinced . . ." 9-55 p.m.

SRI C. RAJAM RAMASWAMI :—" On a point of order, Sir. May I know whether the word 'clique' is parliamentary?"

MR. SPEAKER :—" It is parliamentary. The hon. Member can proceed with his speech."

* SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Repeating undemocratic acts has become the habit of the ruling clique and repetition of this habitual blunder becomes a part of the character of the Congress Government. That is the reason why this Bill is introduced in this House now.

" The Government have now brought forward a fine argument in support of the Bill, namely, that they are going to bring in a legislation to replace the District Boards by Taluk Boards. I do not know wherefrom they got this fine idea. Anyhow this question was not discussed on the floor of this House. As far as I am concerned, I wish to say that Taluk Boards are no substitutes to the present District Boards. At village, taluk, district, State and all-India level, we want democratic people's organizations. We are not content with Taluk Boards alone. We want District Boards

also. In no circumstances we will consider Taluk Boards as an alternative to District Boards. I have given an amendment to the provisions of this Bill and when it comes up for discussion, I shall say a few more things on that occasion. I take this opportunity to record my vehement protest and righteous indignation against the undemocratic move by which this Government want to introduce a legislation to extend the life of Special Officers' regime."

* SRI D. KRISHNAMURTHY GOUNDER :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஜில்லா போர்டு தேர்தல் ஒத்திவைப்பு மசோதா, அனுமார் வால் போல் வளர்ந்து கொண்டே போகிறது. 1952–ஆம் வருஷத்திலேயே ஜில்லா போர்டு தேர்தல்கள் வந்திருக்கவேண்டும். அதை விட்டு விட்டு சற்றேரக்குறைய ஒரு ஆண்டுக்கு மேலாக இதை வளர்த்து விட்டார்கள். இன்னும் எவ்வளவு ஆண்டுகளுக்கு வளரும் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒன்று நடப்பது நிச்சயம். எனக்கு முன் பேசிய தோழர்கள் சொன்னது போல, தற்போது அதிகாரத்தில் இருக்கும் கட்சிக்காரர்கள் தேர்தலைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் நேர்மையாகவும், மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக இருந்திருந்தால் 1952–வது வருஷத்திலேயே இந்தத் தேர்தலைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு கடைசி நேரத்தில் அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஒத்திவைப்பது ஜனநாயத்திற்கு விரோதமாகும். மேலும், தாலுக்கா போர்டுகளைக்கொண்டு வருவதாக அவர்கள் காரணம் கூறுகிறார்கள். தாலுக்கா போர்டுகளை முன்பு ஒழித்தது நீதிக் கட்சியாகும். எதற்காக தாலுக்கா போர்டுகளை அவர்கள் ஒழித்தார்கள் என்றால், அவைகளுக்குப் போதுமான வருவாய் கிடையாது. அவர்கள் ஜனங்களுக்குப் போதுமான நன்மையைச் செய்ய முடியாது என்ற காரணத்திற்காகத்தான் ஒழித்தார்கள். ஜில்லா போர்டுகளும் அவ்வாறு தான் இருக்கின்றன. ஏனென்றால் ஆங்காங்கே பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. மேலும், இன்னும் அனேக கிராமங்களில் பஞ்சாயத்து போர்டுகளை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அப்படி ஏற்படுத்தினால் ஜில்லா போர்டு வருமானம் குறைந்து விடும். Cess மூலம் தான் ஜில்லா போர்டுகளுக்கு அதிகமான வருமானம் கிடைக்கிறது. பஞ்சாயத்து போர்டுகள் ஏற்பட்ட பிறகு இந்த Cess அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது. ஆகையால்தான் ஜில்லா போர்டுக்கு அந்த வருமானம் குறைந்துவிடும் என்று நான் சொல்லவேண்டியிருக்கிறது.

" மேலும், நாம் அனேமாகப் பார்க்கிறோம் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட ஜில்லா போர்டுகளிடம் போதுமான தொகை கிடையாது. அநேகப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டு விட்டன. நான் முன்பு பேசினபோது கூறினேன் : 'ஸ்பெஷல் ஆபீசர்கள் வந்தால் ஜில்லா போர்டு வரவு செலவைச் சரிக்கட்டி அனேக பள்ளிக்கூடங்களை மூடி விடுவார்கள்' என்று. அதன்படி நடந்து விட்டது. அதனால் தான் நாங்கள் சேலம் ஜில்லா போர்டில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். அதாவது, தற்போது இருக்கும் நிலையில் ஜில்லா போர்டுகள் அவசியம் இல்லை. மாகாணத்திற்கு ஒரு ஜனநாயக அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் சர்க்காரே நேரிடையாக தற்போது ஜில்லா போர்டு செய்யும் எல்லாக் காரியங்களையும் எடுத்து நடத்தினால் மிகவும் நல்லதாக இருக்கும். அதற்கு வேண்டிய திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று ஜில்லா போர்டில் தீர்மானம் ஒன்றை நிறை வேற்றினோம். அதைப்போல் இப்பொழுது அரசாங்கத்தார் நேரடியாக எல்லா அதிகாரங்களையும் எடுத்துக் கொள்வது நல்லது. ஏனென்றால் பணம் இல்லாமல் ஜில்லா போர்டுகளை நடத்துவது மிகக் கஷ்டம். ஆனால் சர்க்கார் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்க ஏதுவாக இருக்கிறது. அதாவது, நம்முடைய ராஜ்யம் மிகச் சிறியதாகப் போய்விட்டது. மந்திரிகள் ஆங்காங்கே சுற்றுப் பிராயாணம் செய்வது வழக்கமாகிவிட்டது. ஜனங்களுக்கு சுகாதார வசதி, ரோடு வசதி, கல்விக்கு வேண்டிய பள்ளிக்கூட வசதி இவைகளெல்லாம் வேண்டு

27th March 1954] [Sri D. Krishnamurthy Gounder]

மென்று கேட்டால், 'நாங்கள் என்ன செய்வது, உங்களுக்கு ஜில்லா போர்டு இருக்கிறது, அவர்களைப் பார்த்துக் கேளுங்கள்', என்று சாக்குப் போக்குச் சொல்லுவதற்கு, ஏதுவாக இருக்கிறதே தவிர, மற்ற உருப்படியான காரியங்களைச் செய்ய ஜில்லா போர்டுகளால் ஒன்றும் முடியாது. ஆகையால் எப்படியோ தேர்தலை ஒத்திவைக்கத் துணிந்து விட்டார்கள். ஜில்லா போர்டுகளை ஒழித்துக்கட்ட ஒரு நல்ல மசோதாவைக் கொண்டு வந்து, சர்க்காரே தங்கள் பொறுப்பை உணர்ந்து, ஜனங்களுக்கு முக்கியமாக கல்வி வசதிகள், ரோடு வசதிகள், சுகாதார வசதிகள் கிடைக்கத்தக்க முயற்சிகளை எடுக்க வேண்டும். சர்க்கார் தங்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கக் கூடாது என்று தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

"மேலும், இப்பொழுது ஸ்பெஷல் ஆபீசர்களின் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தமட்டில் நிர்வாகம் சரியாகத்தான் நடக்கிறது. ஜில்லா கலெக்டர், ஸ்பெஷல் ஆபீசராகவும், டிபுடி கலெக்டர், Personal Assistantகளாகவும் இருக்கிறார்கள் என்று ஏதோ அரசியல் காரணங்களுக்காகச் சில குறைகளைச் சொல்லலாம். இருந்தாலும் ஸ்பெஷல் ஆபீசர் என்ன செய்வார்? மேலே இருக்கக்கூடிய சர்க்கார் இலாகாக் காரியதரிசி, லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் இவர்களுடைய உத்தரவுப்படி தான் ஸ்பெஷல் ஆபீசர் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வரவு செலவைச் சரியாகக் காட்டுங்கள், இல்லாவிட்டால் உங்களுக்கு ஒன்றும் செய்ய முடியாதென்று எச்சரிக்கை விடுகிறார்கள். அதற்காகப் பள்ளிக்கூடங்களை மூடுவதும், மற்ற பல விதமான காரியங்களையும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அதனால் ஸ்பெஷல் ஆபீசர் நிர்வாகத்தைக் குறை கூறுவதற்கு இல்லை என்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகையால் தாலூக்கா போர்டுகளை ஏற்படுத்துவதை விட்டு விட்டு இந்தத் தேர்தலை எப்போதோ ஒத்தி வைக்க அவர்கள் நினைப்பதாலும் அந்தக் குறிய காலத்தில் ஜில்லா போர்டை ஒழித்துக் கட்டவும், மற்றும் பொதுவாக ஜனங்களுக்கு நல்ல நன்மைகளைச் செய்யக்கூடிய திட்டங்களை வகுக்குமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய பிரசங்கத்தை முடித்துக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—"We have already taken two hours. Mr. Ramalingam may now speak."

SRI S. RAMALINGAM :—"கனம் சபாநாயகர் அவர்களே! நண்பர் ஸ்ரீ ராஜா சிதம்பரம் அவர்கள் சொற்பொழிவிலே அடங்கியுள்ள கருத்துக்களை, சில விஷயங்களை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற சட்ட சபைக் கூட்டத்தில் Special Officerகளை நியமிக்க வேண்டும் என்ற கருத்துடன் கொண்டு வந்த மசோதா நிறைவேறியபோது அன்று ஸ்தல ஸ்தாபன மந்திரியாயிருந்த கனம் ஸ்ரீ சங்கர ரெட்டி இரண்டு வாக்குறுதிகளைத் கொடுத்தார்.

"முதலாவதாக, 'இந்த Special Officerகள் காலத்தை இனி நீடிக்க மாட்டோம்; மார்ச்சு மாதத்திற்குள் ஜில்லா போர்டு தேர்தலை நடத்தியே தீருவோம்' என்று வாக்குறுதி அளித்துள்ளார். மற்றொரு வாக்குறுதி என்னவென்றால் 'Special Officer வருவதற்கு முன் பள்ளிக்கூடங்கள் என்னென்ன நடத்தி வந்தார்களோ அவைகளை தொடர்ந்து நடத்த வேண்டு'மென்று சொன்னார்கள். கடந்த 9 மாத காலத்தில் இந்த Special Officerகள் நடைமுறையில் என்ன செய்தார்கள் என்பதைப் பார்க்கும் போது பல ஜில்லாக்களில் பல பள்ளிக்கூடங்களை மூடிவிட்டார்கள். குறிப்பாக தஞ்சாவூர் ஜில்லாவிலே Special Officer அநேக பள்ளிக்கூடங்களை மூடியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல. ஜில்லா போர்டுகள் சந்தையில் சென்ற வருஷம் இருந்த குத்தகைத் தொகையை விட இந்த வருஷம் அதிகமாக வசூலிக்கிறார்கள். 2 அணாவாக இருந்தது 4 அணாவாக மாறிற்று. தலைக்கூடை சுமைக்கு முன்பு அரையணாவாக இருந்தது இப்போது இரண்டணாவாக மாறியிருக்கிறது. இது விஷயம்

[Sri S. Ramalingam] [27th March 1954

கனம் மந்திரி ஸ்ரீ ராஜாராம் நாயுடுவின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டது. கடந்த 9 மாத காலமாக ஜில்லா போர்டின் **Special Officer**கள் பொதுக் காரியங்களில் தங்கள் இஷ்டப்படி நடந்து வருகிறார்கள். அம் மாதிரி காரியங்களில் ஈடுபடுவதற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என் பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கனம் ஸ்ரீ ராஜா சிதம் பரம் அவர்கள் சொன்னது போல தாலூகா போர்டு கொண்டுவருவதா யிருந்தால், ஜில்லா போர்டு தேர்தலை நடத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்."

10-05 p.m. **Sri S. T. ADITYAN** :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஜில்லா போர்டு தேர்தலை ஒத்திப்போடுவதற்கு இரண்டு மூன்று காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. முதலாவதாக ஜில்லா போர்டுகளை ஒழித்து தாலூ காப் போர்டுகளை ஏற்படுத்த வேண்டுமென்று கிர்மானிக்கப் பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. இரண்டாவதாக தாலூகா போர்டு தேர்தலை நடத்து வதற்கு இன்னும் இரண்டு வருஷ காலமாகும்தாலால், அதற்குள் ஜில்லா போர்டு தேர்தலை நடத்தப் போவதாக சொல்லப்படுகிறது. தாலூகா போர்டு தேர்தலை ஏன் உடனடியாக நடத்த முடியாது? ஏன் அதற்கு இரண்டு வருஷங்கள் வேண்டும்? இந்தியாவும் பாகிஸ்தானும் 90 நாட் களில் பிரிக்கப்பட வில்லையா? இதோ இருக்கிறார் **Special Officer.** இது ஒன்றும் பெரிய காரியமில்லை. இதெல்லாம் நொண்டிச்சாக்கு தான். மூன்றாவதாக ஜில்லா போர்டு தேர்தலை நடத்த அவகாசமில்லை. மேலும் அக்டோபர் மாதம் வரை அவகாசம் வேண்டுமென்று கேட்கிறார்கள். வேண்டுமென்றே கொடுத்த அவகாசத்தை நிராகரித்து விட்டு இன்று அவகாசமில்லை என்று சொல்லுகிறார்கள். **Electoral rolls**களை என் றைக்கு வெளியிட்டார்கள்? சர்க்கார் அவர்கள் காலா காலத்திலே **Electoral rolls**களை வெளியிட்டிருந்தால் தேர்தலை நடத்தியிருக்கலாமே? தேர்தலை துரிதமாக நடத்த அவர்கள் என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்? இன்று மார்ச் 27-ம் தேதி. இது வரை அவர் கள் ஜில்லா போர்டு தேர்தலை நடத்துவதற்கு ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படியிருக்கும்பொழுது அவகாசம் கேட்பதற்கு நியாயமே யில்லை.

" ஆனால் ஒரு காரணம் தான் இருக்கலாம். இந்த விஷயம் இந்தச் சபையில் சென்ற தடவை விவாதிக்கப்பட்டபொழுது நாங்கள் இதை ஆட் சேபித்து ஒரு காரணம் சொன்னோம். அதாவது, காங்கிரஸ்காரர்கள் எலெக்ஷனில் வெற்றி தோல்வியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக் கிறார்களே தவிர, ஜனங்களைப் பற்றிய எண்ணத்தை மறந்து விட்டார்கள். அதே காரணத்தைத்தான் இன்று திரும்பவும் சொல்லத்தோன்றுகிறது. நண்பர் கோவிந்தசாமி அவர்கள் கூறியது போல் காங்கிரஸ் கட்சிக்குள் இரண்டு அபிப்பிராயம் இருக்கிறது. ஒரு சிலர் ஜில்லா போர்டையே தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற கொள்கை கொண்டவர்கள், மற்றும் சிலர் ஜில்லா போர்டு எலெக்ஷனில் காங்கிரஸ் தோற்றுவிடும். ஆகையால் ஜில்லா போர்டை ஒழித்து விட்டு தாலூகா போர்டை ஏற்படுத்தலாமென்று அபிப்பிராயம் கொண்டவர்கள் காங்கிரஸ்க்குள்ளேயே இப்படி இரண்டு விதமான அபிப்பிராயங்களிருப்பது தெளிவான விஷயம். இந்த மசோதா முன் பக்கத்துக்கு பின்பக்கம் முரணாக இருக்கிறது. இந்த மசோதா தாலூகா போர்டுகள் ஏற்படுத்த வேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்டு வேறு விதமாக முடிக்கப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு விதமான அபிப்பிராயம் பிரதிபலிக்கிறது. முன்னால் செட்டியார் குதிரை பின்னால் பட்டாளத்து காரன் குதிரை என்று சொல்லுவது போல் ஒரு பக்கம் மந்திரியின் அபிப்பிராயமும் மறு பக்கம் தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவரின் அபிப் பிராயமும் பிரதிபலிக்கிறது. ஒன்றுக்கொன்று விரோதமான மனப் பான்மை பிரதிபலிக்கிறதே தவிர ஜனங்களின் உண்மையான நோக்கம் பிரதிபலிக்கவில்லை. நான் இந்த மசோதாவுக்கு என்னுடைய ஆட்சே பணையை தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

27th March 1954]

*** Sri M. KALYANASUNDRAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, நமது ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. ராஜாராம் அவர்கள் மந்திரியான பிறகு அவர் பிரேரேபிக்கக்கூடிய முதல் மசோதா இது. அவர் முதல் முதலாக பிரேரேபிக்கக் கூடிய மசோதா இப்படி தகுரான ஒரு விஷயத்தைப் பற்றி இருக்கிறது என்பதற்காக அவருக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எதிர்க் கட்சியில் மட்டுமின்றி, அவருடைய கட்சியிலேயே பேசிய திரு. வி. கே. ராமசாமி முதலியார் கூட எதிர்த்து பேசியிருக்கிறார். ஆனால், அவர் வோட்டளிக்கும் போது சர்க்கார் திட்டத்தை ஆதரித்துதான் வோட்டு அளிப்பார். இருந்தாலும் அவருடைய அபிப்பிராயம் இதற்கு மாறாக இருக்கிறது என்பதை அவர் இந்த சபையில் பகிரங்கமாக பேசிக் காட்டி விட்டார். இப்படிப்பட்ட ஒரு தகுரான மசோதாவைத் தான் திரு. ராஜாராம் அவர்கள் முதல் முதலாக பிரேரேபிக்க வேண்டுமா என்று கேட்கிறேன். அத்துடன் கூட திரு. ராஜாராம் இரண்டு வருட காலமாக சர்க்கார் கட்சியின் கொராடாவாக இருந்து வேலை செய்து வந்தவர் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். அவர் மந்திரியாக வேலை செய்வதையும் பார்க்கிறோம். சம்பத்தில் அவருடன் நெருங்கிப் பழக வேண்டிய ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதாவது **Delimitation Committee**-யில் அவர் மெம்பராக இருந்தார்; நானும் அதில் மெம்பராக இருந்தேன். அப்பொழுது அவர் எவ்வளவு சுறுப்பாக வேலை செய்யக் கூடியவர் என்பது எனக்குத் தெரிந்தது. அவ்விதம் சுறு சுறுப்பாக வேலை செய்யக் கூடியவர் இதை இன்னும் ஏழு மாதம் நிறுத்திவைக்க வேண்டும் என்று சொல்லுவதற்கு அவசியம் என்ன என்பது தான் எனக்கு விளங்கவில்லை. நிர்வாகத் துறையில் இருக்கக்கூடிய வேறு எந்த இடையூறுகளும் காரணமல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த மசோதாவைக் கொண்டு வந்து இருப்பதன் நோக்கத்தைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்க வேண்டும். மந்திரிகளும் சரி அவர்களைச் சார்ந்து பேசக் கூடியவர்களும் சரி, கட்சி விருப்பு வெறுப்பிற்கு இடம் இருக்கக் கூடாது என்றும், தேச நலனை கவனிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். ஆனால் உண்மையில் இந்த மசோதாவின் நோக்கத்தைப் பார்த்தால் காங்கிரஸ் கட்சியின் சுயநல நோக்கத்தைத் தவிர வேறு நோக்கம் கிடையாது. எப்படியாவது ஜில்லா போர்டையும், ஸ்தல ஸ்தாபனங்களையும் தங்களுடைய கட்சிக்கு ஆதரவு தேடக் கூடிய கருவியாக உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பொது மக்களின் நன்மையை உத்தேசித்து இது நடக்கிறது என்று சொல்வதற்கு இல்லை. அப்படி இல்லா விட்டால் சர்க்கார் இதுவரைக்கும் ஏன் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இந்த இரண்டு வருஷ சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும். இந்தப் பிரச்னை இன்றைய நேற்றைய பிரச்னை அல்ல. 1952-ம் வருஷம் நவம்பர் மாதம் இது விவாதத்திற்கு வரவில்லையா? அன்று ஒரு வருஷத்திற்கு தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று வாய் கூசாமல் சொல்லிக் கொண்டு சபைக்குக் மசோதா கொண்டு வரவில்லையா? அப்பொழுது ஒரு வருஷத்திற்கு ஒத்தி வைப்பது நியாயம் இல்லை என்று எடுத்துச் சொன்னபோது காலவரையை ஆறு மாத காலமாக குறைக்க ஒத்துக்கொண்டு அதற்குள் தேர்தல் நடத்திவிடுவது என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆறு மாதங்களுக்குப் பிறகும்கூட மறுபடியும் என்ன நிலைமை ஏற்பட்டது—அதுவரையில் சும்மா இருந்துவிட்டு தேர்தல் வரப் போகிறது என்று எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கும்போது தேர்தலை நடத்த முடியாது ஸ்பெஷல் ஆபீசரை நியமிக்க வேண்டும் என்று சொல்லி சென்ற ஏப்ரல் மாதம் ஒரு மசோதாவை இந்த சபை முன் கொண்டுவந்தார்கள். பழைய ஜில்லா போர்டை நீடிக்க வேண்டும்; அல்லது ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமித்து அவர்களிடம் ஜில்லா போர்டுகளை ஒப்படைக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டது.

" ஸ்பெஷல் ஆபீசர் வேண்டும் என்றாலும் வைத்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு விட்டுக்கொடுத்தார்கள் எதிர் கட்சி. எப்படியாவது நெருக்கடி தீரவேண்டும் என்பதற்காக அப்படி விட்டுக்கொடுத்தார்கள்.

10-10 p.m.

முதல் மந்திரியும், கனம் மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமணியமும் அன்று என்ன வாக்கூறுதி கொடுத்தார்கள். ஆந்திரப் பிரிவினை குறுக்கே நிற்கிறது, அது இடையூறாக இருக்கிறது, பொறுத்துப் பாருங்கள், 1954-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதி காலவரை சட்டத்தில் போடப்பட்டிருந்தாலும், அதுவரை தேர்தல்களை ஒத்திப்போடப் போவதில்லை என்றும் டிசம்பர் 31-ம்தேதிக்குள்ளதாகவே தேர்தல் நடைபெறுமென்றும் பயமுறுத்தினார்கள். ஆனால் தேர்தலே வரவில்லை. பிறகு மார்ச்சு மாதம் 31–ம் தேதி வரப்போகிறது. இன்னும் எலெக்ஷனைக் காணோமே என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் மார்சு மாதம் 27–ம் தேதி யன்று நள்ளிரவில் வந்து 'அக்போபர் 31–ம் தேதி வரைக்கும் ஸ்பெஷல் ஆபீசருடைய கால வரம்பை நீடிக்கவேண்டும்,' என்று தைர்யமாக கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் கூறிக்கொண்டு ஒரு மசோதாவையும் பிரேரேபிக்கிறார். இதைக் கண்டு எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. இப்படி பிரேரேபிக்கக்கூடிய காலத்தில் மந்திரியவர்கள் சொல்லக்கூடிய காரணங்களை அங்கத்தினர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தாலூக்கா போர்டுகளை நியமிப்பது விஷயமாகவும், ஜில்லா போர்டுகளை கலைக்கும் விஷயமாகவும் சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. அதனாலே தான் இந்தத் தேர்தலை ஒத்திப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம் என்று சொல்லப்படுகிறது. தாலூக்கா போர்டுகளை அமைக்கும் யோசனை வெகு காலமாக இருந்திருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களும் பல இடங்களில் பேசியிருக்கிறார்கள். ஆனால் 'முடிவுக்கு ஏன் வரவில்லை? காமதம் என்ன?' என்ற காரணம் என்னவென்று தான் எனக்குத் தெரியவில்லை. ஜில்லா போர்டுகளைக் கலைத்து தாலூக்கா போர்டுகளை அமைக்கவேண்டுமென்று எற்கனவேயே முடிவாகிவிட்ட விஷயம். அந்த முறையில் தாலூக்கா போர்டுகளை எப்படி அமைப்பது என்ற விபரங்களைத் தயாரிக்க ஏன் சர்க்கார் தீர்மானிக்கிறார்கள்? சென்ற வருஷம் டிசம்பர் மாதத்தில் கூட நமது சட்ட சபை கூடியிருக்கிறது. மார்ச்சு 31-ந் தேதிக்குள் இந்தச் சட்டம் புதுப்பிக்கப்படாவிட்டால் இது காலாவதியாகிவிடுமென்று சொல்லிக்கொண்டு அவசரம் அவசரமாக இன்றைய தினம் இந்த மசோதாவை சபையில் பிரேரித்திருப்பதைவிட, 'தாலூக்கா போர்டுகளை அமைக்கப்போகிறோம், ஜில்லா போர்டுகளை கலைத்துவிடப்போகிறோம், ஆகவே தேர்தலை இன்னும் ஒரு வருஷ காலத்திற்கு ஒத்திப்போட அனுமதி கொடுங்கள்', என்று சென்ற டிசம்பர் மாதத்திலேயே சபையின் அனுமதி கோரி வந்திருக்கலாமே. அப்படி வந்திருந்தால் இன்றைக்கு இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்குப் பதிலாக தாலூக்கா போர்டுகளை அமைக்கும் மசோதா சட்ட சபைக்கு வந்திருக்கக் கூடும். அவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்யக் கூடியவராகவும் கனம் மந்திரி அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அப்படிச் செய்யவில்லையென்றால் ஜில்லா போர்டு தேர்தலை நடத்துவதோ, தாலூக்கா போர்டுகளை நடத்துவதோ அரசாங்கத்தின் நோக்கமே அல்ல என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

10-15 p m.

"எனது நண்பர் ஸ்ரீ மதனகோபால் சொன்னபோது மந்திரி சபைக்கு நெருக்கடி இருக்கிறது. குறிப்பாக இரண்டுவித நெருக்கடி இருக்கிறது. அவர்கள் கட்சிக்குள்ளேயே இருக்கும் நெருக்கடி ஒருவகை. அக்கட்சிக்கு வெளியில் இருக்கும் நெருக்கடி ஒரு வகை என்று சொன்னார். இது எல்லோருக்கும் தெரிந்திருக்கக்கூடிய விஷயம். புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் பெறாமல் கிராம மக்களிடையே இனிமேல் வோட்டுப் போடுங்கள் என்று சொல்லிக்கொண்டு போகமுடியாது என்பது மந்திரி சபையினருக்கும் தெரியும். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுக்கும் தெரியும். இவர்கள்பேரில் மக்கள் கொண்டிருக்கக்கூடிய கோபம், மக்கள் கொண்டிருக்கக்கூடிய ஆத்திரம் கொஞ்ச நஞ்சமல்ல என்பது உலகம் அறிந்த விஷயம். ஆகவேதான் ஜில்லா போர்டு தேர்தலை இப்பொழுது நடத்தினால் காங்கிரஸ் கட்சிக்கு பெரிய வீழ்ச்சி ஏற்படும் என்ற எண்ணத்தினால் தேர்தலை ஒத்திப்போட முன் வந்திருக்கிறார்களே தவிர, அரசியல் நோக்கம் எதுவும் தேர்தலை ஒத்திப்போடுவதில் இல்லையென்று சொன்னால்

27th March 1954] [Sri M. Kalyanasundram]

அதை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. தங்கள் கட்சி நலன் ஒன்றையே பிரதானமாகக்கொண்டு இந்தத் தேர்தலை ஒத்திப்போட முன் வந்திருக்கிறார்களே தவிர, கிராமவாசிகளைப் பற்றியோ, அல்லது ஸ்தல ஸ்தாபனங்களைப் பற்றியோ ரொம்பவும் கவலைகொண்டு இந்த முடிவுக்கு வரவில்லையென்பது நான் கூறுமலேயே உங்களுக்கு விளங்கும். ஆனால் கட்சி மனோபாவம் எங்களுக்குக் கிடையாது என்று இந்தச் சபையில் சொல்லலாம். பத்திரிகையில் பிரசுரிக்கலாம். ஆனால் பொது மக்கள் யாரும் அதை நம்பமாட்டார்கள்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" நாங்கள் சொல்வதை நீங்கள் தான் நம்ப மாட்டீர்கள்."

* SRI M. KALYANASUNDRAM:—" சர்க்கார் சொல்லக்கூடிய விஷயங்களை நாங்கள் நம்பமாட்டோம் என்று சொன்னால் நம்பக்கூடிய அளவிற்கு நீங்கள் இந்தச் சபையில் கொடுக்கும் வாக்குறுதிகள் எதையும் பூர்த்தி செய்யவில்லை என்கின்ற விஷயம் எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. சென்ற தடவை நீங்களே இவ்வாண்டு மார்ச்சு 31-ந் தேதிக்குள் எப்படியாவது தேர்தலை நடத்திவிடுகிறோம் என்று சொன்னீர்கள். சொன்னபடி நடத்தினீர்களா ? இல்லையே. அப்படியிருக்கும்போது இப்பொழுது மறுபடியும் 'அக்டோபர் 31-ந் தேதி வரை காலவரையை நீடியுங்கள். அதற்குள் நாங்கள் தேர்தலை நடத்திவிடுகிறோம்' என்று சொன்னால் இதைத்தான் எப்படி நம்பமுடியும் ? ஆகவே மக்களை ஒரு நாளும் ஏமாற்ற முடியாது என்பதை அரசாங்கத்தாருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தார் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை பொது மக்கள் சர்வ ஜாக்ரதையுடன் கவனித்துக் கொண்டே வருகிறார்கள். அதற்குச் சாட்சியாக நமது சட்ட சபை காலரினையப் பார்த்தால் எவ்வளவு மக்கள் குழம்பியிருக்கிறார்கள் என்பது தெரியும். சபை அங்கத்தினர்களுக்கு வேண்டுமானால் போக்குவரத்து வசதிகளை கனம் மந்திரி அவர்கள் செய்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப் போலவே சொந்த கார் உள்ள அவர்களும்கூட இரவு 11-மணிக்கு மேல் சுலபமாக வீட்டிற்குப் போய்விடலாம். ஆனால் போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாமல் கஷ்டப்பட வேண்டுமென்பதை உணர்ந்தும் பொது மக்கள் இங்கே இவ்வளவு பெரிய அளவில் வந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் எப்படி இங்கே நடக்கும் விவாதத்தில் அக்கரை கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும். ஆகவே ஏதோ ஒன்றைச் சொல்லி ஒரு காரியத்தை சாதித்துக்கொண்டு போய்விடலாம், மக்களை ஏமாற்றி விடலாமென்று மாத்திரம் தயவு செய்து கனம் அமைச்சர்கள் எண்ணவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் சுப்பிரமணியம் போன்றவர்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போவதாகவும், ஜனநாயகத்தை இந்த நாட்டில் நிலைநாட்டப் போவதாகவும் வாயளவிலே சொல்லிக்கொண்டு, பேச்சளவிலே சொல்லிக்கொண்டு—இவ்விடத்திலே நான் மனதில் தோன்றும் ஒரு வார்த்தையை சொல்ல விரும்பவில்லை—காரியத்தில் அதைக் காட்ட முயலமாட்டேன் என்கிறார்கள் என்று மட்டும் சொல்லிவிடுகிறேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" நீங்கள் என்ன வார்த்தையை வேண்டுமானாலும் உபயோகப்படுத்தலாம். உங்களுக்கு லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது."

* SRI M. KALYANASUNDRAM :—" 'ஆகவே, எதிர்க்கட்சிக்காரர்கள் ஜனநாயக விரோதிகள். நாங்கள்தான் ஜனநாயகத்தைக் காக்க வந்திருக்கிறோம். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது எங்களது ஏகபோக உரிமை' என்றெல்லாம் மட்டும் பேசவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் இவர்கள்தான் ஜனநாயகத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்கிறார்கள். தனி நபர் சுதந்திரத்தைப்பற்றி ராஜாஜி அவர்கள் மிக ஜம்பமாக அடிக்கடி பேசியிருக்கிறார்கள். அவர் இங்கு இல்லை. ஆகையால் வேறொரு சமயம் அதைப்பற்றி பேச விரும்புகிறேன். நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் 'மக்கள்' 'ஜனநாயகம்' ஆகிய வார்த்தைகளை

அடிக்கடி உபயோகிக்கிறார்கள். ஜனநாயகத்தைப் பற்றியும், மக்கள் பற்றியும் அவர் கொண்டுள்ள கருத்துக்கள்பற்றி நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதற்குப் பதில் கனம் சுப்பிரமணியம் அவர்கள் கொடுப்பார்கள் என்றும் நம்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பதில் சொல்ல முடியாது என்று தெரியும். இன்னொரு சமயத்திலாவது அவர் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் இதைச் சொல்லுகிறேன்."

Mr. SPEAKER :—" இந்தச் சந்தர்ப்பத்திலும் கூட அவர் விரும்பினால் பதில் சொல்லலாம்."

10-20 p.m. **Sri M. KALYANASUNDRAM** :—" எங்கள் அகராதியில் ஜனங்கள் என்று சொன்னால் சாதாரண தொழிலாளிகள், விவசாயிகள் இன்னும் நடுத்தர மக்கள், இன்னும் ஆபீஸ் வேலை செய்து பிழைக்கக் கூடிய மக்கள், 95 சதம் உள்ள சாதாரண மக்களைத்தான் குறிப்பிடுகின்றோம். ஆனால், கனம் ஸ்ரீ ஸி. சுபரமண்யம், கனம் ராஜாஜி இவர்களுடைய அகராதியில் 'மக்கள்' என்றால் செட்டிநாட்டு ராஜா, ராமநாதபுரம் ராஜா, கனம் ஸ்ரீ வ. ஸி. பழனிசாமிக் கவுண்டர், வடபாதிமங்கலம் ஸ்ரீ தியாகராஜ முதலியார், தருமபுரத்து பண்டார சன்னதிகள் இப்படி இருக்கக்கூடியவர்கள்தான் அவர்கள் கண்ணுக்கு மக்களாக தோன்றுகிறார்கள். ஆனால், எங்களுடைய கண்களுக்கு நேர் விரோதமாகத்தான் தோன்றுகிறது. சர்க்காரின் வேலை செய்யும் கீழ்த்தர சிப்பந்திகள், வயற்காடுகளில் உழைக்கக்கூடியவர்கள், தொழிற்சாலைகளில் வேலைசெய்யக்கூடியவர்கள், காரியாலயங்களில் உத்தியோகம் பார்க்கக்கூடிய சிப்பந்திகள் இவர்களைப் போன்றவர்கள்தான் எங்களுடைய அகராதியில் மக்கள் என்று கருதப்படுகிறார்கள். ஜனநாயகம் என்று அவர்கள் சொல்லும்பொழுது, கஷ்டப்பட்டு உழைக்கும் மக்கள் தங்களுக்கு சம்பளம் ஜாஸ்திவேண்டும் என்று கேட்கும்போது கொடுக்கக்கூடாது என்பதுதான் அவர்களுடைய ஜனநாயகம். நிலத்தில் விளைந்தாலும், விளையாவிட்டாலும் விவசாயிகள் பெரிய பெரிய மிராசுதார்களுக்கு குத்தகையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று சொல்லி நிலப்பிரபுக்களின் உரிமையைப் பாதுகாக்க ஏழை விவசாயிகள்மீது போலீஸை ஏவிவிடுவதுதான் காங்கிரஸ் ஜனநாயகம்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—"I do not object to hon. Members opposing me or levelling criticisms against us. But I would request that as far as possible they should confine their criticisms to the scope of the Bill. I would request them not to go far from it."

Tre Hon. Sri V. C. PALANISWAMI GOUNDER :—" எனது நண்பர்களாகிய எதிர்க் கட்சித் தலைவரும், உப-தலைவரும் பேசும்போழுது பல சந்தர்ப்பங்களில் என்னுடைய பெயரை இழுக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றுசொல்ல விரும்புகிறேன். செட்டிநாட்டு ராஜாவைப்போல நான் ஒரு ஜமீன்தாரும் அல்ல, ராமநாதபுரம் ராஜாவைப்போல எனக்கு ஜமீன்களும் இல்லை. நான் ஒரு சாதாரண விவசாயி என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்."

Sri V. MADANAGOPAL :—" ஸ்ரீ பழனிசாமிக் கவுண்டர் அவர்கள் சொல்லும்போது, 'செட்டிநாட்டு ராஜாவைப்போலவோ, ராமநாதபுரம் ராஜாவைப்போலவோ நான் ஜமீன்தார் அல்ல' என்று அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டதினால், எதிர்க்கட்சி உப-தலைவர் என்ன அபிப்பிராயத்தைக் கூறினார்களோ அதை கனம் மந்திரி அவர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்களா என்பது எனக்கு விளங்கவில்லை."

Sri M. KALYANASUNDRAM :—" கனம் சபா நாயகர் அவர்களே, Points of orderகளெல்லாம் தீர்ந்துவிட்டதென்று நினைக்கிறேன்." (சிரிப்பு.)

27th March 1954]

Mr. SPEAKER :—" நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். "

* **Sri M. KALYANASUNDRAM** :—" கனம் மந்திரி ஸ்ரீ வி. ஸி. பழனிசாமிக் கவுண்டர் அவர்கள் நான் சொன்னதைக் குறித்து ஏன் சங்கடப்படவேண்டும் ? அவர் பெரிய மில் முதலாளியாக இருக்கிறார் ; நிலமும் ஏராளமாக இருக்கிறது. முதலாளியாக இருப்பதும், நிலச் சொந்தகாரராக இருப்பதும், வெட்கப்படவேண்டிய விஷயமா ? தயவு செய்து மறைக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் எந்தத் தனி நபரையும் குற்றம் சாட்டவில்லை. இன்றைய சமூக அமைப்பை குறை கூறுகிறேன். கனம் ஸ்ரீ வி. ஸி. பழனிசாமிக் கவுண்டர் அவர்களோ, ராமநாதபுரம் ராஜா அவர்களோ காலக்போக்கில் மாறாமல் இருக்க முடியாது. மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏதோ நான் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டபொழுது அவர் வெட்கப்பட்டு உடனே பதில் சொல்லியிருக்கவேண்டியதில்லை என்று கூறவிரும்புகிறேன். காலத்திற்கேற்ப மாறத் தயாராக இருந்தால் வெட்கப்படவேண்டியதில்லை. உலகம் மாறினாலும் ' நான் மாறமாட்டேன் ' என்று உடும்புப் பிடியாக ஒட்டிக் கொண்டிருப்பவர்கள், வெட்கப்பட நேரும். வருத்தப்பட நேரும்.

" ஜனநாயகம் என்று சொல்லுகின்ற காலத்தில் அவர்கள் எதை ஜனநாயகம் என்று சொல்லுகின்றார்கள் என்றால் தொழிலாளிகள் கஷ்டப்பட்டு வேலைசெய்து, சிறுது போனஸ் கேட்டாலும், ஆட்குறைப்புக் கூடாது என்று அவர்கள் கேட்டால் அதற்காக அவர்களைப்பிடித்து சிறையில் போடவேண்டும் என்பதுதான் அவர்களுடைய ஜனநாயகமாக இருக்கிறது. ' அதிகாரம் முதலாளிகளிடம் இருக்கவேண்டும் ' என்பதைத்தான் ' ஜனநாயக உரிமை ' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அது ஜனநாயக உரிமை அல்ல. ஜனங்களைக் காப்பதற்காக அரசியல் சட்டத்தை உபயோகப்படுத்துவதுதான் உண்மையான ஜனநாயகம் ஆகும். அதுதான் எதிர்க்கட்சியினுடைய ஜனநாயகம். அத்தகைய ஜனநாயகத்தைதான் நாங்கள் பின்பற்றத் தயாராக இருக்கிறோம். அதற்காக நாங்கள் பெருமை கொள்ளுகிறோமே தவிர, வெட்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொண்டு கடைசியாக இந்த மசோதாவைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் இது முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று தான் கனம் ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

" அவர் இப்பொழுதாவது ஒரு விஷயத்தைச் செய்துவிட்டும் : தேர்தல் நடத்துவதென்றால் அதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும் இன்றைக்கு நாங்கள் இந்த மசோதாவை எதிர்க்கத்தான் போகின்றோம். ஒருவேளை சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய மெஜாரிட்டி பலத்தைக்கொண்டு வோட்டெடுத்து, இப்பொழுது ஜெயித்து விடலாம். ஆனால் அவர்கள் ஜனங்களை ஜெயித்துவிட முடியாது. தங்களுடைய மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு, இரண்டு நாள் மட்டுமே இருக்கக்கூடிய நேரத்தில், நிர்ப்பந்தப்படுத்தி துப்பாக்கி முனையில் இந்த மசோதாவை அவர்கள் நிறைவேற்றுவதை நாங்கள் விரும்பவில்லை. இது ஜனநாயகம் அல்ல என்பது எங்களுடைய அபிப்பிராயம்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" நாங்கள் உண்மையில் துப்பாக்கியை உபயோகப்படுத்துவது கிடையாது."

* **Sri M. KALYANASUNDRAM** :—" உங்கள் கையில் துப்பாக்கி இல்லை என்று ஏன் சொல்லுகிறீர்கள் ? இரண்டு நாட்களுக்கு முன்பு தானே துப்பாக்கிகள் எல்லாம் வாங்குவதற்காக நான்கு கோடி ரூபாய் வரையில் ' சாங்ஷன் ' செய்திருக்கிறோம்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" நீங்கள் கள்ளத்தனமாகத் தான் துப்பாக்கிகளை வைத்திருப்பீர்களே ஒழிய பகிரங்கமாக வைத்திருக்க மாட்டீர்களே."

[27th March 1954

SRI S. VADIVELU :—" நாங்கள் கள்ளத்தனமாக துப்பாக்கி வைத்திருப்போம் என்று கனம் மந்திரி அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் நிரூபிக்க முடியுமா ? "

* SRI M. KALYANASUNDRAM :—" பேச்சு வேகத்திலே மந்திரி அவரும் நானும் சில வார்த்தைகளை நேரிடையாகப் பரிமாறிக்கொண்டோம், தங்களைக் கவனிக்காமல். அதற்கு நீங்கள் வருத்தப்படக்கூடாது என்று கோட்டுக்கொள்ளுகிறேன். நேரமாகி விட்டது சீக்கிரமாக முடித்துக்கொள்ளுகிறேன். மந்திரி அவர்கள் சொன்ன விஷயத்தில் நான் புக விரும்பவில்லை. கனம் ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், 'இந்தத் தேர்தலானது ஒத்தி வைப்பதற்குக் மலையாள, தென் கன்னட, நீலகிரி ஜில்லாக்கள் **Monsoon** தான் காரணம் என்று சொன்னால், அந்த ஜில்லாக்களில் மே மாதத்திலேயே தேர்தலை நடத்தி முடித்து விடுங்கள்' என்பதுதான். நீலகிரி ஜில்லாவில் மே மாத்தில் நல்ல சீதோஷ்ணம் இருக்கக்கூடிய காலம். அதேபோல மலையாள தென் கன்னட ஜில்லாக்களிலும் மே மாதத்திலேயே தேர்தலை நடத்தி முடித்து விடுவது நல்லது.

" தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயிகளுக்கும், மிராசுதார்களுக்கும் தகராறு ஏற்பட்டு, விவசாயிகள் கூட்டம் போட்டால் ஸ்பெஷல் ஆர்ம் போலீஸ் அனுப்பப்படுகிறது. தந்திமேல் தந்தி பறக்கிறது. அதைப்போல இத்தேர்தல் சம்பந்தமாகக் கொஞ்சம் செலவானாலும் பரவாயில்லை. 'எப்படியாவது அந்த மூன்று ஜில்லாக்களில் மே மாதத்திற்குள்ளாகவும், தமிழ்நாட்டிலுள்ள மற்ற ஜில்லாக்களில் ஜூன் மாதத்திற்குள்ளாகவும் ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தலை நடத்தி முடித்துவிடுவோம்' என்ற இந்த நியாயமான கோரிக்கைக்கு சர்க்கார் இணங்குவதாக இருந்தால், அதற்கான வாக்குறுதியை கொடுக்கவேண்டும். இதற்குத் தகுந்த திருத்தத்தையும் கொண்டுவரவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் இந்த மசோதாவை கட்டாயமாக ஒப்புக்கொள்ள முடியாது. இந்த மசோதாவை நாங்கள் வன்மையாக எதிர்க்கத்தான் வேண்டியிருக்கும். ஆகவே, இந்த மசோதாவை எதிர்த்து சர்க்கார் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களும்கூட தயவுசெய்து ஓட்டுப்போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI K. RAJARAM :—" I first of all thank all the hon. Members who have taken part in the discussion for the interest they have shown in the local bodies. Sir, some of the members who spoke from the Opposition attributed some ulterior motives, namely, that the Government are bringing this amending Bill not to conduct elections but to go on postponing the same eternally and so on. Sir, let me submit that such an accusation is not correct. The hon. Member Sri K. T. Raju said that we could have brought this amendment in the last January session itself. I think the hon. Member has forgotten that I gave notice of this amending Bill on 8th of January. It was placed on the table of the House in the second week of January. But hon. Members did not want to continue the session at that time because they wanted to return to their home for Pongal. That is the cause of the delay. That is why this Bill is now brought before the House."

SRI P. RAMAMURTHI :—" போன பட்ஜட் கூட்டத்திலே ஜனவரி மாதம் 8-ம் தேதி அன்றே நோடீஸ் கொடுக்கப்பட்டது வாஸ்தவம்தான். ஆனால் பட்ஜட் செஷன் அப்பொழுதே முடியும் என்று அந்த நோடீஸ் கொடுக்கப்பட்டது. இரண்டாவது விஷயம் அப்படி கவர்ன்மெண்டு மசோதாவை நிறைவேற்றி பொங்கலுக்கு பிறகு அசெம்பிளி கூட்டத்தைக் கூட்டியிருக்கலாம்."

27th March 1954]

THE HON. SRI K. RAJARAM :—" Equally it is not correct to say that we have brought this amending Bill just two days before the term of the Special Officers expires and as such we have wantonly not given an opportunity to the Opposition to give due consideration to this Bill. The Bill has been before the hon. Members ever since the second week of January when it was laid on the table of the House. 10 30 p.m.

" Some hon. Members said that elections can be conducted in South Kanara, Malabar and the Nilgiris in the month of May itself. It is not possible to do so. There are some practical difficulties. According to the District Boards Act we have to publish the election rules. These rules were published on 25th February. They were ready for publication only then. We must then give six weeks' time to receive objections, if any, to the election rules. That means it will take till 15th of April. In the meanwhile some Special Officers have suggested certain amendments in respect of some constituencies. They are yet to be published. That may be published in the month of April, say, by about the 10th of April. Again we have to give notice to call for objections. After publication of the election notices, we will have to give 45 days' time for conducting the election. So hon. Members should see that at the earliest, if we issue notices on 1st of May, we can complete the elections at the end of June. It was our intention to conduct the elections before the beginning of July. We wanted to finish it before the end of June. It is our intention that before the North-East Monsoon sets in in Tamilnad, we must complete the elections in Tamilnad. That means we want to finish the elections, at any rate, before August. We are extending the date only in case of the West Coast districts and the Nilgiris district. One hon. Member has raised another objection with regard to the conduct of elections in South Kanara. He has said that elections in Malabar district could be conducted in September or October, but it will be neither easy nor convenient to conduct the elections in those months in South Kanara.

" So many difficulties are coming in the way of administrative matters. That is why I think we may be compelled to bring an amendment with regard to West Coast districts. But that does not mean we will prolong the elections for ever. If it is possible we will complete the elections in the month of September or October. But I cannot promise that. We will try our best to complete the elections in West Coast districts before November 1954. If at all we come with an amendment to postpone the elections in West Coast districts, it will be only on administrative grounds and on account of practical difficulties involved. It will not be for any other extraneous reason. We have already appointed Election Officers. They have taken charge and have begun their duties in the District Board offices. Separate rooms have been allotted to them and they have begun their work. Therefore, hon. Members should realize that we have already prepared the ground for conducting the elections as early as possible.

[Sri K. Rajaram] [27th March 1954

" One hon. Member remarked that mention of ' taluk boards ' need not have been made here at all. I agree to it. About a month ago, in reply to a question by Sri M. Narayana Kurup, I said that when this Bill seeking extension of term of Special Officers of district boards came up before the House, I could throw some light on the taluk boards, etc. That is why now when this Bill is brought before this House, I had mentioned something about the taluk boards. Let me inform the House that many of our panchayats also are experiencing several difficulties. That is why Government have decided to bring forward a comprehensive legislation. They have decided to appoint a High Level Committee. (An hon. Member : ' What is a High Level Committee? ') High Level Committee means a committee consisting of experienced officers and persons experienced in local bodies. (An hon. Member : ' Will their recommendations be binding? ') No; no recommendation of any committee is binding on us. They are only recommendatory.

" We will announce the names of the members of the committee very soon. That Committee will be entrusted with the work of going into all aspects of the problems cencerning the panchayat, taluk and district boards. One Member raised a point that the taluk boards were abolished in 1934. He asked why we should again bring in taluk boards. Let me inform that hon. Member that at the time, viz., in 1934, both the taluk and district boards were functioning. At that time district boards were having jurisdiction in places where taluk boards were also exercising control. So, there was some overlapping of functions. Therefore it was thought at that time that one of the boards might be abolished. So taluk boards were abolished at that time.

" We think the powers now concentrated in the hands of the District Boards must be decentralized. Government are now doing so many development works in villages. These works require some intensive supervision. If taluk boards were established they can have effective supervising powers over these works in the villages. That is one reason for the creation of taluk boards. But the Committee will go into this question soon. I think it will take five to six months for the Committee to study all the problems and submit its report to Government. Government will then consider the Committee's recommendations and bring in necessary legislation.

" The work of the Cabinet has of late increased very much. Ever since I took up office, that is, from 9th of October 1953, I was trying to bring before the Cabinet the reports of the Kuttikrishna Menon Committee regarding district boards, of which the hon. Member Sri V. K. Palaniswami Gounder was also a member. I was also trying to bring before the Cabinet the report of the Rathnasabapathy Mudaliar Committee. But so many pressing problems were there to be considered by the Cabinet. The pressing problems connected with the separation of Andhra from us were continuously engaging the attention of the Cabinet. That is why the elections to district boards could not be held earlier. Therefore

27th March 1954] [Sri K. Rajaram]

let not any hon. Member attribute any political motive to the Government in bringing in this legislation for extending the term of Special Officers. As I said earlier, the report of the High Level Committee may reach us after six months. We will have to consider the creation of taluk boards only after receiving its recommendations.

" Some hon. Members complained against the Personal Assistants to Special Officers. So far I have not received even a single complaint against any Special Officer. It has been complained that the Personal Assistants to some Special Officers were not paying proper attention to the district boards' roads. It has also been complained that the Personal Assistants are anxious to prevent democratic bodies from coming into office earlier. The intention of the hon. Members on the other side, who oppose this Bill, is to prevent elections from being held in the near future. The difficulty that I experience and the Government are experiencing is this. Sir, even complaints regarding a teacher or a compounder are being sent directly to me. I am very anxious to avoid all these things. Because there is no elected democratic body to deal with even small matters, people are sending petitions direct to the Minister. I am forwarding those petitions to the Special Officers concerned. We are taking so much responsibility. I must tell the hon. Members that the Government are sincere when they say that the elections will be held as early as possible. Nobody need have any suspicion in this matter. We will try our best to complete the elections as far as the districts in Tamilnad are concerned before June, July or August 1954. Now, the time-limit is being extended up to 31st October 1954. Sir, after all, this is a very simple Bill and its scope is very limited. It has already been passed by the other House. The amendment of the Hon. the Deputy Leader of the Opposition is that the Bill may be referred to a Select Committee. It is not possible. After all, there is nothing to be gone into by a Select Committee. The Bill consists of only two clauses. I therefore request the hon. Member to withdraw his amendment." 10-40 p.m.

SRI M. KALYANASUNDRAM :—" என்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்க முடியாததற்கு நான் வருத்தப்படுகிறேன்."

MR. SPEAKER :—" I will now put the amendment of the hon. Member Sri M. Kalyanasundaram to the vote of the House. The question is—

' That the Madras District Boards (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 4 of 1954), as passed by the Council, be referred to a Select Committee.' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" Is the hon. Member pressing for a division? "

[27th March 1954

SRI M. KALYANASUNDRAM :—" I am not pressing my amendment for a division. But I will press the main motion for a division."

MR. SPEAKER :—" I will now put the main motion to the vote of the House. The question is—

' That the Madras District Boards (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 4 of 1954), as passed by the Legislative Council and transmitted to the Legislative Assembly, be taken into consideration.' "

The motion was put and carried.

A poll was demanded and the House divided thus :

Ayes—84.

Sri T. Anantha Pai.
,, A. Appu.
,, R. S. Arumugam.
,, S. Arumugam.
,, S. R. Arumugam.
,, V. Arumugam.
,, V. Balakrishnan.
,, B. Bhakthavatsalu Naidu.
,, K. H. Bomman.
,, Chinnaswami Naidu.
,, C. Chinnathambi Thevar.
,, T. P. Elumalai.
,, T. Ganapathy.
,, N. Gopala Menon.
,, G. Govin an.
,, V. Govindaswamy Naidu.
,, K. Ishwara.
,, M. Jagannathan.
,, S. Jayarama Reddiyar.
,, T. M. Kaliannan.
,, P. G. Karuthiruman.
,, Kempai Gounder.
,, P. S. Krishnaswamy Ayyangar.
,, V. Krishnaswamy Padayachi.
,, R Krishnaswamy Naidu
,, Kunhi Muhamed Shafee.
,, R. Kuppuswamy.
The Hon. Sri K. P. Kuttikrishnan Nair.
Sri S. Lakshmana Gounder.
,, N Mahalingam.
The Hon. Sri M. A. Manickavelu Naicker.
Sri P. G. Manickam.
,, Manjaya Shetty.
,, Mahamed Salih Maraikayar.
,, N. Mounaguruswamy Naidu.
,, M. Muni Reddy.
,, M. S. Muniswamy Pillay.
,, C. Muthiah Pillay.
,, V. Muthu.
,, Muthukumaraswamy.
,, P. S. Nalla Gounder.
,, B. K. Nallasamy.
Sri R. M. Palaniyappan.
The Hon. Sri V.C. Palaniswami Gounder.
Sri V. K. Palanisami Gounder.
,, S. Panchaksharam.
,, B. Parameswaran.
,, K. Parthasarathy.
,, M. P. Periasami.
,, N. Rajagopal.
,, C. Rajam Ramasami.
The Hon. Sri K. Rajaram.
Sri T. K. Rama.
,, M. R. Ramachandran.
,, A. Ramachandra Reddiar.
,, N. Ramakrishna Ayyar.
,, N. C. Ramaswamy Kander.
,, V. K. Ramaswamy Mudaliar.
,, S. Ramaswamy Naidu.
,, P. S. Rangaswamy Naidu.
,, J. L. P. Rocha Victoria.
,, A. M. Sambandam.
,, A. Sambasivam.
,, E. K. Sankara Varma Raja.
,, T. V. Sannasi.
,, P, Selvaraj.
,, M. G, Shanker.
The Hon. Raja Sri (Raja of Ramnad) Shunmuga Rajeswara Sethupathi.
Sri V. S. Sivaprakasam.
,, S. Somayajulu.
,, A. S. Subbaraj.
The Hon. Sri C. Subramaniam.
Sri R. V. Swaminathan.
,, Thiagaraja Pillai.
,, Thanakarasami Thever.
,, P. K. Thirumurthi.
,, P. Urkavalan.
,, B. Vaikunta Baliga.
,, A. Vaikuntam.
,, T. R. Varadan.
,, O. Venkatasubba Reddi.
,, Venkatramana Gowda.
The Hon. Sri K. Venkataswamy Naidu.
Sri Virupakshayya.

27th March 1954]

Noes—43.

Sri S. T. Adityan.
,, K. Aranganathan.
,, T. S. Arthanari.
,, A. Ayyaru.
,, P. K. Gopalakrishnan.
,, K. P. Gopalan.
,, K. C. Gopalan Unni.
,, M. Kalyanasundaram.
,, C. Kandasami.
,, P. Kandasami Gounder,
,, C. H. Kanaran.
,, S. S. Kolkebail.
,, D. Krisnamurthi Gounder.
,, R. Krishnan.
,, E. T. Kunhan.
,, C. Kunhirama Kurup.
,, V. Madanagopal.
,, K. Madhavan Nambiar.
,, K. Moidu.
,, Mookiah Thevar.
,, A. Muthuswami.
Sri M. Narayana Kurup.
,, M. Narayana Nambiar.
,, T. C. Narayanan Nambiar.
,, S. Packirisami Pillai.
,, N. K. Palanisami.
,, S. Radhakrishnan.
,, P. B. K. Rajachidambaram.
,, K. T. Raju.
,, S. Ramalingam.
,, P. Ramamurthi.
,, K. V. Ramasamy.
,, R. Rangasamy Gounder.
,, P. Rangasamy Reddiar.
,, P. Rathinaswami Pillai.
,, A. Senapathy Gounder.
,, N. Sivaraj.
,, K. T. Sridharan.
,, A. K. Subbiah.
,, M. P. Subramaniam.
,, P. S. Thangavelu.
,, Vadivelu.
,, P. Venkatesha Sholagar.

Neutral—Nil.

Ayes—84; Noes—43; Neutral—*Nil.*

The motion was carried.

MR. SPEAKER :—" Before we proceed to the next stage in the Bill, I wish to explain to the House certain important matters regarding amendments. An amendment to a Bill should be within the scope of the Bill. We judge the scope of the Bill from its title, its preamble and the statement of objects and reasons appended to the Bill. Any amendment, which is beyond the scope of the Bill, which seeks to embody in the Bill principles which are foreign to the Bill and which are not cognate to it or are outside its declared intentions is out of order. The Bill before us is a simple one. The object of the Bill is to extend the life of the Special Officers of the district boards from 31st March 1954 to 31st October 1954."

SRI P. RAMAMURTHI :—" The life of the Special Officers may go up to 60 or 70 years! " (Laughter.)

MR. SPEAKER :—" I must tell the House that any amendment which seeks to alter the date is perfectly in order. But certain other amendments which some hon. Members have given notice of are all out of order. For instance, the hon. Member Sri S. Ramalingam has given notice of several amendments the object of which is to abolish all the district boards. We are not now concerned with the abolition of the district boards. It is not the intention of the Bill to abolish the district boards. The object of another amendment is the introduction of taluk boards. In the statement of objects and reasons it is casually mentioned that the Government will take steps to introduce legislation for the establishment of the

taluk boards. The Government may bring a Bill to that effect either to-morrow or some time later. When they bring that Bill, the hon. Member can move his amendments. Most of the hon. Members are new and they must know what amendments they can suggest."

The discussion of the Bill, clause by clause, was then taken up.

Clause 2.

MR. SPEAKER :—" Motion moved—

' That Clause 2 do stand part of the Bill.'

11 p.m. " All the amendments to this clause given notice of by Sri S. Ramalingam, except one, are out of order. But I keep an open mind. If the hon. Member convinces me that they are in order, I have no objection to admit them."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் ஸ்ரீ ராமலிங்கம் கொடுத்த திருத்தங்களெல்லாம் Out of order இல்லை. அதில் சில திருத்தங்கள் மந்திரி அவர்களின் பிரசங்கத்தில் எவ்வாறு சுற்றி வளைந்து பேசுகிறாரோ அவ்வாறு இருக்கலாம், அதனால் Out of order என்று சொல்லிவிட முடியாது."

MR. SPEAKER :—" All the amendments, except one, are clearly out of order.

" Sri N. K. Palanisami has given notice of an amendment proposing to omit item (2). If item (2) is omitted, then the whole Bill goes and there is no point in keeping the Bill. So that amendment also is out of order."

SRI C. KANDASAMY :—" Sir, I move—

' *In item* (2), *for the figures, letters and word* " 31*st October* 1954," substitute *the figures, letters and word* " 30*th April* 1954 ".' "

SRI M. KALYANASUNDRAM :—" I second the amendment."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move—

'*In item* (2), for *the figures, letters and word* " 31*st October* 1954," substitute *the figures, letters and word* " 31*st May* 1954 ".' "

SRI P. RAMAMURTHI :—" I second the amendment."

SRI S. RAMALINGAM :—" Sir, I move—

' *In item* (2), for *the figures, letters and word* " 31*st October* 1954," substitute *the figures, letters and word* " 30*th June* 1954 ".' "

SRI K. P. GOPALAN :—" I second the amendment."

27th March 1954]

SRI S. S. KOLKEBAIL :—" Sir, I move—

'*In item* (2), *for the figures, letters and word* " 31*st October* 1954," substitute *the figures, letters and word* " 31*st January* 1955 ".' "

SRI K. T. SREEDHARAN :—" I second the amendment."

MR. SPEAKER :—" Clause 2 and all the four amendments to it are before the House for discussion."

SRI C. KANDASAMY :—" சபா நாயகர் அவர்களே, என் னுடைய திருத்தத்தின் நோக்கம் என்னவென்றால் ஜில்லா போர்டு தேர்தலை நடத்துவதற்கு ஒரு மாத காலம் அவகாசம் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான். அதாவது எப்ரல் மாதம் 30-ம் தேதிக் குள் தேர்தலை நடத்த வேண்டும். இந்த மசோதாபற்றி கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி பேசும்போது வேறே வழியில்லாமல் இந்த மசோதாவைக் கொண்டுவந்து அடுத்த அக்டோபர் மாதத்திற்குள் தேர்தலை நீடித்து இருப்பதாகச் சொன்னார். உண்மையாகவே அவர்கள் அவ்வாறு நினைத்து இருந்தால் இந்த மசோதாவை இம்மாதம் 27-ம் தேதியன்று ஏன் கொண்டு வந்தார்? இதற்கு முன்னமேயே இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கவேண்டும். என்னுடைய திருத்தத்திலும் பிச்சை கொடுக்கின்ற முறையில் ஒரு மாத அவகாசம் கொடுக்கப்பட்டது. இம் மாதிரி அரசாங்கம் ஒவ்வொரு தடவையும் கடைசி காலத்தில் இந்த மசோதாவைக் கொண்டுவருவது எந்த அளவுக்கு ஜனநாயகம் முன் னேறிக்கொண்டு இருக்கிறது, அரசாங்கமும் இதற்கு எந்த அளவு மதிப்பு கொடுக்கிறது என்பதைக் காட்டுகிறது. 11-03 p.m.

" உண்மையில் கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி மறுபடியும் இம் மாதிரி தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஒரு மசோதாவைக் கொண்டுவர மாட்டார் என்று நிச்சயமில்லை. கனம் மந்திரி அவர்கள் தங்களுடைய பிரசங்கத்தில் seasonal condition ஜனவரி-பிப்ரவரி மாதங் களில் சரியானபடி இல்லாததால் அம்மாதங்களில் தேர்தலை நடத்த முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆனால் மக்கள் மழைக்கால மாக இருந்தாலும் சரி, பனிக்காலமாக இருந்தாலும் சரி தேர்தலை நடத்தியே தீரவேண்டும் என்ற உறுதியுடன் சவால் கொடுக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். இனிமேல் சர்க்கார் பஞ்சாங்கம் பார்க்க வேண்டும். இம்மாதிரி மசோதாவைக் கொண்டு வந்து இருப்பது இது தான் முதல் தடவை அல்ல, மூன்றாவது தடவையாக இம்மாதிரி கொண்டுவந்து இருக்கிறார்கள். இவ்வாறு செய்வதனால் இந்த சபைக்கு என்ன மதிப்பு இருக்கிறது? ஏற்கெனவே pass செய்த மசோதாவை இதுவரையில் நிறைவேற்றாமல், அதை நீடிப்பதற்கு வேறொரு மசோதா இன்று கொண்டுவந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்று இம்மாதிரி இன்னும் ஆறு மாத காலம் அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்பது இந்த சட்டசபைக்கு மதிப்பு கொடுக்கவில்லை. இந்தப் போக்கு ரொம்ப ஆபத்தானது. அவர்கள் சதாகாலமும் பேசிக் கொண்டிருக்கிற ஜனநாயகத்தின்மீது ஏதாவது கொஞ்சம் நம்பிக்கை மிச்சமிருந்தால் அது இந்த மசோதாவினால் சிதறடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

SRI K. T. RAJU :—" கனம் சபாநாயகர் அவர்களே, இன்னும் எவ்வளவு நேரம் சட்டசபைக்கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—" சட்ட சபைக்கூட்டம் எவ்வளவு நேரம் நடை பெறும் எப்பொழுது கலையும் என்பது எனக்குத்தெரியாது. இன்னும்

சில நிமிஷம் நடைபெறலாம் அல்லது உடனே முடியலாம். ஆதலால் இனி நடக்கப்போவதை சொல்வதற்கு நான் ஜோசியனல்ல ; எனக்கு ஜோசியம் தெரியாது !" (சிரிப்பு.)

* SRI T. C. NARAYANAN NAMBIAR :—" The argument put forward by the Hon. Minister that in Malabar there would be monsoon rains in June and that therefore elections should be postponed is incorrect. In October, when *navarai* harvest usually takes place, there used to be rains. Therefore in no circumstances should the election be postponed to October or September."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Then the hon. Member can support Sri Kolkebail's amendment."

* SRI T. C. NARAYANAN NAMBIAR :—" It is not a question of supporting Sri Kolkebail's amendment. My amendment proposes the other alternative of advancing the elections to May 1954.

" Elections to district boards were held in September 1949 and we know the consequences. The elections were held deliberately during that month by the Congress Government knowing full well that the masses would not go to the polling booth and that therefore the Communist Party could be defeated. It is with the same intention that the Government now want to conduct the elections in September or October. The month of May will be very convenient for holding elections and I hope the Hon. Minister will see his way to accept my amendment."

SRI P. K. GOPALAKRISHNAN :—" Sir, I, along with Sri N. K. Palanisami and Sri C. H. Kanaran, had given notice of an amendment. But you have ruled it out of order. Therefore I am supporting the amendment of Sri T. C. Narayanan Nambiar. Elections to district boards should be held as early as possible, and the earliest time by which they could be held is 31st May 1954, because there are two months ahead, and Sri T. C. Narayanan Nambiar's amendment is to that effect. In reply to the debate in the first reading stage of the Bill, the Hon. Minister said that no complaint had been received by him against the Special Officers. I have several complaints to make, but I do not want to mention them at this late hour."

THE HON. SRI K. RAJARAM :—" The hon. Member may put them in writing and send them to me."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" They will not be relevant also."

SRI P. K. GOPALAKRISHNAN :—" They will be relevant becauses they support the case for restricting the extension of the term of office of the Special Officers to as short a period as possible.

" If the Bill is accepted, the term of the Special Officers will be extended till 31st October 1954. I want that their term of

27th March 1954] [Sri P. K. Gopalakrishnan]

office should be extended only till 31st May and the elections conducted before that date. Monsoon sets in Malabar by 1st of June and not by 15th of May."

* SRI S. S. KOLKEBAIL :—"' Sir, we have already lost the main amendment. So, there is no use of our waxing eloquent on this Bill itself. But, if the term of the Special Officers is to be extended at all and if the elections to the district boards are to be held before 31st October 1954, it will be very inconvenient especially for South Kanara, because that is the month in which there will be rain in our parts. But, anyway, the month of May is not at all convenient on account of extreme heat and also on account of certain legal difficulties as pointed out by the Hon. Minister for Local Administration. So, the other alternative is to go to either November or December. Therefore, I have suggested in my amendment for the extension of time till 31st January 1955. There is no use of my saying now that the term of the Special Officers should not be extended, because on that issue, we have already lost. The point is, if we are going to extend the term, let it be extended up to 31st January 1955. Sir, with these few words, I request that my amendment may be accepted." 11-10 p.m.

SRI P. RAMAMURTHI :—"கனம் சபாநாயகர் அவர்களே, பேசி ஒன்றும் பிரயோசனமிருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் நான் பேச வில்லை."

THE HON. SRI K. RAJARAM :—" Sir, none of these amendments is acceptable to the Government. I have already stated the reasons in my speech. It is not practicable to conduct the elections either in April or in May. At the earliest, we can start the elections in May. But the polling dates can be fixed only after the 20th of June. We cannot hold elections before that. Therefore, I submit, Sir, that none of these amendments is acceptable."

MR. SPEAKER :—" I shall put the amendment of Sri C. Kandasamy to the vote of the House. The question is—

' In item (2), *for* the figures, letters and word " 31st October 1954 ", *substitute* the figures, letters and word " 30th April 1954 ".' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" I shall now put the amendment of Sri T. C. Narayanan Nambiar to the vote of the House. The question is—

' In item (2), *for* the figures, letters and word " 31st October 1954 ", *substitute* the figures, letters and word " 31st May 1954 ".' "

The amendment was put and lost.

[27th March 1954

MR. SPEAKER :—" I shall now put the amendment of Sri S. Ramalingam to the vote of the House. The question is—

' In item (2), *for* the figures, letters and word " 31st October 1954 ", *substitute* the figures, letters and word " 30th June 1954 ".' "

The amendment was put and lost.

The following amendment of Sri S. S. Kolkebail was by leave withdrawn :—

' In item (2), *for* the figures, letters and words " 31st October 1954 ", *substitute* the figures, letters and word " 31st January 1955 ".' "

MR. SPEAKER :—" The following amendment of Sri S. Ramalingam are out of order :—

' *After* item (1), *insert* the following as item (2) and *re-number* the subsequent items :—

" (2) After the first paragraph of the Preamble, the following new paragraph shall be inserted, namely :

' Whereas a scheme for the decentralization of the function of the district boards has been under consideration and to introduce legislation for the establishment of taluk boards to replace district boards ' ; " '

' *Re-number* the existing item (3) as item (3) (ii) and *insert* the following as item (3) (i) :—

" (3) (i), Sections 2 (1) (i) and 2 (1) (ii) shall be emitted and the figure ' ' (iii) ' at the beginning of section 2 (1) (iii) shall be omitted." '

' *Insert* the following as clause 2 (3) (iii) :—

' In section 2 (1) (iii), after the words " Newly elected members ", the words ' of the taluk boards, shall be inserted.'

' *For* the existing Preamble, *substitute* the following :—

" Whereas it is expedient to amend the Madras District Boards (Amendment) Act, 1953 (Madras Act V of 1953) :

Whereas a scheme for the decentralization of the function of the district boards has been under consideration and to introduce legislation for the establishment of taluk boards to replace district boards ; and

Whereas it is considered necessary to extend the term of office of the Special Officers for the District Boards till the newly elected members of the taluk boards will come into office ; it is hereby enacted as follows :—".'

Clauses 2, 1 and the Preamble were put and carried.

MR. SPEAKER :—" The Hon. Minister will now move that the Bill be passed into law."

THE HON. SRI K. RAJARAM :—" Sir, I move—

' *That the Bill be passed into law.*' "

MR. SPEAKER :—" Motion moved—

' That the Madras District Boards (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 4 of 1954), be passed into law.' "

27th March 1954]

Sri S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, அக்டோபர் மாதம் 31-ம் தேதிவரை ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீசரின் ஆயுளை நீடித்து சட்டம் இயற்றியிருக்கிறோம். இதே மாதிரி இதற்கு முன்பு ஸ்பெஷல் ஆபீசர்களை நியமிக்க சட்டம் இயற்றப்பட்ட போது கனம் மந்திரி அவர்கள் குறித்த காலத்திற்குள் ஜில்லா போர்டு தேர்தலை நடத்திவிடுவதாக சொன்னார். இப்பொழுது ஜில்லா போர்டு தேர்தல் நடத்துவதற்கு 7 மாத அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் நேரடியாக தாலூகா போர்டு தேர்தலையே நடத்துவதற்கு முயற்சி செய்து அதற்கான சட்டத்தை சபை முன்பு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மசோதா பிப்ரவரி மாதம் 15-ம் தேதி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது கனம் மந்திரி அவர்கள் ஜூன் 22-ம் தேதிக்குள் தேர்தலை நடத்தமுடியாது என்று கூறுகிறார். இந்த மசோதா பிரசுரிக்கப்பட்டபொழுது தேர்தல் நடத்தவேண்டுமென்ற எண்ணம் சர்க்காருக்கு இருந்திருப்பதாகத் தோன்றவில்லை. interruption எப்படியிருந்தபோதிலும், நேரடியாக தாலூகா போர்டு தேர்தலையே நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கனம் மந்திரி அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்." 11-20 p.m.

Sri P. B. K. RAJACHIDAMBARAM :—" தலைவர் அவர்களே, இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்றியதற்காக கனம் அமைச்சர் அவர்களை பாராட்டுவதா, அல்லது அவர்களுக்காக பரிதாபப் படுவதா என்பதே தெரியவில்லை. ஏனென்றால், நீண்டகாலமாக ஸ்தல ஸ்தாபன ஆட்சியில் அனுபவம்பெற்று, அமைச்சராக வந்தபிறகு காங்கிரஸின் அடிப்படை கொள்கையும் நாட்டின் தந்தையென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் காந்தி அடிகளின் தத்துவத்தையும் கொண்டு, ஜில்லா போர்டு நிர்வாகத்தை decentralize செய்து தாலூகா போர்டுகள் அமைக்கவேண்டுமென்ற எண்ணத்தை இந்தச் சபையிலும் வெளியிலும் கனம் மந்திரி அவர்கள் வெளியிட்டார். அதற்கு அவகாசம் வேண்டுமென்று, இந்த நள்ளிரவில் இந்த மசோதாவை சட்டமாக இயற்றியதற்கு கனம் மந்திரி அவர்களுக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தப் பக்கத்திலிருக்கும் கனம் மெம்பர் சொல்லியது போல் அவர் தன்னுடைய எண்ணத்தை இந்த 7 மாத அவகாசத்துக்குள் நிறைவேற்ற வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுதிருக்கும் அமைச்சர்களே பதவியில் நீடித்திருப்பார்களா என்ற சந்தேகம் பத்திரிகை வாயிலாகத் தோன்றுகிறது. கனம் மந்திரி அவர்கள் பதவியில் நீடித்து இந்தச் சபையில் அவருக்கு தொடர்ந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தால் அவரே இந்த 7 மாத அவகாசத்துக்குள் தாலூகா போர்டு தேர்தலையே நடத்தவேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஏற்கனவே ஸ்தல ஸ்தாபனங்கள் பணமுடையால் கஷ்டப்படுகின்றன. ஆகையால் தாலூகா போர்டு தேர்தலையே நேரடியாக நடத்தினால் அனாவசியமான செலவைத் தவிர்க்கலாம். ஒரு சமயம் கனம் மந்திரி அவர்கள் தொடர்ந்து பதவியில் நீடிக்க முடியாவிட்டால், அவருக்குப் பின்னால் வரும் மந்திரியிடமாவது இந்த நல்லகாரியத்தை தொடர்ந்து செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமாறு புத்திமதி கூறிவிட்டுச் செல்லவேண்டும். எனவே, கனம் மந்திரி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும் அனுதாபத்தையும் சேர்ந்து ஒருமுகமாக தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்." (சிரிப்பு.) 11-22 p.m.

Sri P. RAMAMURTHI :—" கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மசோதா இப்பொழுது சட்டமாகப்போகிறது. எதிர்ப்புகள் இருந்த போதிலும் அவைகளை சமாளித்து இந்த மசோதா இப்பொழுது சட்டமாகப் போகிறது. இந்த சந்தர்ப்பத்தில் இரண்டொரு விஷயங்களை மட்டும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்பொழுது கொடுக்கப்பட்ட வாக்குறுதி அதாவது " ஜூன் மாத முடிவிற்குள் தமிழ் நாடு சம்பந்தப்பட்ட மட்டில் தேர்தலை நடத்தி விட முடியும்,' என்று கொடுத்த வாக்குறுதியை

சர்க்கார் நிறைவேற்றியாக வேண்டும். ஜூன் இறுதிக்குள் முடிப்பது சாத்தியம் என்றும் கூறப்பட்டது. சாத்தியமானதைச் செய்வதில் தயக்கம் ஏற்படுவதற்குக் காரணம் இல்லை. அதற்குள்ளாகவே அதை முடித்து விடவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

"இரண்டாவதாக, தாலூகா போர்டு சம்பந்தமாக பேசப்பட்டிருக்கிறது. தாலூகா போர்டு அமைப்பதற்கான மசோதாவைக் கொண்டுவரப்போகிறார்கள் என்பது முக்கியமல்ல. தாலூகா போர்டுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் என்ன உரிமைகளை வழங்கப் போகிறார்கள் என்பதுதான் முக்கியமான கேள்வி. அவைகளுக்கு உரிமை இல்லாமல், அதிகாரம் இல்லாமல் இருக்கக்கூடாது. தாலூகா போர்டு ஏற்பட்டாலும், ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்பட்டாலும் ஸ்பெஷல் ஆபீசருக்கு அதிகாரம் இல்லாமல் எல்லா விதமான அதிகாரங்களையும் அந்தந்த போர்டுகளுக்கே வழங்கப்படவேண்டும். எக்சிகியூடிவ் ஆபீசருக்கும் சர்க்காருக்கும் நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ளாமல் உண்மையாகவே போர்டுகளுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும். அதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும். இதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இதை மந்திரி அவர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

THE HON. SRI K. RAJARAM :—" Sir, I have nothing more to add to what I have already stated on this Bill. I thank all the hon. Members and you, Sir, for being present till midnight in order to pass this Bill. We have to pass this Bill before the 31st of March and hence we have had to sit till midnight to-day. I once again thank all the hon. Members and you, Sir."

MR. SPEAKER :—" The question is—

'That the Madras District Boards (Amendment) Bill, 1954 (L.C. Bill No. 4 of 1954), be passed into law.' "

The motion was put and carried and the Bill was passed into law.

MR. SPEAKER :—" The House will now adjourn and meet again at 2-30 p.m. on Monday, the 29th March 1954."

The House then adjourned.

X.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

[a] 1. *The Hindu Non-Conforming Marriages (Registration) Bill*, 1954 (*L.C. Bill No.* 5 *of* 1954) (*as passed by the Council*).

[a] 2. *The Madras Suppression of Immoral Traffic (Amendment) Bill*, 1954 (*L.C. Bill No.* 6 *of* 1954) (*as passed by the Council*).

---

[a] **Laid on the table of the House on 26th March 1954.**